
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்



# சாட்சியம்

வெளியீடு 01 · மார்ச் 2017



## கருமலையூற்று காணி மீட்பு

தொடர்ந்து சாட்சியம் உரைப்போம் - விரைந்து தடைகளை உடைப்போம்


# மணியோசை

இந்த விகாரையை
சந்ததி சந்ததியாய்
பாதுகாத்தவர்கள் நாங்களே!
பூ வைத்துப் பூசிக்காமல் அதன்
புனிதத்தைக் கூட்டியதும் நாங்களே!

சிறுவர்களாய் இருக்கையில்
இந்த மணியை
இயக்கி மகிழ்ந்ததும்
நாங்களே!

கந்தன் வெளியைக் கடந்து வந்து
காதுகளில் விழுந்த ஒலி
மாடுகளை மேய்ப்பதற்கு
வழிகாட்டி இருந்த ஒலி
பள்ளாக் காட்டையும்
பரவி எழுந்த ஒலி
இன்றிவ்விதமாய்
ஏன் மாறி ஒலிக்கிறது?

விகாரையும்
விகாரைக்கருகிலுள்ள
குளங்களும்
குளங்களுக்கருகேயுள்ள
குப்பைகளும் அங்கு வரும்
நாய்களும் புனித மெனில்
நாம் மட்டும் அசுசிகளா?



எம்.எச்.எம். அஷ்ரப்

# சாட்சியம்

மாதாந்த இதழ்

■ இதழ் 01 ■ மார்ச் 2017

**ஆலோசகர்**
டாக்டர் ஏ.ஆர்.ஏ. ஹபீஸ்

**நிர்வாக ஆசிரியர்**
ஏ.ஆர்.ஏ. ஹஸீர்

**பிரதம ஆசிரியர்**
நவாஸ் சௌபி

**உதவி ஆசிரியர்கள்**
பிறவ்ஸ் முஹம்மட்
ஏ.ஆர்.எம். பர்வீன்

**படங்கள்**
ஷபீக் ஹுசைன்

**வடிவமைப்பு**
Dharussalam Graphic Desk

**வெளியீடு**

'புதிய வெளிச்சங்கள்' வெளியீட்டகம்
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்
51, வொக்ஷோல் லேன், கொழும்பு 02



**தொடர்புகளுக்கு**

| | |
|---|---|
| Telephone | : 011 243 67 52 |
| Hotline | : 077 640 12 96 |
| Fax | : 011 239 66 99 |
| Email | : saatchiyam@gmail.com |
| Website | : www.slmc.lk |


## சாட்சியத்தின் பக்கங்கள்


■ 27ஆவது பேராளர் மாநாடு — 03 - 06

■ பாராளுமன்றத்தில் முஸ்லிம் காங்கிரஸ்
- கருமலையூற்று பள்ளிக் காணி மீட்பு... — 07

■ இஸ்லாமிய சொற்பொழிவுத் தொடர்
- வியாபாரத்தின் வெற்றியை எவ்வாறு தீர்மானிப்பது — 08

■ முஸ்லிம்களின் காணிப் பிரச்சினை... — 09 - 12

■ மாகாணசபையில் முஸ்லிம் காங்கிரஸ்
- டெங்கு நோய் தனிநபர் பிரேரணை — 13

■ அபிவிருத்தியில் அடையாளப்படுத்தப்படாத... — 14 - 18

■ அபிவிருத்திப் பாதையில் முஸ்லிம் காங்கிரஸ்
- மார்ச் மாத அபிவிருத்திப் பணிகள் — 19 - 26

■ பசுமைப் புரட்சி — 27 - 28

■ பட்டதாரிகளின் பிரச்சினைக்கு தீர்வுகாண முஸ்தீபு — 29

■ நிகழ்வுகளின் சாட்சியம் : மார்ச் 2017 — 30 - 37

■ மக்கள் சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸ்
- மார்ச் மாத சந்திப்புகள் — 38 - 42

■ எமது பார்வையுடன் வீட்டுக்கு வீடு மரம் — 43 - 44

■ பிரதிநிதிகள் சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸ்
- கனேடிய தூதுக்குழு சந்திப்பு — 45
- உலமா சபை — 46 - 47
- UNFPA பிரதிநிதிகள் சந்திப்பு — 48

■ 'யொவுன்புர' நிகழ்வில் முதலமைச்சர் — 49

■ அனுராதபுர விஜயமும் மீளெழுச்சி பெறும் கட்சியும் — 50 - 53

■ காணிப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சிகள்... — 54 - 58

■ பொதுக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸின் குரல்
- கோடாரிக்காம்புகளுக்கு பதில் சொல்லும்... — 59 - 60

# முஸ்லிம் காங்கிரஸ் மீதான எமது சாட்சியம்

முஸ்லிம் அரசியலின் பூர்வீகக் கட்சியாக அடையாளம் பெற்றிருக்கின்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் சமூகத்திற்கான அரசியலைச் செய்கின்ற தார்மீகப் பொறுப்பினை தன்னகத்தே சுமந்திருக்கின்றது.

இதற்கமைய பெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃப் தூரநோக்கோடு உருவாக்கிய சிந்தனைப் பாதையும் அவரது தியாகமும் இக்கட்சியின் கொள்கைப் பாதையாக வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன.

அதே பாதையில் தொடர்ந்தும் பயணித்துச் செல்கின்ற தார்மீகப் பொறுப்புடன் இன்றுள்ள தலைவர் ரவூப் ஹக்கீம், பெரும் தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் ஒருமித்த சிந்தனையோடும் அதற்கான சமூகப் பொறுப்போடும் தன்னை அர்ப்பணித்து செயற்பட்டு வருகின்றார்.

சமகால தேசிய அரசியல் போக்குகள், பேரினவாத அச்சுறுத்தல்கள் மற்றும் முஸ்லிம் சமூகத்திற்குள் தோன்றிய வேறு சிறு கட்சிகளின் சில்லறை அரசியல் வியாபாரங்கள் என்று, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் அதன் தலைமைக்கும் பல சதிவலைகள் பின்னுகின்ற சவால்களும் எதிர்ப்புகளும் கூடியிருக்கின்ற மிகவும் ஆபத்தான ஒரு காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம்.

இதன்படி இன்று சமூக வலைத் தளங்களில் குறிப்பாக முகநூல் பக்கங்களில் தலைமைக்கும் கட்சிக்கும் எதிராக பல்வேறுவிதமான பொய்களையும் அபாண்டங்களையும் உருவாக்கி அவற்றை ஊதிப் பெரிதுபடுத்தி பிரசாரங்களை செய்கின்ற கூலிப் படைகள் செயற்படுகின்றன. இதன்பின்னணியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற பேரியக்கத்தை சிதைக்கும் சதிகள் சர்வதேசம் வரை நீண்டு சென்று பல திட்டங்களையும் தீட்டுகின்றன.

இத்தகைய நெருக்கடியான ஒரு காலகட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருமுகப்படுத்தப்பட்ட ஒரு ஊடக வலையமைப்பை நிறுவியிருக்கிறது. இதன் மூலம் கட்சியின் சகல நடவடிக்கைகளையும் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய ஒரு செய்தி ஊடகமாக 'சாட்சியம்' உயிர்ப்பு பெற்றிருக்கிறது. மாதாந்தம் வெளியிடப்படும் இச்சஞ்சிகையின் முதலாவது வெளியீடு இதுவாகும்.

உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதித்துவத்திலிருந்து பாராளுமன்றம் வரையிலான அரசியல் அதிகாரங்களைக் கொண்ட பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு பெரும் கட்சியாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் இருக்கிறது. இதன் மூலம் சமூக ரீதியான பல்வேறு தீர்வு முயற்சிகளையும் அபிவிருத்திகளையும் இக்கட்சி முன்னெடுத்தும் வருகின்றது.

இவ்வாறு முஸ்லிம் சமூக அரசியல் நிலத்தில் பெரும் நிழலாக நிற்கும் ஒரு மரமாக, வற்றாது ஓடும் ஒரு நதியாக, சதா இயங்கிக்கொண்டிருக்கும் ஒரு இயக்கமாக முஸ்லிம் சமூக அரசியலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பரவலான பல பணிகளையும் முன்னெடுத்து வருகின்ற போதிலும், அவற்றை திட்டமிட்டு மூடி மறைக்கின்ற ஊடக அத்துமீறலைச் செய்கின்ற சில சதிகாரக் கும்பல்கள் திரைமறைவில் இயங்கிக் கொண்டிருக்கின்றன.


இவற்றுக்கெல்லாம் பதிலடி கொடுப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினுடைய உள்ளூராட்சி மன்றம் முதல் பாராளுமன்றம் வரையிலான அரசியல் பிரதிநிதிகள் முன்னெடுக்கின்ற சமூகப் பணிகள், அபிவிருத்திகள், பிரச்சினைகளுக்கான தீர்வுகள் என எல்லாவற்றையும் தொகுத்து சமூகத்தின் கைகளுக்கு கையளிக்கின்ற ஒரு சாட்சியமாக இச்'சாட்சியம்' வெளிவருகின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ன செய்கிறது? அதன் இயக்கம் என்ன என்ற கேள்விகளுக்கு சாட்சியம் அளிக்கின்ற ஒரு ஆவணமாக இச்'சாட்சியம்' வரலாற்றுப் பதிவுபெறும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பிரதிநிதிகள் அனைவரும் தங்களின் செயற்பாடுகளின் மூலமாகவும் சிந்தனைகள் கருத்துக்கள் மூலமகாவும் தங்கள் சாட்சியங்களை கூறுகின்ற ஒரு மக்கள் அவையாக இதனை நாம் பதிப்பிக்கின்றோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற விருட்சத்தின் கிளைகளாகவும் இலைகளாகவும் பரந்திருக்கின்ற எமது கட்சியின் உரிமைக் குரலான போராளிகளும் அபிமானிகளும் இந்த சாட்சியத்தின் மூலம் எமது எதிரிகளின் சதிகளையும் சவால்களையும் தகர்த்தெறிய உங்கள் ஒவ்வொருடைய கைகளிலும் ஒரு ஊடாக ஆயுதமாக இந்த சாட்சியத்தினை ஒப்படைக்கின்றோம்.

**தொடர்ந்து சாட்சியம் உரைப்போம்!**
**விரைந்து தடைகளை உடைப்போம்!**



# 27 ஆவது பேராளர் மாநாடு



✻ பிறவ்ஸ் முஹம்மட்

கடந்த 16 வருடங்களாக நான் தலைமைத்துவம் எனும் முற்கீரிடத்தை தலையில் சுமந்துவருகின்றேன். இந்த தலைமைத்துவம் நேர்மையாக, சட்டபூர்வமாக மாறுமென்றால், எனது பதவியை தட்டில் வைத்து தாரை வார்த்துக் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 27ஆவது பேராளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது;

நான் மீண்டும் தலைவராக வரவேண்டும் என்று ஹஸன் அலிதான் எனது பெயரை பிரேரித்தார். அவருடைய அந்த நல்ல மனதுக்கு நான் என்றும் நன்றிகூற கடமைப்பட்டுள்ளேன். பாமர மக்களிடமிருந்து அரசியல் அந்தஸ்தை வழங்குகின்ற கட்சி என்றால் அது முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமே.

பேராளர் மாநாட்டில் பல குழப்பங்கள் நடைபெறும் என்று வெளியிலிருந்து பலர் தம்பட்டமடித்துக்கொண்டிருக்கும் நிலையில், கட்சியைப் பாதுகாக்க வேண்டும் என்று நேரகாலத்துடன் பேராளர்கள் இங்கு அணிதிரண்டு வந்து எமக்கு ஆதரவுக்குரல் வழங்கியுள்ளனர். கட்சிக்கு பிரச்சினை வருகின்றபோது அதைக் காப்பாற்றுவது தலைமை அல்ல, போராளிகளே.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 27ஆவது பேராளர் மாநாடு கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 12.02.2017 அன்று நடைபெற்றது

நன்றி: நவமணி
விடிவெள்ளி
13.02.2017



கட்சிக்குள் இருக்கும் பிரச்சினைகளை வெளியில் பூதாகரமாக்குவதற்கு நாங்கள் தீனிபோட வேண்டிய அவசியமில்லை. அன்று கட்சிக்குள் இருந்துகொண்டு குழிபறித்தவர்கள் இன்று வெளியில் இருந்துகொண்டு குழிபறிக்கின்றனர்.

திருகோணமலைக்கு வழங்கப்பட்டுள்ள தேசியப்பட்டியலை பங்கீடு செய்வதற்கு நாங்கள் யோசித்துக்கொண்டிருக்கிறோம். தற்போது பாரிய பிரச்சினையாக எழுந்துள்ள தேசியப்பட்டியல் விவகாரத்துக்கு தாமதிக்காமல் விரைவில் தீர்மானம் எடுக்கவுள்ளோம். எதிர்பார்ப்புடன் இருப்பவர்கள் பொறுமையுடன் இருக்கவேண்டும். அவர்களுடைய எதிர்பார்ப்புகளில் ஒருபோதும் மண்ணை அள்ளிப் போடமாட்டோம்.

தேசியப்பட்டியல் விடயத்தில் சரியான நேரத்தில் எடுக்கின்ற சரியான முடிவாக அது இருக்கவேண்டும். இதன்போது கட்சிப் பாதுகாப்பு கவனத்திற்கொள்ளப்படுவது மிக முக்கியமானது. கட்சிக்குள் குளறுபடிகள் ஏற்படாத வகையில் தேசியப்பட்டியல் பகிரப்படவேண்டும்.

தாருஸ்ஸலாமில் இரகசியங்கள் இருப்பதாக களவாக புத்தகம் அடித்து வீட்டுக்கு வீடு பங்கிடுகின்றனர். அதில் சமர்ப்பணம் செய்யப்பட்டவர்களின் பெயர்களைப் பார்க்கும்போதே அதை யார் வெளியிட்டார் என்பதை அவர்களே காட்டிக் கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. தாருஸ்ஸலாமில் எந்த இரகசியங்களும் இல்லை. அவை எல்லோருக்கும் தெரிந்த பரகசியமாகவே இருக்கிறது.


தாருஸ்ஸலாமை நாங்கள் புதையலை அடைகாப்பதுபோல் அடைகாப்பதாக அவர்கள் பேசிக்கொண்டு திரிகின்றனர். இங்குள்ள கட்டிடங்கள் மிகவும் பழமையடைந்துவிட்டன. அவற்றுக்குப் பதிலாக நாங்கள் தற்போது புதிய கட்டிடங்களை கட்டுவதற்கு யோசித்துக்கொண்டிருக்கின்றோம்.

அஷ்ரஃப் ஆரம்பித்த நம்பிக்கை நிதியத்தை மீண்டும் கூட்ட வேண்டும். அதில் நானும், சகோதரர் ஹாபிஸ் நஸீரும், சல்மானும் மாத்திரமே தற்போது இருக்கிறோம்.

தாருஸ்ஸலாம் விவகாரம் தொடர்பில் கலீல் மௌலவி, பேரியல் அஷ்ரஃபுடன் பேசியிருக்கிறார். இந்த விவகாரத்துக்கு நாங்கள் விரைவில் தீர்வினை வழங்குவோம். இதற்காக நாங்கள் யாப்பில் திருத்தங்களையும் மேற்கொள்ளவுள்ளோம். அம்பாறையிலும் ஒரு தாருஸ்ஸலாம் அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்து வருகின்றனர். அதையும் நாங்கள் கட்டித் தருவோம்.

அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளும்போது சிறுபான்மை கட்சிகளையும் கவனத்திற்கொள்ள வேண்டும். எல்லை நிர்ணயக் குழுவுக்கும் அமைச்சருக்கும் இடையில் அடிக்கடி சண்டைகள் நடக்கின்றன. அதுபோல், தேர்தல் முறையை கொண்டு வருவதற்காக அரசு உள்ளூராட்சி தேர்தலை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது.

இத்தேர்தல் உரிய நேரத்தில், உரிய முறையில் தற்போது நடைமுறையிலுள்ள முறையில் நடாத்தப்பட வேண்டும் என்று மேலும் தெரிவித்தார்.





## 27ஆவது பேராளர் மாநாட்டில் தெரிவான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிர்வாக சபை


| | |
|---|---|
| 01. தலைவர் | - ரவூப் ஹக்கீம் |
| 02. தவிசாளர் | - ஏ.எல்.ஏ. மஜீத் |
| 03. சிரேஷ்ட பிரதித் தலைவர் | - ராவுத்தர் நெய்னா முஹம்மத் |
| 04. பிரதித் தலைவர் - 1 | - ஹாபிஸ் நசீர் அஹமட் |
| 05. பிரதித் தலைவர் - 2 | - யூ.டி.எம். அன்வர் |
| 06. பிரதித் தலைவர் - 3 | - எச்.எம்.எம். ஹரீஸ் |
| 07. செயலாளர் | - மன்சூர் ஏ. காதிர் |
| 08. பொருளாளர் | - எம்.எஸ்.எம். அஸ்லம் |
| 09. தேசிய ஒருங்கிணைப்பு செயலாளர் | - எம்.ஐ.எம். மன்சூர் |
| 10. மஜ்லிஸுல் ஷூரா தலைவர் | - மௌலவி ஏ.எல்.எம். கலீல் |
| 11. தேசிய கொள்கை பரப்புச் செயலாளர் | - யூ.எல்.எம். முபீன் |
| 12. தேசிய அமைப்பாளர் | - ஷபீக் ராஜாப்தீன் |
| 13. அரசியல் விவகாரப் பணிப்பாளர் | - எஸ்.எம்.ஏ. கபூர் |
| 14. சர்வதேச விவகாரப் பணிப்பாளர் | - ஏ.எம். பாயிஸ் |
| 15. யாப்பு விவகாரப் பணிப்பாளர் | - எம்.பி. பாறூக் |
| 16. இணைக்கப்பட்ட நிறுவனப் பணிப்பளர் | - எம்.எஸ். தௌபீக் |
| 17. உலமா காங்கிரஸ் பிரதிநிதி | - மௌலவி எச்.எம்.எம். இல்யாஸ் |
| 18. பிரதி தவிசாளர் | - எம். நயீமுல்லாஹ் |
| 19. பிரதி செயலாளர் | - நிஸாம் காரியப்பர் |
| 20. பிரதிப் பொருளாளர் | - கே.எம்.ஏ. றஸாக் (ஜவாத்) |
| 21. மஜ்லிஸுல் ஷூரா பிரதித் தலைவர் | - சியாத் ஹமீட் |
| 22. செயற்குழு செயலாளர் | - றிஸ்வி ஜவஹர்ஷா |
| 23. பிரதி தேசிய அமைப்பாளர் | - பைசால் காசீம் |
| 24. பிரதி தேசிய ஒருங்கிணைப்பாளர் | - ரஹ்மத் மன்சூர் |
| 25. பிரதி கொள்கை பரப்புச் செயலாளர் | - அலிசாஹிர் மௌலானா |
| 26. கல்வி, கலாசார இணைப்பாளர் | - எஸ்.எல்.எம். பளீல் |
| 27. சமூக சேவை, அனர்த்த முகாமைத்துவம் | - ஆர்.எம். அன்வர் |
| 28. இளைஞர், வேலைவாய்ப்பு | - ஏ.எல். தவம் |

# பேராளர் மாநாட்டு நிகழ்வுகள்













ரவூப் ஹக்கீம்

# கருமலையூற்று பள்ளி காணியை அபகரிக்க இராணுவம் முஸ்தீபு

கடும் சர்ச்சைகளுக்குள்ளான திருகோணமலை கருமலையூற்று பள்ளிவாசலை மீண்டும் சுவீகரிக்கும் நடவடிக்கைகள் சூட்சுமமாக எடுக்கப்பட்டுள்ளதாக சபையில் குற்றம் சாட்டிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், தனது கடுமையான கண்டனத்தையும் வெளியிட்டார்.

இராணுவத்தினர் இவ்வாறு பாரம்பரிய காணிகளை திட்டமிட்டு சுவீகரிக்கும் செயற்பாடுகளை எதிர்காலத்தில் முற்றாக கைவிட வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார். மீட்க முடியாத நன்கொடை உறுதிகளை முழுமையான நன்றியீனம் எனும் ஏதுவின் மீது கைமீட்டல் மற்றும் இலங்கை அரசாங்கம், யுக்ரேன் அரசாங்கத்திற்குமிடையே குற்றவியல் கருமங்களின் பரஸ்பர சட்ட உதவியளித்தல் பற்றி ஏற்படுத்தப்பட்ட கட்டளைகளை அங்கீகரிப்பது தொடர்பான சட்டமூலங்களின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், திருகோணமலை நாச்சிக்குடா, வெள்ளைமணல் கருமலையூற்று பள்ளிவாசல் விடயம் ஏற்கனவே கடும் சர்ச்சைக்குரிய விடயமாக காணப்படுகின்றது. முன்னதாக புராதனப் பள்ளிவாசல்களில் ஒன்றான கருமலையூற்றுப் பள்ளிவாசல் அமைந்துள்ளதும் அதனைச் சூழவுள்ளதுமான காணிகளை கையகப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது 2ஆம் உலக யுத்தத்தில் புகழ்பெற்றிருந்த பாரம்பரிய பள்ளிவாசலான கருமலையூற்றுப் பள்ளிவாசல் சிதைக்கப்பட்டது. இதனால் கடுமையான சர்ச்சைகள் எழுந்தன. அதற்கு எதிராக கிழக்கு மாகாண சபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் குறித்த விடயம் சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் இராணுவத்தினருடன் மேற்கொள்ளப்பட்டது. குறித்த பிரதேசத்திற்கும் நேரடியாகச் சென்றிருந்தோம். இந்த சூழலில் சிதைக்கப்பட்ட அந்த பாரம்பரிய பள்ளிவாசலை மீண்டும் அமைத்து தருவதாக இராணுவத்தினர் உறுதியளித்திருந்தனர்.

ஆனால் தற்போது நிலைமை மாறியிருக்கின்றது. காணி எடுத்தற் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் கருமலையூற்று பள்ளிவாசல் அமைந்துள்ள காணி உட்பட அதனைச் சூழவுள்ள 4.65 ஹெக்டெயர் பரப்பளவான காணியை இராணுவத்தினரின் தேவைக்காக சுவீகரிப்பதற்கான அறிவித்தலொன்றை திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் விடுத்துள்ளார்.

முஸ்லிம்கள் பூர்வீகமாக வசித்து வருவதோடு, பாரம்பரிய பள்ளிவாசலும் அதனை அண்டிய காணிகளையும் சுவீகரிப்பதற்கு சூட்சுமமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைக்கு நான் இந்த சபையில் கடுமையான கண்டனத்தை தெரிவிப்பதோடு நல்லிணக்கம் தொடர்பாக பேசப்பட்டுக்கொண்டிருக்கும் இத்தருணத்தில் இராணுவத்தினர் இவ்வாறான செயற்பாடுகளை இரகசியமாக முன்னெடுப்பதை கைவிடவேண்டும் என்றார்.

# வியாபாரத்தின் வெற்றியை எவ்வாறு தீர்மானிப்பது?




தாருஸ்ஸலாமில் மாதம் இருமுறை நடைபெறுகின்ற சன்மார்க்க சொற்பொழிவுத் தொடரில், கொழும்பு சிவப்பு பள்ளி தகவல் மையத்தின் இணைப்பாளர் மௌலவி ருஸ்னி முனீர் ஹக்கானி ஆற்றிய உரையின் சாரம்சம்

இஸ்லாம் பரிபூரண வாழ்க்கைத் திட்டம் என்றவகையில் அது அனைத்து துறைகளுக்கும் வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. தொழுகை விடயத்தில் எவ்வாறு எச்சரிக்கை விடுக்கின்றதோ அதேபோன்று வியாபார நடவடிக்கைகளில் மோசடி செய்பவர்களையும் மிக வன்மையாகக் கண்டிக்கிறது.

**இன்னும் கவனமற்ற தொழுகையாளிகளுக்கு கேடுதான் (107: 04)**

**அளவு நிறுவையில் மோசடி செய்பவர்களுக்கு கேடுதான் (83: 01)**

சிறந்த வர்த்தக மையமாக விளங்கிய மக்கமா நகரில் நபிகளார் பல்வேறு வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு முன்மாதிரியான, வெற்றிகரமான வியாபாரியாக வாழ்ந்து காட்டியுள்ளார்கள். வியாபாரம் என்பது பொருட்களையும் சேவைகளையும் மாத்திரம் வழங்கும் நடவடிக்கை மாத்திரமல்ல, அது ஒரு வாழ்க்கைமுறை, அனுபவங்களையும் பரந்த அறிவையும் கற்றுத் தரும் வாழ்க்கைமுறை.

வியாபாரமொன்றின் வெற்றியை தீர்மானிப்பதில் முதலீட்டை விடவும் இலாபம் அதிகமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் பிழையானது. உண்மையில் இலாபகரமான வியாபாரம் என்பது வேறு. அவையாவன,

**01. செய்யும் தொழிலை எப்போதும் விருப்பத்துடன் செய்தல்:**

எல்லோருக்கும் விரும்பும் தொழில் கிடைப்பதில்லை. ஆனால் கிடைக்கும் தொழிலை விருப்பத்துடன் செய்ய வேண்டுமென இஸ்லாம் விரும்புகிறது. நீங்கள் செய்யும் ஒவ்வொரு விடயத்தையும் திறம்பட செய்யுங்கள் என்பது நபிமொழி.

**02. தரமான பொருட்களையும் சேவைகளையும் வழங்குதல்:**

சந்தையில் முதற்தர வியாபாரியாக விளங்க தரமான பொருட்களையும் சேவைகளையும் வாடிக்கையாளர்களுக்கு வழங்க வேண்டும். வியாபார ஆய்வாளர்கள் குறிப்பிடுவது போன்று, வியாபாரத்தின் நோக்கம் வாடிக்கையாளர்களை உருவாக்குவதாகும்.

**03. நிதிநிலை செயற்திறன் கொண்டதாக இருத்தல்:**

வியாபாரமொன்றின்போது வியாபாரியொருவர் தனது சொத்துக்கள் எவை, தன்னுடைய பொறுப்புகள் எவை என்பது தொடர்பில் சரியான புரிதல் இருத்தல் வேண்டும். இல்லாவிடின், காலப்போக்கில் பொறுப்புகள் அதிகரித்து சொத்துகளை இழந்து வியாபாரத்திலும் சொந்த வாழ்கையிலும் நஷ்டத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும்.

**04. செயற்திறன் கொண்ட நிருவாகத்தையும் ஊழியர்களையும் உருவாக்குதல்:**

ஒரு வியாபரத்தின் வெற்றிக்குப் பின்னால் செயற்திறன் கொண்ட நிருவாகமும் ஊழியர்களும் அவசியமாகும். ஊழியர்கள் தான் செய்யும் வியாபாரம் தொடர்பில் அறிவு பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். தெரிந்தவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கும் வேலை தெரிந்தவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கும் வித்தியாசம் உள்ளது.

**05. வியாபாரம் ஷரியத்தின் வழிகாட்டலுக்கு உட்பட்டதாக இருத்தல்:**

ஹலால் ஹராம் பேணி வியாபாரம் செய்தல் அவசியம். அதன் மூலமே இஸ்லாமிய வியாபாரிக்கான சிறப்புகளை பெற முடியும்.

மேற்குறித்த விடயங்களை எமது வியாபாரத்தில் பின்பற்றும்போதே அவை வெற்றிபெற்ற வியாபாரமாக அமையும்.



# முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நடவடிக்கை

❊ நவாஸ் சௌபி

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் காணி மற்றும் மீள்குடியேற்ற பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் உயர்மட்ட அதிகாரிகள் சந்திப்பு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் 23.02.2017 அன்று பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நடைபெற்றது.

இது தொடர்பாக காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி மற்றும் மனித எழுச்சி நிறுவனம் இணைந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களை 2017.01.29ஆம் திகதி நீர்வழங்கல் அமைச்சின் அம்பாறை மாவட்டக் காரியாலயத்தில் சந்தித்து விடுத்த வேண்டுகோளின் அடிப்படையிலும், அதனைத்தொடர்ந்து இவ்வமைப்புகள் 2017.02.19இல் அக்கரைப்பற்று அதாஉல்லா அரங்கில் ஏற்பாடு செய்த இக்காணிப் பிரச்சினைகளை வெளிப்படுத்தும் கூட்டத்தில் தலைவர் ரவூப் ஹக்கீம் கலந்துகொண்டு பேசுகையில் அளித்த வாக்குறுதியின் அடிப்படையிலும் மேற்படி பாராளுமன்ற கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு தீர்வு காணப்பட்டிருக்கிறது.

அம்பாறை மாவட்ட முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கிவருகின்ற காணிப் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள், திணைக்கள தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகளை எமது நாட்டின் அரசியல் உயர்பீடமான பாராளுமன்றத்திற்கு அழைத்து மிகக்கவனமாக இப்பிரச்சினைகளை எந்தவிதமான நழுவல்களும் இல்லாமல் முன்வைத்து இறுக்கமான தீர்வுகளை உடனடியாகப் பெற்றுக்கொடுக்கும் வகையில் தலைவர் ரவூப் ஹக்கீம் நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

நன்றி: தமிழ் மிரர்
நவமணி
*06.03.2017*

குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் யுத்தத்தி னாலும் பேரினவாத செயற்பாடுகளினாலும் அபகரிக்கப் பட்ட காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு களைப் பெறுவதில் இப்படி நன்கு ஒழுங்குபடுத்தப் பட்ட ஒரு அரசியல் தீர்வு நடவடிக்கையை முன்னெ டுத்ததில் தலைவர் ரவூப்ஹக்கீம் அதனோடு சேர்ந்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பிரமுகர்கள் என அனைவரும் நன்றிக்குரியவர்கள் என்று மேற்படி அமைப்புக்கள் பாராட்டுத் தெரிவித்திருந்தனர்.

அம்பாறை மாவட்டத்தின் தமிழ் முஸ்லிம் சமூகங் களைச் சேர்ந்த சுமார் 3,000 குடும்பங்கள் இவ்வாறான காணி இழப்புகளால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இப் பிரச்சினைகள் யாவும் பொத்துவில், லாஹுகல, அக்க ரைப்பற்று, ஆலயடிவேம்பு, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் வருகின்ற வேகமாம், பாலயடி வட்டை, கிரான்கோமாரி, அஷ்ரஃப் நகர் (ஆலிம் சேனை), பொன்னன்வெளி, அம்பலத்தாறு, கீத்துப் பத்து ஆகிய காணிகள் மற்றும் குடியிருப்புக்களை மையமாகக் கொண்டவைகளாகும்.

இதில், மிக முக்கியமாக பாரம்பரியமாக பயிர் செய் யப்பட்டு வந்த காணிகள் வனஜீவராசிகள்,வன விலங்கு பாதுகாப்பு திணைக்களம், தொல்பொருள் திணைக் களம் மற்றும் புனித பூமித் திட்டம் போன்றவற்றினால் சுவீகரிக்கப்பட்டவைகளாக இருப்பது இதற்கான தீர்வு களைப் பெறுவதில் பெரும் தடையாக இருக்கின்றது.

மேற்படி இடங்களில் உள்ள பிரச்சினைகள் யாவும் மிகத் தெளிவாகவும் முழுமையாகவும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு முன்வைக்கும் வாய்ப்பு இச் சந்திப்பில் ஏற்படுத்தப்பட்டது இதில் கிடைத்த முத லாவது வெற்றியாகும். மேலும் குறிப்பிட்ட பிரச்சினை களால் உரிய மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதையும் சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுக்கு ஆதா ரபூர்வமாக நிரூபிக்க முடிந்ததும் இச்சந்திப்பு ஏற்படுத் திய மற்றுமொரு மகத்தான தருணமாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களின் தலைமையில் ஏற்பாடு செய்யப் பட்டு பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற மேற்படி சந்திப்பில் ஆராயப்பட்ட பிரச்சினைகளும் அவை குறித்து எடுக்கப்பட்ட தீர்வுகளும் வருமாறு.

**வேகாமம்:** இது பொத்துவில், லாஹுக்கல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட காணிகளாகும். இவை 55 வருடங்கள் ஆட்சியுரிமை கொண்டு விவசாயம் செய் யப்பட்டு வந்த 450 ஏக்கர் காணிகளை உள்ளடக்கியது.

**பிரச்சினை:** குறிப்பிட்ட காணிகளில் 1990 களின் பின்னர் யுத்த காரணங்களினால் அம்மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

பின்னர், இக்காணிகள் 2006ஆம் ஆண்டு அரசாங் கத்தினால் எந்தவித முறைமையுமின்றி வன விலங்கு பரிபாலன திணைக்களத்தின் எல்லைக்குள் சேர்க்கப்பட் டிருக்கிறது. இதனால் 140 குடும்பங்கள் பாதிக்கப்பட்டி ருக்கிறது.





**தீர்வு:** மேற்படி பிரச்சினையை உரிய பிரதேச செய லாளர்கள் மட்டத்தில் தீர்ப்பதற்கு உத்தரவிடப்பட்ட தோடு, இதில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய தேவை ஏற்படின், உரிய பிரதேச செயலாளர்க ளின் கீழ் அறிக்கை ஒன்றினை தயாரித்து வழங்குமாறும் வேண்டப்பட்டுள்ளது. இவ் அறிக்கையின் அடிப்படை யில் தலைவர் ரவூப் ஹக்கீம் சம்பந்தப்பட்ட அமைச்சர் கள் மற்றும் உயர் அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு தீர்வுக்கான உத்தரவுகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

**பாலையடி வட்டை:** இது பொத்துவில் லாஹுக்கல பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட காணிகளா கும். இவை 21 வருடங்கள் ஆட்சி உரிமை கொண்டு விவசாயம் செய்யப்பட்டு வந்த 503 ஏக்கர் காணிகளை உள்ளடக்கியது.

**பிரச்சினை:** மேற்படி காணிகளுக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் 2000 ஏக்கர் காட்டுப் பரப்பு அழிக் கப்பட்டு அது பெரும்பான்மை மக்களுக்கு உரித்தாக்கப் பட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி காடுகள் இவ்வாறு அழிக்கப்பட்டு கொடுக்





கப்பட்டதனால் அந்தவழியாக சென்று வந்த யானைகளுக்கு மாற்று வழிப் பாதையாக பாலையடி வட்டை காணிகளை விடுமாறு வனஜீவராசிகள், வன பரிபாலன திணைக்களம் உத்தரவிட்டு குறிப்பிட்ட காணிகளில் விவசாயம் செய்யவிடாது தடுத்தும் வைத்திருக்கிறது. இதனால் 250 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

**தீர்வு:** இப்பிரச்சினைக்கு அழிக்கப்பட்ட காட்டுப் பிரதேசத்தோடு சேர்த்து யானை வழியை சிறிய பகுதியாகச் சுருக்கி கொடுத்துவிட்டு,உரிய காணிகளை மக்களின் பயிச்செய்கை பயன்பாட்டிற்கு கொடுப்பதற்கு உரிய பிரதேச செயலாளர்கள் ஊடாக வனஜீவராசிகள், வன பரிபாலன திணைக்கள அதிகாரிகளுக்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**கிரான் கோமாரி:** இது பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்குட்பட்ட காணியாகும். இவை 59 வருடங்கள் ஆட்சி உரிமை கொண்டு விவசாயம் செய்யப்பட்டு வந்த 885 ஏக்கர் காணிகளை உள்ளடக்கியது. அம்பாறை மாவட்டம் உருவாகுவதற்கு முன்பு 1957 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கச்சேரியால் இதற்கான பேமிட் வழங்கப்பட்டிருக்கிறது.

**பிரச்சினை:** மேற்படி 885 காணியில் 185 ஏக்கர் காணிகள் நீங்கலாக ஏனையவை அரசாங்கத்தினால் எந்தவித முறைமையுமின்றி வன விலங்கு பரிபாலன திணைக்களத்தின் எல்லைக்குள் சேர்க்கப்பட்டிருப்பதோடு குறிப்பிட்ட காணியில் விவசாயம் செய்வதற்கு பாதுகாப்புத் தரப்பினரும் தடை விதித்துவருகின்றனர். இதனால் 177 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

**தீர்வு:** குறிப்பிட்ட காணியின் பரப்பினை விரிவான நிலஅளவை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இது காணி உரிமையாளர்களின் முன்னிலையில் நடக்க வேண்டும் எனவும் உறுதியாக்கப்பட்டுள்ளது.

இக்காணிகளை விரிவான நிலஅளவை செய்வதற்கான செலவினை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பொறுப்பேற்றிருக்கிறார். இதன்மூலம் 885 ஏக்கர் காணிகளுக்குமான பேமிட் அனுமதிப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு அக்காணிகள் பாதிக்கப்பட்டவர்களின் பயன்பாட்டிற்கு கொடுக்கப்படும்.

**அம்பலத்தாறு மற்றும் கீத்துப்பத்து:** இதில் அம்பலத்தாறு அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் கீத்துப் பத்து ஆலயடி வேம்பு பிரதேச செயலாளர் பிரிவினுள்ளும் காணப்படுகின்ற காணிகளாகும். இதனுள் பள்ளச்சேனை, சோலைவட்டை, சியாத்துற வெளி, பாவாபுரம் போன்ற இன்னும் சில சிறுபகுதிக் காணிகளும் உள்ளடங்குகின்றன. இவை 79 வருடங்கள் ஆட்சி உரிமை கொண்டு விவசாயம் செய்யப்பட்டு வருகின்ற இடங்களாகும்.

**பிரச்சினை:** மேற்படி காணிகளில் முதலில் அம்பலத்தாறு பகுதிக் காணிகளை அரசாங்கம் எந்தவித முறைமைகளுமின்றி பறிமுதல் செய்து கல்ஓயா அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 18ஏ, 19ஏ கொளனிகளை உருவாக்கி பெரும்பான்மை இனத்தவர்களுக்கு வழங்கியுள்ளது.

அவ்வாறு 18ஏ, 19ஏ கொளனிகளில் குடியேறிய பெரும்பான்மை சமூக மக்களால் பின்னர் கீத்துப் பத்து காணிகள் அபகரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறு அபகரிக்கப்பட்ட அம்பலத்தாறு மற்றும் கீத்துப் பத்து காணிகளுக்கு நட்டஈடாக பதில் காணிகள் கொடுக்கப்படாமல் இதுவரை 48 குடும்பங்கள் இருக்கின்றன.

**தீர்வு:** மேற்படி விடயத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய தீர்வினை உடனே பெற்றுக் கொடுப்பதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் பொறுப்பேற்றுக்கொண்டார். அந்த இடத்தில் உரிய தீர்வு காணப்பட்ட ஒரு விடயமாக இது இருந்தது. இதனை நடைமுறைப்படுத்தவும் அறிக்கை தயாரிக்கவும் அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலயடிவேம்பு, இறக்காமம் மற்றும் தமண பிரதேச செயலாளர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

**பொன்னன் வெளி, அஷ்ரஃப் நகர்:** இவை அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட காணியாகும். இவை 50 வருடங்கள் ஆட்சி உரிமை கொண்டு விவசாயம் செய்யப்பட்டு வருகின்ற இடங்



## திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் காணிப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை எட்டுவதற்கான கலந்துரையாடல்கள் எதிர்காலத்தில் நடாத்தப்படும் – ரவூப் ஹக்கீம்

களாகும். 600 ஏக்கர் காணிகள் இதனுள் அடங்குகிறது.

**பிரச்சினை:** இதில் அஷ்ரஃப் நகர் காணிகள் அரச படை, புனித பூமி, தொல்பொருள் வன பரிபாலன இலாக ஆகிய திட்டங்களுள் பலவந்தமாக பறிக்கப்பட்டிருக்கிறது.

இது நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் மேற்படி எல்லைகளுக்குள் இருந்து விடுவிக்கப்பட்டு உரியவர்களின் பாவனைக்குரியதாக வழங்கப்பட்ட போதும் மீண்டும் இத்தீர்ப்புக்கு எதிரான தடை உத்தரவு வழக்கினை வன பரிபாலன திணைக்களம் போட்டிருக்கிறது.

அடுத்து பொன்னன் வெளிக் காணியில் ஏற்கனவே முஸ்லிம்கள் வைத்திருக்கும் அதே பேமிட் காணிகளுக்கு முறைகேடாக இரண்டாம்தர பேமிட்டுகள் பெரும்பான்மை மக்கள்102 பேருக்கு அத்துமீறியதாக வழங்கப்பட்டிருக்கிறது. இதனால் 176 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கிறது.

**தீர்வு:** மேற்படி விடயத்தில் அஷ்ரஃப் நகர் காணிகளுக்கு எதிராக வனபரிபாலன திணைக்களத்தினால் மீண்டும் போடப்பட்டிருக்கின்ற வழக்கினை வாபஸ் வாங்குவதாகவும், ஏற்கனவே உள்ள நீதி மன்றத் தீர்ப்பின் பிரகாரம் உரிய காணிகளை அம்மக்களின் பயன்பாட்டிற்கு விடுவதாகவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

அடுத்தபடியாக பொன்னன்வெளி காணியில் புதிதாக கொடுக்கப்பட்ட 102 பெரும்பான்மை மக்களுக்கான பேமிட் காணிகளை அவ்வாறே வைத்துக்கொண்டாவது உரித்துடையவர்களுக்கு அருகிலுள்ள மீதிக் காணியில் அளவீடு செய்து மாற்றுக் காணிகளை கொடுப்பதற்கும் முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றன.

இவ்விடயங்களை முன்னெடுப்பதற்கும் இதற்கான நிலைமைகளை அறிக்கை செய்வதற்கும் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பொறுப்பாக்கப்பட்டிருக்கிறார்.

மேற்படி கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் துஷித பி. வனிகசிங்க, தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் செனரத் திசநாயக்க, காணி ஆணையாளர் இந்திக விஜய குணவர்தன,வன ஜீவராசிகள் வனபரிபாலன திணைக்களங்களின் அதிகாரிகள், பொத்துவில், அக்கரைப்பற்று, ஆலயடிவேம்பு, அட்டாளைச்சேனை, திருக்கோவில், இறக்காமம் ஆகிய பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள் என அரச அதிகாரிகள் பங்கேற்றனர்.

இவர்களுடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், பிரதி அமைச்சர் எச்.எம்.எம்.ஹரீஸ், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம்.மன்சூர், எம்.எஸ்.தௌபீக், அலிசாஹிர் மௌலானா, எம்.எச்.எம்.சல்மான் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர், கிழக்கு மாகாண காணி அமைச்சர் ஆரியவதி கலபதி, கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஏ.எல்.தவம், ஆரிப் சம்சுதீன், ஷிப்லி பாரூக், ஆர்.எம். அன்வர் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் மன்சூர் ஏ. காதிர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இத்துடன், பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் விவசாயிகளை பிரதிநிதித்துவப்படுத்தி காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணியினர், மனித எழுச்சி நிறுவனத்தினர் போன்ற அமைப்பினரும் இதில் கலந்துகொண்டனர்.

**முடிவுகள்:** மேற்படி கலந்தரையாடப்பட்ட பிரச்சினைகள் அனைத்தும் தொடர்பாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி அவற்றினை உரிய காலத்தினுள் நிறைவேற்றுவதற்கும் அதற்கான இணைப்புகளை செய்வதற்கும் தலைவர் ரவூப் ஹக்கீம் தனது பிரதிநிதிகளாக பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஐ.எம்.மன்சூர்,எம்.எஸ்.தௌபீக் மற்றும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஆரிப் சம்சுதீன் ஆகியோரை நியமித்திருக்கிறார்.



ஏ.எல்.எம். நஸீர்

# டெங்கு நோய் அபாயம்: தனிநபர் பிரேரணை

கிழக்கு மாகாண சபையின் 72ஆவது சபை அமர்வு (21.03.2017) சபைத் தவிசாளர் சந்திரதாஸ கலப்பதி தலைமையில் நடைபெற்றபோது, கிழக்கு மாகாணத்தில் பரவி வரும் டெங்கு நோய் அபாயம் குறித்து கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் அவசர தனிநபர் பிரேரணையொன்றை முன்வைத்தார்.

இதன்போது டெங்கு நோய் தொடர்பில் விஷேட கலந்துரையாடல் ஒன்று மாகாண சபையில் அனைத்து பிரமுகர்களையும் உடனடியாக அழைத்து, உடன் அமுலுக்கு வரும் வகையில் பல்வேறு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டன. மேலும் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களும், அமைச்சர்களும் டெங்கு நோய் தொடர்பில் கிழக்கு மாகாண சுகாதார துறையின் சிறப்பான செயற்பாடுகளை பாராட்டி தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர்.


அன்றையதினம் டெங்கு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பாக கிழக்கு மாகாண சபையை ஒத்தி வைத்து விஷேட கூட்டமொன்று நடைபெற்றது. இதன்போது, கிழக்கு மாகாணத்தில் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை துரிதமாகவும் வினைத்திறன்மிக்கதாகவும் முன்னெடுப்பதற்கான நடவடிக்கை தொடர்பில் ஆராயப்பட்டது. டெங்கு ஒழிப்பு செயற்பாட்டின்போது தேவையான ஆளணியை வழங்குவது, வாகன பற்றாக்குறை இருப்பின் அவற்றை உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு நிவர்த்தி செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

நுளம்புகள் பரவும் வகையில் சூழலை வைத்திருப்போருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. அதேவேளை, ஊடகங்கள் பிழையான தகவல்களை மக்களுக்கு வழங்குவதால், சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைகளின்றி சம்பந்தப்பட்ட செய்திகளை பிரசுரிக்க வேண்டாம் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

கிழக்கு மாகாண தவிசாளர், முதலமைச்சர், அமைச்சர்கள், உறுப்பினர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்கள தலைவர்கள், உள்ளிட்ட அனைத்து முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டு விஷேட தீர்மானங்களை மேற்கொண்டனர்.

அதேவேளை, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பத்மநாதன் சத்தியலிங்கம் ஆகியோருக்கிடையே டெங்கு நோயை கட்டுப்படுத்துவது தொடர்பான விஷேட கலந்துரையாடலொன்றும் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்தில் பரவிவரும் டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு தயாராகவிருப்பதாக வட மாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்தார். இதுன்போது கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை, வைத்திய சாலைக்கு தேவையான பொருட்கள் தொடர்பாகவும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் எத்திவைத்தார்.



# அபிவிருத்தியில் அடையாளப்படுத்தப்படாத பக்கங்கள்

✲ நாச்சியாதீவு பர்வீன்

மிக நீண்ட வரலாற்றினையும் பூர்வீகத்தையும் கொண்ட பெரும்பான்மையான இலங்கை முஸ்லிம்களின் ஆதரவு பெற்ற தனித்துவமான கட்சியாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் விளங்குகிறது. இலங்கை முஸ்லிம்களின் உரிமைக்கான கட்சியாக உருவாக்கப்பட்ட ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிற்காலத்தில் பாரிய அபிவிருத்திப்பணிகளை தேசிய ரீதியில் செய்து வருகின்றமை அந்தக் கட்சி மீதான நம்பகத்தன்மையையும் விசுவாசத்தையும் ஆழமாக விதைத்துள்ளது.

இந்த நல்லாட்சியின் மிகமுக்கிய பங்காளர்களான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆழமான சமூகக் கட்டமைப்பையும், காத்திரமான அபிவிருத்திக்கான கட்டமைப்பையும் தன்னகத்தே கொண்டு சீரான இயங்கு தளத்தில் இயங்குகிறது. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிதானமான அலட்டிக்கொள்ளாத இந்த நகர்வானது ஏனைய சிறு கட்சிகளுக்கு பெரும் சவாலாக இருப்பது குறிப்பிடத்தக்கது. அந்த வகையில் தெளிந்த நீரோடையாக இயங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மக்கள் மத்தியில் தனது நன்மதிப்பை உரிமைப்போராட்டத்திலும் சரி, அபிவிருத்திக்கான செயற்பாடுகளிலும் சரி தக்கவைத்துக்கொண்டே வந்துள்ளது.

*நன்றி: தினகரன் 10.02.2017*

கடந்த நல்லாட்சியில் நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் தற்காலிகமாக அமைக்கப்பட்ட அமைச்சரவையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களுக்கு பொறுப்புமிக்க அமைச்சாக நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சு வழங்கப்பட்டது. அந்த நூறு நாள் வேலைத்திட்டத்தின் கீழ் இதற்கு முன்னர் இருந்த நீர் வழங்கல் அமைச்சர்களை விடவும் பாரிய அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டமையினால், 2015ஆம் ஆண்டின் பாராளுமன்ற தேர்தலின் பிற்பாடும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மீது வைத்திருந்த நம்பிக்கை மற்றும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் அவருக்கு தொடர்ந்தும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு வழங்கப்பட்டிருந்தது.

நாட்டின் எல்லா பாகங்களிலும் அது நகரங்களாக இருந்தாலும் சரி அல்லது அடிப்படை வசதிகளற்ற கிராமங்களாக இருந்தாலும் சரி அந்தப்பிரதேசங்களில் உள்ள மக்களுக்கு சுத்தமான குடிநீரினை பெற்றுக்கொடுப்பதில் அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களை பற்றி அண்மையில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க விதந்துரைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் திட்டமிடப்பட்டு பொது மக்களின் நலன்கருதி அமைக்கப்பட்ட பாரிய நீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் நகர திட்டமிடல் திட்டங்கள், நீர் சுத்திகரிப்புத் திட்டங்கள், சிறுநீரக பாதிப்புகள் உட்பட நீரினால் ஏற்படுகின்ற நோய்களை கண்டறிந்து அவற்றுக்கான நிரந்தர தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கான திட்டங்கள் என பல திட்டங்களை உருவாக்கி அதனை அமுல் படுத்துவதில் வெற்றியும் கண்டுள்ளார்.

அந்த வகையில் மாகாணங்கள் தோறும் பல நீர் வழங்கல் திட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. அதில் முக்கியமானதாக மத்திய மாகாணத்தில் உருவாக்கப்பட்டுள்ள நீர் வழங்கல் கருத்திட்டமான பாரிய தம்புள்ளை நீர் வழங்கல் திட்டத்தையும் குறிப்பிட முடியும் 9593 மில்லியன் ரூபா மதிப்பிடப்பட்டுள்ள இந்த திட்டத்தின் கீழ் 174,000 பயனாளிகள் பயன்பெறுவார்கள் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்திய எக்சிம் வங்கி இந்த திட்டத்திற்கான நிதியுதவியை கடனாக வழங்கியுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் மாத்தளை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களை உள்ளடக்கிய தம்புள்ளை, கலேவெல, கெக்கிராவ, பளுகஸ்வெவ, பலாகல, மாவட்ட செயலாளர் பிரிவில் வசிக்கின்ற மக்கள் சுத்தமான குடிநீரினை பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. மத்திய மாகாணத்துக்கான நீர் வழங்கல் கருத்திட்டமாக இது அமைந்தாலும் வடமத்திய மாகாணத்தின் அனுராதபுர மாவட்டத்தின் பல பிரதேசங்களுக்கும் இத்திட்டத்தின் மூலம் பயன் கிடைப்பது குறிப்பிடத்தக்கது. 2012ஆம் ஆண்டு கடந்த அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு நிதி மற்றும் பௌதீக வளப்பற்றாக்குறை காரணமாக தொய்வு நிலையில் இருந்த இத்திட்டமானது அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் மீண்டும் துரிதப்படுத்தப்பட்டு வளப்பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டு நிறைவடைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இது வறட்சியான கால நிலையை கொண்ட அனுராதபுரத்தின் எல்லைக் கிராமங்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாகும்.

இவ்வாறே மத்திய மாகாணத்தில் கண்டி மாநகரை மையப்படுத்திய கண்டி நகர கழிவு நீர் முகாமைத்துவ திட்டம் மற்றுமொரு முக்கியமான திட்டமாகும். சூழலுக்கும் சுற்றாடலுக்கும் குந்தகத்தை உண்டு பண்ணுகின்ற கழிவு நீரினை நிலக்கீழ் குழாய்கள் மூலம் வெளியேற்றி நகரத்தை தூய்மையாக வைத்துக்கொள்ளுகின்ற இத்திட்டமானது கடந்த காலங்களில் முறையாக செயற்படுத்தாமையினால் முக்கியமான பல நகரங்கள் அசுத்தமானதாகவே காணப்பட்டது. இந்நிலையிலிருந்து பிரதான நகரங்களை பாதுகாத்து நகரங்களில் நல்ல சூழலை உருவாக்குவதற்கு இத்திட்டம் உறுதுணையாக அமைந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் கெந்தகடுவை, பூவெலிக்கடை, அணிவத்தை மேற்கு, அணிவத்தை கிழக்கு, அஸ்கிரிய, பகிரவகந்த, மகியாவை, பூரணவத்த, ஹீரெஸ்ஸகல, முல்கம்பொல, அம்பிட்டிய, மல்வத்த, கட்டுகல, இகல கட்டுக்கல, கண்டி நகர், சுதும்பொல போன்ற இன்னும் பல பிரதேசங்களை உள்ளடக்கியதாக இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 20,500 பயனாளிகள் பயன்பெறுவார்கள் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஜப்பான் நாட்டின் ஜெயிக்கா நிறுவனத்துடன் இணைந்து இதற்கான நிதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கான மொத்த செலவாக 22,588 மில்லியன் ரூபாய்கள் கணக்கிடப்பட்டுள்ளன.

இதேபோன்று லக்கல புதியநகர் நீர் வழங்கல் திட்டம் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் நேரடி உத்தரவின் பேரில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். லக்கல புதிய நகரை கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட இக்குடிநீர் திட்டத்தின் கீழ் 7,400 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டதுக்காக 4,496 மில்லியன் ரூபாய்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளதோடு இந்நிதியினை தனியார் வங்கியான ஹட்டன் நெஷனல் வங்கி இலங்கை அரசுக்கு கடனாக வழங்குகின்றது. இவ்வாறே வில்கமுவ குடிநீர் வழங்கல் திட்டமும் அமைந்துள்ளது 39 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட வில்கமுவ பிரதேசத்திலுள்ள அனைத்து கிராமங்களையும் உள்ளடக்கியதாக இத்திட்டம் அமைந்துள்ளது. 3,580 மில்லியன் ரூபா உத்தேசிக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கான நிதியினை தேசிய அபிவிருத்தி வங்கி இலங்கை அரசுக்கு கடனாக வழங்கியுள்ளது. இந்நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் 5,600 குடும்பங்களுக்கான குடிநீர் இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறே கிழக்கு மாகாணத்தில் கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் அம்பாறை நீர் விநியோக வலையமைப்பு ஆகிய திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு அவை நிறைவு பெறும் தருவாயில் காணப்படுகின்றன இதில் கிழக்கு மாகாண நீர் வழங்கல் அபிவிருத்தி கருத்திட்டத்தின் கீழ் மகாஓயா, தெஹியத்த கண்டிய, உகண, தமண,







சம்மாந்துறை, இறக்காமம், பொத்துவில், கல்முனை, நட்பிட்டிமுனை மருதமுனை, கல்லாறு, கோணேச புரம், குடுவில் போன்ற பல பிரதேசங்களை சேர்ந்தவர் கள் பயனடைவார்கள்.

6,526 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிறைவுக்கு வந்திருக்கும் இத்திட்டத்தின் மூலம் 209,270 பயனாளிகள் பயனடைவார்கள் என உத்தேசிக் கப்பட்டுள்ளது. இலங்கை அரசோடு இணைந்து ஜப் பானிய ஜெயிக்கா நிறுவனம் இத்திட்டத்திற்கான நிதி யினை வழங்குகிறது. இதேபோன்று அம்பாறை நீர் விநியோக வலையமைப்பு திட்டத்தின் கீழ் அம்பாறை, மட்டக்களப்பு, மொனராகலை ஆகிய மூன்று மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில் இத்திட்டமானது உருவாக்கப்பட்டுள்ளது இதன்மூலம் மூன்று மாவட் டங்களிலும் 10,000 ஆயிரம் குடிநீர் இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன. இலங்கை வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, டி.எப்.சி.சி வங்கி ஆகியவற்றின் நிதிப்பங்களிப் புடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்திற்கு 6,848 மில்லி யன் ரூபாய்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இலங்கையில் மிகவும் வறண்ட பிரதேசமான வட மத்திய மாகாணத்தின் அனுராதபுரம் மற்றும் பொலன் னறுவை பிரதேசங்களுக்கான விஷேடமான நீர் வழங் கல் மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைத்தல் போன்ற திட்டங்கள் அமைச்சர் ரவூப் ஹக்கீமினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான முக்கிய காரணம் நீரினால் ஏற்படக்கூடிய உயிராபத்தை உண்டு பண்ணக்கூடிய நோய்களில் சிறுநீரக நோய் பிரதானமா னது. அது அனுராதபுரம், பொலன்னறுவை பிரதேசங்க ளில்தான் அதிக சதவீதம் காணப்படுகிறது. அந்த வகை யில் அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் மிகப்பெரிய நீர் வழங்கல் திட்டமாகும் 115,600 பயனா ளிகளை கருத்தில் கொண்டு உருவாக்கப் பட்டிருக்கும் இத்திட்டத்திற்கு 10,247 மில்லியன் ரூபாய்கள் நிதி ஒதுக் கீடு செய்யப்பட்டுள்ளது. மதவாச்சி பிரதேசத்திற்கு உட் பட்ட 37 கிராம சேவகர் பிரிவுகளும், ரம்பேவ பிரதேசத் திற்குற்பட்ட 38 கிராம சேவகர் பிரிவுகளும், மிகிந்தலை பிரதேசத்திற்குட்பட்ட 2 கிராம சேவகர் பிரிவுகளும் இந்த திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்திற்கான முழுமையான நிதியினை ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனம் இலங்கை அரசுக்கு கடனாக வழங் குகின்றது.

இவ்வாறே வடமத்திய மாகாணத்தின் பொலன்ன றுவை மாவட்டத்திற்கான மற்றுமொரு பாரிய நீர் வழங் கல் திட்டமாக மெதிரிகிரிய நீர் வழங்கல் திட்டத்தினை அடையாளப்படுத்த முடியும். மெதிரிகிரிய பிரதேச செயலக பிரிவிலுள்ள 31 கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த பொது மக்கள் இதன் மூலம் குடிநீர் வசதிகளை பெறுவார்கள், மொத்தமாக 15.000 குடும்பங்களுக்கான குடிநீர் இணைப்புக்கள் இதன் மூலம் வழங்கப்பட வுள்ளன இதற்கான நிதி உதவியினை இலங்கை வங்கி வழங்குகிறது. இத்திட்டத்திற்கான உத்தேச செலவாக 1.500 மில்லியன் என கணிக்கப்பட்டுள்ளது, அமைச்சர் ரவூப் ஹக்கீமின் நேரடிப்பணிப்பின் கீழ் ஆரம்பிக்கப்

பட்டுள்ள இந்த வேலைத்திட்டமானது 2018 ஜூலை யில் நிறைவுபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைப்போன்று வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்திற்கான குருநாகல் பாரிய குடிநீர் வழங்கல் திட்டம் மற்றும் மல வடிகாலமைப்பு திட்டம் மிக முக்கியமான ஒன்றாகும். இத்திட்டத்தின் மூலம் குருநாகல் மற்றும் மல்லவப்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவினைச் சேர்ந்த 73.000 பயனாளிகள் குடிநீர் இணைப்பினை பெறுவார்கள். இவ்வாறே இதே பிரதேசத்தை சேர்ந்த 43,000 ஆயிரம் பேர் பயன்பெறும் வகையில் துப்பரவேற்பாட்டு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. சீன எக்சிம் வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்திற்கு 13,248 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதேபோன்று கண்டி மற்றும் குருநாகல் மாவட்டத்தின் பகுதிகளை இணைத்து மக்கள் பயன் பெறுகின்ற வகையில் அமைக்கப்பட்ட திட்டமாக கலகெதர - மாவத்தகம நீர்வழங்கல் திட்டம்காணப்படுகிறது. மாவத்தகம, மல்லவப்பிட்டிய பிரதேச செயலகங்களைச் சேர்ந்த 19,000 பயனாளர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் குடிநீரினை வழங்குவதோடு கலகெதர நீர் வழங்கல் திட்டத்திற்கு 2000 கன மீற்றர் நீரினை வழங்குதல் இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டத்தின் பணிகள் துரிதமாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

அடுத்து சப்ரகமுவ மாகாணத்தில் பல குடிநீர் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதில் இரத்தினபுரி மாவட்டத்தில் பாரிய இரத்தினபுரி நீர் வழங்கல் திட்டம் முக்கியமானதாகும். இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, குருவிட்ட மற்றும் பெல்மடுல்ல போன்ற பிரதேச செயலகப் பிரிவை சேர்ந்த 43 கிராம சேவகர்கள் பிரிவை உள்ளடக்கிய மக்கள் இதன் மூலம் பயனடைவார்கள். ஸ்பெயின் மற்றும் இலங்கை அரசாங்கங்களின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டு நிறைவடைந்திருக்கும் இத்திட்டத்தின் மூலம் 80,000 பயனாளிகள் பயனடைவார்கள். இதற்காக மொத்தம் 5,136 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இதேபோன்று கொலன்ன பலாங்கொடை குடிநீர் வழங்கல் திட்டமும் மிக முக்கியமான ஒன்றாகும் பலாங்கொடை, கொலன்ன, எம்பிலிபிட்டிய இம்புல்பே ஆகிய பிரதேச சபைகளின் கீழ் வசிக்கின்ற சுமார் 80,000 மக்கள் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறுவார்கள் 4,658 மில்லியன் ரூபா செலவினை உத்தேசமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்திற்கான நிதியுதவியினை பெல்ஜியம் மக்கள் வங்கியுடன் இணைந்து இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளது.

இவ்வாறே தென்மாகாணத்தில் ருஹுணுபுர நீர் வழங்கல் திட்டமும் மிக முக்கியமான திட்டமாகும் அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களைச் சேர்ந்த சூரியவெவ, அம்பாந்தோட்டை, மாத்தறை, ரிதியகம பிரதேசங்களை சேர்ந்த 40,000 பயனாளர்கள் இந்த திட்டத்தின் மூலம் பயனடைவார்கள் கொமர்ஷியல் வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்



டத்திற்கான மொத்த நிதித்தேவையாக 1,693 மில்லியன் ரூபாய்கள் உத்தேசிக்கப்பட்டுள்ளது. 90 வீதம் நிறைவடைந்துள்ள இத்திட்டத்தின் மூலம் மக்கள் விரைவில் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறே பெந்தோட்டை நீர் வளங்கள் திட்டத்தின் மூலம் இந்த பிரதேசத்திலுள்ள 22 கிராம சேவகர்கள் பிரிவினைச் சேர்ந்த சுமார் 18,000 பயனாளிகள் பயன்பெறுவார்கள். 1000 மில்லியன் ரூபாய்கள் உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த திட்டத்திற்கான நிதியினை இலங்கை தேசிய சேமிப்பு வங்கி வழங்குகிறது.



இதேபோன்று வட மாகாணத்தில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி, நீர் வழங்கல் திட்டம் மற்றும் துப்பரவேற்பாட்டு செயற்திட்டம் 18,328 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 32 வீதம் நிறைவுபெற்ற நிலையில் தொடர்கிறது. இதன் மூலம் வடமாகாணத்தைச் சேர்ந்த 300,000 பயனாளர்கள் பயன்பெறுவார்கள் அத்தோடு 55,000 பயனாளர்கள் துப்பரவேற்பாட்டு வசதியினை பெறுவார்கள் என கணிக்கப்பட்டுள்ளது. இதேபோன்று கிளிநொச்சி நீர் வழங்கல் புணருத்தாபனத் திட்டம் இதன்மூலம் 40,000 பயனாளிகள் பயன்பெறுவார்கள் தற்போது இத்திட்டத்தின் கீழ் சுமார் 6000 பேர் பயன்பெறுகின்றார்கள். 1,900 மில்லியன் ரூபாய்கள் நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்துக்கான நிதியுதவியை ஜெயிக்க நிறுவனமும் இலங்கை அரசும் வழங்குகின்றன.

இவ்வாறே ஊவா மாகாணத்தில் மஹியங்கனை நீர் வழங்கல் விரிவாக்கல் திட்டம் மஹியங்கனை பிரதேச செயலகம் மற்றும் றெதிமல்லியத்த பிரதேச செயலகங்களை சேர்ந்த 50,000 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் பயனடைவார்கள். இவ்வாறே பதுளை, ஹாலிஎல, எல்லே ஒருங்கிணைப்பு நீர் வழங்கல் திட்டத்தின் மூலம் பதுளை, ஹாலிஎல மற்றும் எல்லே பிரதேச செயலகங்களை சேர்ந்த 110,000 பயனாளிகள் பயன் பெறுவார்கள் என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது மாத்திரமின்றி மொனராகலை, புத்தல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டம், கதிர்காமம் புனிதநகர் மல வடிகாலமைப்பு உட்கட்டமைப்பு அபிவிருத்தித்திட்டம் என்பன சுமார் 100,000 பயனாளிகள் பயன் பெறுகின்ற திட்டங்களாகும்.

இதுபோன்றே மேல் மாகாணத்தில் லபுகம கலட்டுவாவ நீர் சுத்திகரிப்பு திட்டத்தை புனரமைத்தல், பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ மேம்பாட்டு முதலீட்டுத் திட்டம், களுகங்கை நீர் வழங்கல் செயற்திட்டம், பாரிய கொழும்பு நீர் புனருத்தாபன திட்டம், பாரிய கொழும்பு கழிவு நீர் புனருத்தாபனத் திட்டம், இரத்மலானை மொரட்டுவ மற்றும் ஜாஎல - ஏக்கல கழிவு நீர் வெளியேற்றல் திட்டம், கொழும்பு நகர நீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டம் கொழும்பு கிழக்கு நீர் வழங்கல் திட்டம் என்பன மேல் மாகாணத்திலுள்ள பல இலட்சம் பயனாளிகள் நன்மை பெறுகின்ற திட்டங்களாகும். இதனைப்போன்றே வறல் வலய நகர நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுத்திட்டமானது வவுனியா, மன்னார், சிலாபம், புத்தளம் பிரதேசங்களை உள்ளடக்கிய 418,285 பயனாளர்கள் பயனடையக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள திட்டமாகும். இத்திட்டமானது 83.89 சதவீதம் நிறைவுக்கு வந்துள்ளது .

இவ்வாறு நாடளாவிய ரீதியில் இன்னும் பல புதிய நீர்வழங்கல் திட்டங்கள், நீர் சுத்திகரிப்புத் திட்டங்கள், கழிவு துப்பரவேற்பாட்டு திட்டங்கள் வடிகாலமைப்பு திட்டங்கள், குறிப்பாக சிறுநீர் பாதிப்புக்குட்பட்டவர்களுக்கான நிவாரண நீர்வழங்கல் மற்றும் நீர் சுத்திகரிப்பு திட்டங்கள் என அநேக திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவை யாவும் மக்களுக்கு நேரடி தொடர்புடையவையாகும், சுத்தமான குடிநீருக்காக மக்கள் ஏங்கித்தவிக்கின்ற சூழ்நிலையில் அவற்றை நிவர்த்தி செய்ய அமைச்சர் ரவூப் ஹக்கீம் அரும்பாடு படுகின்றார். நேரடியாக இலங்கை முழுவதும் தனது அபிவிருத்தி வேலைகளை முன்னெடுத்துவிட்டு அதை விளம்பரப்படுத்திக்கொள்ளாமல் அவர் அமைதியாக நடைபயில்கின்றார்.



சேனைக்குடியிருப்பு - சனசமூக சுகாதார நிலையம்



பெரியநீலாவனை - சனசமூக சுகாதார நிலையம்



இஸ்லாமாபாத் - சனசமூக சுகாதார நிலையம்

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்ட சேனைக் குடியிருப்பு, இஸ்லாமாபாத், பெரிய நீலாவணை ஆகிய பிரதேசங்களிலுள்ள 3 சனசமூக சுகாதார நிலையங்கள் 31.03.2017 அன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அவர்களால் மக்கள் பாவனைக்காக திறந்துவைக்கப்பட்டது. இந்த சனசமூக சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றும் 4.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.





தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் ஊவா பிரதி பொது முகமையாளர் அலுவலகம் பதுளை, மெதிரிய வீதியில் 30.03.2017 அன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அமெரிக்கா மற்றும் இலங்கை அரசின் 160 மில்லியன் ரூபா நிதி உதவியுடன் இந்த அலுவலகம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.






மொனராகலை - புத்தள ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் கீழ் கும்புக்கணை நீர் சுத்திகரிப்பு நிலையம் 30.03.2017 அன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

5515 மில்லியன் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்பட்ட கும்புக்கணை நீர் சுத்திகரிப்பு நிலையம் மூலம், ஒரு நாளைக்கு 60000 கன மீற்றர் நீர் சுத்திகரிக்கப்படவுள்ளது.




6 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வெலம்பொட, லியங்கஹவத்த பிரதேச மக்களுக்கான குடிநீர் திட்டம் 25.03.2017 அன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.





கடுகன்னாவ, பெலுங்கல குடி நீர் வழங்கல் திட்டம் மற்றும் நீர் பம்பி நிலையம் போன்றவற்றை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் 25.03.2017 அன்று மக்களின் பாவனைக்காக திறந்து வைத்தார்.

பெலுங்கல, பிரதேச மக்களின் நீண்டநாள் பிரச்சினையாக இருந்த சுத்தமான குடிநீர் தேவையை நிவர்த்திக்கும் வகையில், நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சின் 37 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் மூலம் சுமார் 250 குடும்பங்கள் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.




தெல்தோட்டை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் புனர்நிர்மானம் செய்யப்பட்ட மைதானத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாக கலந்துகொண்டு 25.03.2017 அன்று திறந்துவைத்தார்.


அமைச்சர் ரவூப் ஹக்கீமின் வேண்டுகோளுக்கிணங்க விளையாட்டுத்துறை பிரதியமைச்சர் எச்.எம். எம். ஹரீஸ் அவர்களின் 2 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் இம்மைதானம் புனரமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான எச்.எம். எம். ஹரீஸ் அவர்களின் வழிகாட்டலின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மருதமுனை அல்-ஹம்ரா வித்தியாலயத்தின் 3 மாடிக் கட்டிடம் 31.03.2017 அன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது.



சமூக நீர் வழங்கல் திட்டம் மூலம் அக்குறணை, மல்வானஹின்ன நீர் வழங்கல் திட்டம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அவர்களால் 25.03.2017 அன்று திறந்து வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சுமார் 500 பேர் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியும்.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான எச்.எம். எம். ஹரீஸ் அவர்களின் வழிகாட்டலின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரிக்கான 3 மாடிக் கட்டிடம் 31.03.2017 அன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அவர்களினால் திறந்துவைக்கப்பட்டது.



கல்முனை, கிறீன்பீல்ட் பிரதேசத்திலுள்ள றோயல் வித்தியாலயத்தின் நீண்டகால தேவையாக இருந்து வந்த இரு மாடி வகுப்பறை கட்டிடத்துக்கான அடிக் கல், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும் பிரதி அமைச்சருமான எச்.எம்.எம். ஹரீஸ் அவர்களி னால் *31.03.2017* அன்று வைக்கப்பட்டது.



பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் அப்துல் றஸாக் ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்க விஸ்தரிக்கப்பட்ட கல்முனை ஆயுர்வேத வைத்தியசாலை, *31.03.2017* அன்று மக்கள் பாவனைக்காக அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

# சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு திறப்பு





பிரதியமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் மற்றும் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர் ஆகி யோரின் நிதியொதுக்கீட்டின் கீழ் விஸ்தரிக்கப்பட்ட சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு கட்டிடம் *31.03.2017* அன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அவர்களினால் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

அன்றைய தினம் வைத்தியசாலைக்குத் தேவையான ஒரு தொகுதி மருத்துவ உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# உலகின் இரண்டாவது பெரிய வைத்தியசாலையின் கிளை இலங்கையில்






உலகிலே இரண்டாவது பெரிய வைத்தியசாலை யான Gleneagles Global Hospitals (a parkway pantai enterprise) இன் சகல வைத்தியத்துறையும் கொண்ட கிளையொன்றினை இலங்கையில் ஆரம் பித்து வைக்கும் நிகழ்வு கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சுகாதார பிரதி அமைச்சர் பைசால் காசிம் கலந்துகொண்டார்.

சகல வசதிகளையும் கொண்ட இவ்வைத்தியசாலை நம் நாட்டில் ஆரம்பிக்கப்பட உள்ளமையினால் மேல திக உயர் சிகிச்சைகளுக்காக இந்தியா போன்ற வெளி நாடுகளுக்கு செல்லும் நோயாளர்கள் இலங்கையில் சிகிச்சையினை பெறக்கூடிய வசதிகள் கிடைக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது.



காவத்தமுனை சனசமூக நிலைய வாசிகசாலையை 12.03.2017 அன்று திறந்து வைத்த கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் அதற்குத் தேவையான புத்தகங்கள் மற்றும் தளபாடங்களை வழங்கி வைத்தார்.




மீராவோடை உதுமான் பாலர் பாடசாலைக்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் 12.03.2017 அன்று சிறுவர்க ளுக்கான தளபாடங்களை வழங்கி வைத்தார்.

# கோரளைப்பற்றுக்கு திண்மக் கழிவகற்றும் உழவு இயந்திரம், நீர்த்தாங்கி வழங்கல்



மட்டக்களப்பு கோரளைப்பற்று பிரதேச சபைக்கு திண்மக் கழிவகற்றும் உழவு இயந்திரமும் நீர்த் தாங்கியும் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் அவர்களினால் வழங்கப்பட்டது.

இதனை மார்ச் 18ஆம் திகதி கோரளைப்பற்று பிரதேச சபையின் செயலாளரிடம் முதலமைச்சர் உத்தியோக பூர்வமாக வழங்கி வைத்தார்

கோரளைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எஸ்.எம். சிகாப்தீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஷிப்லி பாறுக் மற்றும் கோ. கருணாகரன் ஆகியோர் உட்பட ஓட்டமாவடி பிரதேசசபையின் முன்னாள் தலைவரும் வீடமைப்பு அதிகார சபையின் தவிசாளருமான கே.பி. எஸ். ஹமீட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கோரளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பல பகுதிகளில் குடிநீருக்குத் தட்டுப்பாடு நிலவும் நிலையில் இந்நீர்த்தாங்கி தமக்கு பாரிய நன்மையாக உள்ளது என அப்பிரதேச மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# 104 பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனங்கள்



கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் அவர்களினால் கணிதம், ஆங்கிலம் மற்றும் விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.


இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் எஸ் தண்டாயுதபானி, விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் மற்றும் மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம். அன்வர் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது 104 பட்டதாரிகள் ஆசிரியர் நியமனங்களை பெற்றுக்கொண்டனர். இதனடிப்படையில் 7 கணித ஆசிரியர்கள், 74 ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் 23 விஞ்ஞான ஆசிரியர்களுக்கான நியமனங்கள் இதன்போது வழங்கப்பட்டன.

மேலும் வேலையில்லாது காத்திருக்கின்ற பட்டதாரிகளுக்கான நிரந்தர நியமனங்களை கிழக்கு மாகாணத்திலுள்ள திணைக்களங்களில் நிலவுகின்ற வெற்றிடங்கள் ஊடாக நிரப்புவதற்கு திறைசேரியின் அனுமதியை வழங்குமாறு வேண்டி முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட் மேலதிக நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

# திருக்கோவில் வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்வு




கல்முனை பிராந்தியத்தின் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்த்தும் செயற்திட்டத்தின் கீழ், 4ஆவது ஆதார வைத்தியசாலையாக திருக்கோவில் வைத்தியசாலை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம்மட் நஸீர் அவர்களினால் தரமுயர்த்தப்பட்டது.

21.03.2017இல் ஏற்படுத்தப்பட்ட இத்தரமுயர்த்தலின் மூலம் திருக்கோவில் ஆதார வைத்தியசாலைக்கு மத்திய அரசின் மூலம் 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வைத்தியசாலைக்கு அறுவைச் சிகிச்சை நிலையமும் அமைக்கப்படவுள்ளது.

# 2.5 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட வீதிகள் மக்களிடம் கையளிப்பு






2.5 மில்லியன் ரூபா செலவில் கல்குடா தொகுதியில் இரு வீதிகள், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டன.

ஒரு மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட வாழைச்சேனை கோறளைப்பற்று மேற்கு பிரதேச சபை காவத்தமுனை கொங்கிறீட் இடப்பட்ட ஹிஸ்புல்லா வீதியை முதலமைச்சர் மக்கள் பாவனைக்காக திறந்து வைத்தார்.

ஒன்றரை மில்லியன் ரூபா செலவில் கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்பட்ட ஓட்டமாவடி மஜ்மா நகர் வீதியை முதலமைச்சர் மக்களின் பாவனைக்காக திறந்துவைத்தார்.



தெஹியத்தகண்டி நவமேதகம, பிரதேச மக்களின் அத்தியவசிய தேவையாக இருந்த மத்திய ஆயுர்வேத மருந்தகம் 02.03.2017இல் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர் அவர்களினால் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.



கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் நிதி ஒதுக் கீட்டின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட ஏறாவூர் ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் மகப்பேற்று பிரிவு என்பன கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர் அவர்களினால் 04.03.2017 இல் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட்டது.

# அட்டாளைச்சேனை தேசிய பாடசாலைக்கு கண்கானிப்பு கமெரா அன்பளிப்பு



கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். முஹம் மட் நஸீர் அவர்களினால் அட்டாளைச்சேனை தேசிய பாடசாலைக்கு கண்கானிப்பு கமெரா வழங்கி வைக் கும் நிகழ்வு மார்ச் 24ஆம் திகதி பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலையின் நீண்ட காலமாக நிலவிய குறித்த கமெரா தேவையை நிவர்த்தி செய்யும்படி, பாடசாலை சமூகம் கேட்டுக்கொண்டதற்கிணங்க கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் தனது சொந்த நிதியிலிருந்து இதனை பெற்றுக்கொடுத்தார்.

இதன்போது, அகில இலங்கை ரீதியிலான பேச்சுப் போட்டியில் கலந்துகொண்ட அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை மாணவர்கள் சுகாதார அமைச்சரி னால் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும் நிர்மானிக்கப்பட்டுவரும் புதிய கட்டிட வேலைத்திட்டங்களையும் சுகாதார அமைச்சர் நேரில் பார்வையிட்டார்.



# பசுமைப் புரட்சி

✲ பிறவ்ஸ் முஹம்மட்

**ஒரு முஸ்லிம் ஒரு மரத்தை நட்டு அல்லது விதை விதைத்து விவசாயம் செய்து அதிலிருந்து (அதன் விளைச்சலை) ஒரு பறவையோ அல்லது ஒரு மனிதனோ அல்லது ஒரு பிராணியோ உண்டால், அதன் காரணத்தால் ஒரு தர்மம் செய்தமைக்கான பிரதிபலன் அவருக்கு கிடைக்கும் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.**
**அறிவிப்பவர்: அனஸ் பின் மாக் (ரலி), நூல்: புகாரி 2320**

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 6.56 மில்லியன் ஹெக்டெயர் நிலப்பரப்பு வனப் பிரதேசங்களாக காணப்படுவதுடன், 1999ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட வனங்கள் பற்றிய கணக்கெடுப்பின் பிரகாரம் இலங்கையில் 1.94 மில்லியன் ஹெக்டெயர் நிலப்பரப்பு வனப்பிரதேசமாக காணப்படுகின்றது. இது மொத்த நிலப்பரப்பில் 29.5 சதவீதமாகும். இதற்கு மேலதிகமாக, விவசாய ரீதியில் 20% தாவரங்கள் காணப்படுகின்றன.

நகரமயமாதல் மூலம் இந்த சொற்பளவான வனங்களும் அருகிக்கொண்டே வருகின்றன. அத்துடன் கட்டிடம் கட்டுதல், வீதி அபிவிருத்தி, மரத்தளபாட உற்பத்தி போன்ற பல்வேறு அபிவிருத்திப் பணிகளினால், மக்கள் வசிப்பிடங்களிலுள்ள மரங்களும் வெட்டப்படுகின்றன. இதனால், சுவாசிப்பதற்கு சிரமப்படுகின்ற ஒரு சூழலிலேயே மனிதன் தனது வாழ்நாளை கழிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளான்.

மாசுபட்ட சூழலில் வசிக்கும் மனிதனுக்கு சுத்தமான காற்றை வழங்குவதற்கு ஒட்சிசன் தொழிற்சாலை எனப்படும் மரங்கள் பெரிதும் உதவுகின்றன. நவீனமயமாதல் மூலம் அழிந்துவரும் மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்களை வளர்ப்பதன் மூலமே எதிர்கால சந்ததியினர் நீடித்துநிலைபெறும் பயன்பாட்டை அடைந்து கொள்ளமுடியும்.

நன்றி: நவமணி
*03.03.2017*

நாட்டில் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தவேண்டும் என்ற நோக்கில், நடைபெறுகின்ற நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் அரசியல்வாதிகள் அந்தந்த இடங்களில் மரக்கன்றுகளை நட்டு வருகின்றனர். அப்படி நடப்படுகின்ற மரக்கன்று நீர் ஊற்றப்பட்டு தொடர்ச்சியாக பராமரிக்கப்படுகின்றதா என்று பார்த்தால் கேள்விக்குறிதான் எஞ்சி நிற்கின்றது. இப்படியான சூழ்நிலையில் 'வீட்டுக்கு வீடு மரம்' என்ற செயற்திட்டத்தை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயற்படுத்தி வருகிறது.

மரத்தை தனது கட்சியின் சின்னமாகக்கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வீடுவீடாகச் சென்று மரங்களை நடும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுத்துவருகிறது. மரம் நடப்பட்ட பின்னர், அதனைப் பராமரிப்பதற்காக இளைஞர் காங்கிரஸ் மூலம் பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. 'வீட்டுக்கு வீடு மரம்' செயற்திட்டத்துக்காக விஷேட பணிமனையொன்று கட்சித் தலைமையகம் தாருஸ்ஸலாமில் அமைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வெளியிடங்களுக்குச் செல்லும் தனது நிகழ்ச்சி நிரலில் வீட்டுக்கு வீடு மரம் நிகழ்ச்சித் திட்டத்தையும் இணைத்துக்கொண்டுள்ளார். தெரிவுசெய்யப்பட்ட வீடுகளில் அமைச்சர் தனது கையாலேயே மரக்கன்றுகளை நாட்டிவைக்கிறார். அத்துடன் அந்த வீட்டாரின் குடும்ப நிலவரங்களை கேட்டறிந்துகொள்கிறார். இதன்மூலம், மக்கள் பிரச்சினைகளை அமைச்சரின் காலடிக்கு எடுத்துச் செல்லும் நிலவரம் மாற்றப்பட்டு, மக்களின் காலடிக்கு சென்று பிரச்சினைகளை கேட்டறியும் நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.



முஸ்லிம் கிராமங்களின் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலுமுள்ள வீடுகளை தனித்தனியாக எடுத்து, அதன் கீழுள்ள இளைஞர்களையும் அவர்கள் மூலம் பெரியோர்களையும் இணைத்துக்கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை அடுத்த தலைமுறையினருக்கு கையளிப்பது 'வீட்டுக்கு வீடு மரம்' நிகழ்ச்சித்திட்டத்தின் மற்றுமொரு நோக்கமாகும்.

முஸ்லிம் காங்கிரஸின் மக்கள் பிரதிநிதியாகவுள்ள ஒவ்வொருவரும் இவ்வேலைத்திட்டத்தை இளைஞர்




காங்கிரஸ் ஊடாக ஒவ்வொரு ஊர்களிலும் முன்னெடுக்கும்படியாக தலைவர் ரவூப் ஹக்கீம் அறிவுரை வழங்கியுள்ளார். இதன்பிரகாரம் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் என பலரும் 'வீட்டுக்கு வீடு மரம்' திட்டத்ததை தங்களது பிரதேசங்களில் முன்னெடுத்து வருகின்றனர். இதன்மூலம் மரங்களை நடுவது மாத்திரமின்றி, மக்களின் பிரச்சினைகளை நேரில் கண்டறிந்து அதற்கு தீர்வுகாணும் ஒரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மரங்கள் நடப்பட்ட வீடுகளுக்கு தலைவர் ரவூப் ஹக்கீமின் கைப்பட எழுதப்பட்ட கடிதமும், மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரஃபினால் வெளியிடப்பட்ட 'எமது பார்வை' என்ற நூலின் மீள் பிரசுரமும் அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படமும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டமாக அந்தந்த வீடுகளிலுள்ள குடும்ப அங்கத்தவர்கள், வருமானம், கல்வி நிலை, வேலைவாய்ப்பு, நாய்வாய்ப்பட்டோர் போன்ற விபரங்களை திரட்டுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, அந்தந்த குடும்பங்களிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கில் விஷேட செயற்திட்டமொன்று அமுல்படுத்தப்படவுள்ளது. மக்களின் காலடிக்கே சென்று அவர்களது பிரச்சினைகளை தீர்த்துவைப்பதன் மூலம், மக்களுடன் நெருக்கமானதொரு உறவைப் பேணும் கட்சியாக முஸ்லிம் காங்கிரஸ் தன்னை நிரூபித்துள்ளது.

'வீட்டுக்கு வீடு மரம்' செயற்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து நடாத்துவதற்கு மரக்கன்றுகளை உற்பத்தி செய்யும் இடமொன்றை உருவாக்குவதற்கும் முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது. பசுமைப்புரட்சி மூலம் இயற்கையை வளர்ப்பதுடன் மக்களுக்கும் சேவை செய்யும் கட்சியின் இப்பணி மகத்தானது.

# பட்டதாரிகள் பிரச்சினைக்கு தீர்வுகாண முஸ்தீபு






கிழக்கின் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர் வெற்றிடங்கள் உட்பட ஏனைய வெற்றிடங்கள் அடங்கிய சகல ஆவணங்களும் திறைசேரி மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இதன்போது இதில் கிழக்கு மாகாணத்திலுள்ள 37 கல்வி வலயங்களுக்குமான வெற்றிடங்களை உள்ளடக்கி அவற்றின் தரவுகளைத் தொகுத்து ஆவணமாக திறைசேரியில் கையளிக்கப்பட்டதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. நிஸாம் தெரிவித்தார்.

இதன்போது மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியதாக ஆயிரம் பக்கங்களை உள்ளடக்கிய மூன்று புத்தகங்கள் உள்ளடக்கப்பட்டதுடன் அவற்றில் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியமும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகள் கடும் முயற்சிகளை முன்னெடுத்து 10 நாட்களுக்குள் 3000க்கும் மேற்பட்ட பக்கங்கள் கொண்ட ஆவணங்களை தொகுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


குறித்த ஆவணங்களை திறைசேரிக்கு கையளிக்கப்பட முன்னர் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் குறித்த ஆவணங்களை ஆராய்ந்து அறிந்து கொண்டார்.

இதற்கு முன்னர் கிழக்கு முதலமைச்சரின் பங்கேற்புடன் திறைசேரியில் இடம்பெற்ற கூட்டத்தில் கிழக்கின் சகல தரவுகள் அடங்கிய ஆவணங்களை இரு வாரங்களுக்குள் திறைசேரி மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கையளிக்குமாறு பிரதமரின் ஆலோசகர் ஆர். பாஸ்கரலிங்கம் பணிப்புரை விடுத்திருந்த நிலையில் இந்த ஆவணங்கள் குறித்த 10 நாட்களுக்குள் கையளிக்கப்பட்டுள்ளன.

கிழக்கு முதலமைச்சர் மீது பட்டதாரிகள் விமர்சனங்களை முன்வைத்து வரும் நிலையில் பட்டதாரிகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

## நிகழ்வுகளின் சாட்சியம்: மார்ச் 2017

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | 01  | 02  | 03  | 04  |
| 05  | 06  | 07  | 08  | 09 | 10  | 11  |
| 12  | 13  | 14  | 15  | 16  | 17  | 18  |
| 19  | 20  | 21  | 22  | 23  | 24  | 25  |
| 26 | 27  | 28 | 29  | 30  | 31  | |

## 01 மார்ச் 2017 - புதன்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

கொழும்பு - *இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் ஷெல்லி வெட்ரிங் உடன் சந்திப்பு*



**எச்.எம்.எம். ஹரீஸ்**
விளையாட்டுத்துறை பிரதியமைச்சர்

கண்டி, திகண - *மத்திய மாகாணத்துக்கான விளையாட்டு மைதான தொகுதி திறந்துவைப்பு*



**பைசால் காசிம்**
சுகாதார பிரதியமைச்சர்

அம்பாறை - *அம்பாறை மாவட்ட 20 அமைப்புகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கல்*
மஞ்சந்தொடுவாய் - *ஆயுர்வேத வைத்தியசாலை நோயாளர் விடுதி திறப்பு*



**ஏ.எல்.எம். நஸீர்**
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

கிண்ணியா - *டெங்கு நோயை கட்டுப்படுத்த விசேட நடவடிக்கை*

## 02 மார்ச் 2017 - வியாழக்கிழமை



**பைசால் காசிம்**
சுகாதார பிரதியமைச்சர்

கொழும்பு - *தேசிய சுகாதார நலக் கண்காட்சி ஆரம்பம்*



**ஏ.எல்.எம். நஸீர்**
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

தெஹியத்தகண்டி - *மத்திய ஆயுர்வேத மருந்தகம் திறந்துவைப்பு*

## 03 மார்ச் 2017 - வெள்ளிக்கிழமை



**ஹாபிஸ் நஸீர் அஹமட்**
கிழக்கு மாகாண முதலமைச்சர்

ஏறாவூர் - *லகூன் பார்க் திறப்பு*
ஏறாவூர் - *கடற்படை சங்கத்துக்கான படகு வழங்கல்*

## 04 மார்ச் 2017 - சனிக்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

கல்முனை - *கல்முனை சம்மாந்துறை ஒருங்கிணைந்த அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்*
நிந்தவூர் - *வீட்டுக்கு வீடு மரம் நடும் நிகழ்வு*
காரைதீவு - *அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளுடன் சந்திப்பு*



**ஹாபிஸ் நஸீர் அஹமட்**
கிழக்கு மாகாண முதலமைச்சர்

கன்னியா - *சுடுநீர் கிணறு பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதி திறப்பு*



**ஏ.ஏல்.எம். நஸீர்**
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

ஏறாவூர் - *மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலை பெண் நோயாளர் விடுதி திறப்பு*
ஏறாவூர் - *ஏறாவூர் ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவு, மகப்பேற்று கட்டிடம் திறப்பு*

## 05 மார்ச் 2017 - ஞாயிற்றுக்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

கல்முனை - *கல்முனை தமிழ் மக்கள் சந்திப்பு*



**ஹாபிஸ் நஸீர் அஹமட்**
கிழக்கு மாகாண முதலமைச்சர்

காத்தான்குடி - *புனரமைக்கப்பட்ட மீனவர் வீதி திறப்பு*
காத்தான்குடி - *புனரமைக்கப்பட்ட மெரின் ட்ரைவ் வீதி திறப்பு*
காத்தான்குடி - *புனரமைக்கப்பட்ட காங்கயனோடை பிரதான வீதி திறப்பு*
ஏறாவூர் - *புனரமைக்கப்பட்ட மீராகேணி உள்ளக வீதி திறப்பு*
ஏறாவூர் - *புனரமைக்கப்பட்ட புன்னக்குடா வீதி திறப்பு*



**ஐ.எல்.எம். மாஹிர்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

சம்மாந்துறை - *நெய்னாகாடு இஹ்ழான் மகளிர் அமைப்புக்கு கதிரைகள் அன்பளிப்பு*

## 06 மார்ச் 2017 - திங்கட்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

பதுளை - *தே.நீ.வ.வ.ச. பதுளை மாவட்ட பிரதி பொது முகாமையாளர் அலுவலகம் திறப்பு*
பதுளை - *வெலிமடை, குறுத்தலாவ, தாலவ, லுணுகல நீர் வழங்கல் திட்ட கலந்துரையாடல்*



**பைசால் காசிம்**
சுகாதார பிரதியமைச்சர்

கொழும்பு - *அமெரிக்க பிரதிநிதிகளுடன் கிழக்கு வைத்தியசாலைகள் தொடர்பில் கலந்துரையாடல்*

## 07 மார்ச் 2017 - செவ்வாய்க்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

பாராளுமன்றம் - *அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சாவுடன் ஹெடஓயா நீர் வழங்கல் கலந்துரையாடல்*



**ஏ.எல்.எம். நஸீர்**
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

திருகோணமலை - *பிராந்திய வைத்தியசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பில் கலந்துரையாடல்*



**சிப்லி பாறுக்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

கோரளைப்பற்று வடக்கு - *கேணிநகர் பாதை புனரமைப்பு வேலை அங்குரார்ப்பணம்*



**றிஸ்வி ஜவஹர்ஷா**
வடமேல் மாகாணசபை உறுப்பினர்

பறகஹதெனியா - *இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கல்*

## 08 மார்ச் 2017 - புதன்கிழமை



**சிப்லி பாறுக்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

வாழைச்சேனை - *அல்ரசாதியா பாலர் பாடசாலைக்கு தளபாடங்கள் வழங்கி வைப்பு*

## 10 மார்ச் 2017 - வெள்ளிக்கிழமை



**எச்.எம்.எம். ஹரீஸ்**
விளையாட்டுத்துறை பிரதியமைச்சர்

கல்முனை - 5 கோட்டங்களை சேர்ந்த பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்



**பைசால் காசிம்**
சுகாதார பிரதியமைச்சர்

கொழும்பு - ஜயவர்தனபுர வைத்தியசாலையில் உலக சிறுநீரக நோயாளர் தின விழிப்புணர்வு நிகழ்வு



**ஏ.எல். தவம்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

அக்கரைப்பற்று - வசதி குறைந்தவர்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கல் மற்றும் மக்கள் சந்திப்பு

## 11 மார்ச் 2017 - சனிக்கிழமை



**ஹாபிஸ் நஸீர் அஹமட்**
கிழக்கு மாகாண முதலமைச்சர்

ஓட்டமாவடி - புனரமைக்கப்பட்ட காவத்தமுனை ஹிஸ்புல்லா வீதி திறப்பு
ஓட்டமாவடி - புனரமைக்கப்பட்ட மீராவோடை பாடசாலை குறுக்கு வீதி திறப்பு
ஓட்டமாவடி - புனரமைக்கப்பட்ட மஜ்மாநகர் வீதி திறப்பு
ஓட்டமாவடி - உதுமான் நூலகத்துக்கு தளபாடங்கள் அன்பளிப்பு
ஓட்டமாவடி - காவத்தமுனை நூலகத்துக்கு தளபாடங்கள் அன்பளிப்பு



**ஏ.எல்.எம். நஸீர்**
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

தமண - மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான விசேட சந்திப்பு



**சிப்லி பாறுக்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

மீரோவோடை - உதுமான் பாலர் பாடசாலைக்கு தளபாடங்கள் அன்பளிப்பு

## 12 மார்ச் 2017 - ஞாயிற்றுக்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

சவூதி அரேபியா - சவூதி அரேபிய சுற்றுச்சூழல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருடன் சந்திப்பு



**ஹாபிஸ் நஸீர் அஹமட்**
கிழக்கு மாகாண முதலமைச்சர்

வாழைச்சேனை - புனரமைக்கப்பட்ட ஹபீப் கங்கானியார் வீதி வடிகான் திறப்பு
வாழைச்சேனை - புனரமைக்கப்பட்ட பிறைந்துறைச்சேனை தாவூத் மோதினார் வீதி திறப்பு
வாழைச்சேனை - புனரமைக்கப்பட்ட மாவடிச்சேனை அல்ஹிராஸ் வீதி திறப்பு
வாழைச்சேனை - புனரமைக்கப்பட்ட மீனவர் வீதி திறப்பு
வாழைச்சேனை - அல்குரைஸ் முன்பள்ளிக்கு தளபாடங்கள் அன்பளிப்பு



**அலிசாஹிர் மௌலானா**
பாராளுமன்ற உறுப்பினர்

மட்டக்களப்பு - 'தூய அரசியலுக்காக அனைவரும் ஒன்றினைவோம்' விசேட கலந்துரையாடல்



**சிப்லி பாறுக்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

கோரளைப்பற்று மேற்கு - புனரமைக்கப்பட்ட மஜ்மாநகர் மோதினார் வீதி திறப்பு

## 13 மார்ச் 2017 - திங்கட்கிழமை



**ஏ.எல்.எம். நஸீர்**
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

திருக்கோவில் - *திருக்கோவில் வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாக தரமுயர்வு*
கல்முனை - *பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு புதிய வாகனம் கையளிப்பு*
திருகோணமலை - *மத்திய அரசினால் ஒதுக்கப்பட்ட வைத்தியசாலை நிதி தொடர்பில் கலந்துரையாடல்*



**சிப்லி பாறுக்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

காவத்தமுனை - *புனரமைக்கப்பட்ட ஹிஸ்புல்லாஹ் வீதி திறந்துவைப்பு*

## 14 மார்ச் 2017 - செவ்வாய்க்கிழமை



**ஏ.எல்.எம். நஸீர்**
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

ஒலுவில் - *மீனவர்கள் ஆர்ப்பாட்டத்துக்கு தீர்வு வழங்கும் நோக்கில் நடவடிக்கை*



**சிப்லி பாறுக்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

காவத்தமுனை - *வாசிகசாலைக்கு தளபாடங்கள் வழங்கிவைப்பு*



**ஏ.எல். தவம்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

இறக்காமம் - *இறக்காமம் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம்*

## 15 மார்ச் 2017 - புதன்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

கொழும்பு - *நிதியமைச்சின் அபிவிருத்தி தொடர்பிலான விசேட கலந்துரையாடலில் பங்கேற்பு*



**ஏ.எல்.எம். நஸீர்**
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

கிண்ணியா - *ஏனைய பிராந்தியங்களிலிருந்து தாதியர்கள், வைத்தியர்கள் அழைத்து வருகை*
கிண்ணியா - *டெங்கு நோயைக் கட்டுப்படுத்த உயர் அதிகாரிகள் ஒன்றுகூடல்*



**சிப்லி பாறுக்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

ஓட்டமாவடி - *புனரமைக்கப்பட்ட மீராவோடை பாடசாலை குறுக்கு வீதி திறந்துவைப்பு*

## 16 மார்ச் 2017 - வியாழக்கிழமை



**ஏ.எல்.எம். நஸீர்**
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

திருகோணமலை - *கிழக்கு முதலீடு தொடர்பில் கனடா பிரதிநிதிகளுடன் விசேட கலந்துரையாடல்*

## 17 மார்ச் 2017 - வெள்ளிக்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

கொழும்பு - *நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சின் இணைப்பாளர்களுடன் சந்திப்பு*



**ஹாபிஸ் நஸீர் அஹமட்**

கிழக்கு மாகாண முதலமைச்சர்

திருகோணமலை - *மகேஸர் விளையாட்டுத் தொகுதி திறப்பு*

## 18 மார்ச் 2017 - சனிக்கிழமை



**ஏ.எல்.எம். நஸீர்**

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

அட்டாளைச்சேனை - *டெங்கு நோய் கட்டுப்பாட்டு வேலைத்திட்டம்*



**றிஸ்வி ஜவஹர்ஷா**

வடமேல் மாகாணசபை உறுப்பினர்

வெள்ளவ - *கதிரவெலான ஜும்ஆ பள்ளி மையவாடி மின்னிணைப்புக்கு வழங்கப்பட்டது*

## 19 மார்ச் 2017 - ஞாயிற்றுக்கிழமை



**ரவூப் ஹக்கீம்**

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

கிண்ணியா - *டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டோரை பார்வையிடல்*

திருகோணமலை - *சுகாதார பணிப்பாளர் பணிமனையில் மாவட்ட சுகாதார அதிகாரிகளுடன் சந்திப்பு*

மூதூர் - *மூதூர் தள வைத்தியசாலைக்கு விஜயம்*



**பைசால் காசிம்**

சுகாதார பிரதியமைச்சர்

கிண்ணியா - *ஆதார வைத்தியசாலைக்கு 10 நீர் வடிகட்டும் இயந்திரங்கள் வழங்கல்*



**றிஸ்வி ஜவஹர்ஷா**

வடமேல் மாகாணசபை உறுப்பினர்

கல்கமுவ - *அலியவெட்டுனுவெவ வீதி திறந்து வைப்பு*



**சிப்லி பாறுக்**

கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

வாழைச்சேனை - *புனரமைக்கப்பட்ட வாழைச்சேனை மீன்பிடி வீதி திறந்துவைப்பு*

ரிதிதென்ன - *ஹிஸ்புல்லா பாலர் பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கிவைப்பு*

## 20 மார்ச் 2017 - திங்கட்கிழமை



**ரவூப் ஹக்கீம்**

நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

கொழும்பு - *கழிவுநீர் முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு*



**பைசால் காசிம்**

சுகாதார பிரதியமைச்சர்

நிந்தவூர் - *நிந்தவூர் அபிவிருத்தி திட்டமிடல் பற்றிய கலந்துரையாடல்*



**ஏ.எல்.எம். நஸீர்**

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

திருகோணமலை - *47 மருந்து கலவையாளர்களுக்கான நியமனம் வழங்கல்*



**சிப்லி பாறுக்**

கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

கோறளைப்பற்று - *பிரதேச சபைக்கு திண்மக் கழிவகற்றும் உழவு இயந்திரம், நீர்தாங்கி வழங்கிவைப்பு*

பிறைந்துரைச்சேனை - *புனரமைக்கப்பட்ட தாவூத் மோதினார் வீதி திறந்துவைப்பு*



**ஏ.எல். தவம்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

அம்பாறை - அம்பாறை பிரதேச சிங்கள மக்களுடன் சந்திப்பு

## 21 மார்ச் 2017 - செவ்வாய்க்கிழமை



**ஏ.எல்.எம். நஸீர்**
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

மாகாண சபை - டெங்கு நோய் தொடர்பான தனிநபர் பிரேரணை சமர்ப்பிப்பு



**சிப்லி பாறுக்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

மாவடிச்சேனை - ஹபீப் கங்காணியார் வீதிக்கான வடிகான் வேலைகள் ஆரம்பம்
மாவடிச்சேனை - புனரமைக்கப்பட்ட அல்ஹிராஸ் வீதி திறந்துவைப்பு

## 22 மார்ச் 2017 - புதன்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

கொழும்பு - தாமரைத் தடாகத்தில் நடைபெற்ற உலக நீர் தின தேசிய விழாவில் பங்கேற்பு
கொழும்பு - கிண்ணியா டெங்கு தொடர்பில் பாராளுமன்றில் விசேட உரை



**ஏ.எல்.எம். நஸீர்**
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

மாகாணசபை - டெங்கு நோய் தொடர்பில் கிழக்கு, வடக்கு சுகாதார அமைச்சர்கள் பேச்சுவார்த்தை

## 23 மார்ச் 2017 - வியாழக்கிழமை



**சிப்லி பாறுக்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

வாழைச்சேனை - சிறிய படகுகள் உரிமையாளர்களுக்கு படகுகளுக்கான பற்றிகள் வழங்கிவைப்பு

## 24 மார்ச் 2017 - வெள்ளிக்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

பாராளுமன்றம் - கருமலையூற்று பள்ளிக் காணி தொடர்பில் பாராளுமன்றில் விசேட உரை
பாராளுமன்றம் - முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பில் பாராளுமன்றில் விசேட உரை
பாராளுமன்றம் - இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள முஸ்லிம்களின் காணிகள் தொடர்பில் விசேட உரை



**ஏ.எல்.எம். நஸீர்**
கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர்

அட்டாளைச்சேனை - தேசிய பாடசாலைக்கு கண்காணிப்பு கமெரா அன்பளிப்பு

## 25 மார்ச் 2017 - சனிக்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

அக்குறணை - மல்வானஹின்ன குடிநீர் திட்டம் பாவனையாளர்களுக்கு கையளிப்பு
தெல்தொட்டை - புனரமைக்கப்பட்ட தெல்தோட்டை முஸ்லிம் மகா வித்தியாலய மைதானம் திறப்பு
வெலம்பொட - வெலம்பொட, லியன்கஹவத்த குடிநீர் திட்டம் பாவனையாளர்களுக்கு கையளிப்பு
கடுகண்ணாவ - கடுகண்ணாவ பெலுங்கள குடிநீர் திட்டம் பாவனையாளர்களுக்கு கையளிப்பு

## 26 மார்ச் 2017 - ஞாயிற்றுக்கிழமை

## 27 மார்ச் 2017 - திங்கட்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

கொழும்பு - *'நீரைப் பாதுகாப்போம்' உத்தியோகபூர்வ இணையத்தளம் அங்குரார்ப்பணம்*

## 28 மார்ச் 2017 - செவ்வாய்க்கிழமை

## 29 மார்ச் 2017 - புதன்கிழமை



**எச்.எம்.எம். ஹரீஸ்**
விளையாட்டுத்துறை பிரதியமைச்சர்

கல்முனை - *மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் பற்றி கலந்துரையாடல்*

## 30 மார்ச் 2017 - வியாழக்கிழமை



**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

மொனராகல - *கும்புக்கனை நீர் சுத்திகரிப்பு நிலையம் திறந்துவைப்பு*
மொனராகல - *பஞ்ஞானந்த மகா வித்தியாலய குறைபாடுகள் தொடர்பில் கலந்துரையாடல்*
பதுளை - *ஊவா பிரதி பொது முகாமையாளர் அலுவலகம் திறந்துவைப்பு*

## 31 மார்ச் 2017 - வெள்ளிக்கிழமை




**ரவூப் ஹக்கீம்**
நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

சேனைக்குடியிருப்பு - *சனசமூக சுகாதார நிலையம் திறப்பு*
இஸ்லாமாபாத் - *சனசமூக சுகாதார நிலையம் திறப்பு*
பெரியநீலாவணை - *சனசமூக சுகாதார நிலையம் திறப்பு*



**எச்.எம்.எம். ஹரீஸ்**
விளையாட்டுத்துறை பிரதியமைச்சர்

சாய்ந்தமருது - *மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு, சிற்றுண்டிச்சாலை திறப்பு*
சாய்ந்தமருது - *மாவட்ட வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளித்தல்*
கல்முனை - *கிறீன்பீல்ட் றோயல் வித்தியாலய இரு மாடி கட்டிடத்துக்கு அடிக்கல் நடல்*
மருதமுனை - *அல் ஹம்றா வித்தியாலய 3 மாடி வகுப்பறைக் கட்டிடம் திறப்பு*
மருதமுனை - *அல் மனார் வித்தியாலய 3 மாடி வகுப்பறைக் கட்டிடம் திறப்பு*
கல்முனை - *ஆயுர்வேத வைத்தியசாலை திறந்து வைப்பு*




**சிப்லி பாறுக்**
கிழக்கு மாகாணசபை உறுப்பினர்

கல்குடா - *பல்நோக்கு கூட்டுறவு சங்க வீதிக்கான குடிநீர் வழங்கும் திட்டம் ஆரம்பம்*

# பொத்தானை ஆராய்ச்சி மரைக்கார் தைக்கா பிரச்சினைக்கு சுமூகத்தீர்வு






தொல்பொருளியல் திணைக்களத்தினால் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட பொத்தானை பிரதேசத்திலுள்ள ஆராய்ச்சி மரைக்கார் தைக்காவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூலம் தீர்வு பெறப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பொத்தானை பிரதேசத்துக்கு இன்று சனிக்கிழமை தலைவர் ரவூப் ஹக்கீம் நேரடி விஜயம் மேற்கொண்டார்.

அதன்பின்னர், தொல் பொருளியல் திணைக்கள பணிப்பாளருடன் பேச்சுவார்த்தை நடாத்தப்பட்டு குறித்த தடையுத்தரவு நீக்கப்பட்டது.

அதேவேளை, சர்ச்சைக்குரிய வட்டமடு மேய்ச்சல் தரை பிரதேசத்துக்கும் விஜயம் செய்த முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சிகளையும் முன்னெடுத்துள்ளார்.




டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு கிண்ணியா தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்களை தலைவர் ரவூப் ஹக்கீம் 19.03.2017இல் நேரில் சென்று நலம் விசாரித்தார்.



டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு மூதூர் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர்களை தலைவர் ரவூப் ஹக்கீம் 19.03.2017இல் நேரில் சென்று நலம் விசாரித்தார்.

# காரைதீவில் வேலையற்ற பட்டதாரிகள் போராட்டத்தில் சந்திப்பு





காரைதீவில் சத்தியாக்கிரக பேராட்டத்தில் ஈடுபட்டுவரும் அம்பாறை மாவட்ட பட்டதாரிகளை 04.03.2017 அன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் சந்தித்து கலந்துரையாடினார்.

கிழக்கு மாகாணத்தில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக பிரதமரை சந்தித்து பேசுமாறு கிழக்கு மாகாண முதலமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தேன். அவர் பிரதமரை சந்தித்து பேசியபின், உடனடியாக நிரப்பக்கூடிய வெற்றிடங்களை சிபார்சு செய்வதற்காக பிரதமரினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் அறிக்கையின்படி வேலையற்ற பட்டதாரிகளை உள்வாங்குவதற்கான முற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.


# விபத்தில் காயமடைந்தோரை நேரில் சந்தித்து சுகம்விசாரிப்பு





புனித உம்ரா கடமையை நிறைவேற்றிவிட்டு விமான நிலையத்தில் இருந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த பாலமுனை, ஹுசைனியாநகர் பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் பயணித்த வான் அண்மையில் விபத்துக்குள்ளானது. இதில் காயமடைந்து அம்பாறை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்தவர்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம், சுகாதார பிரதியமைச்சர் பைசல் காசிம் மற்றும் மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல். நஸீர் உள்ளிட்டோர் பெப்ரவரி 19ஆம் திகதி நேரடியாக சென்று பார்வையிட்டனர்.

# துந்துவை கிராமத்துக்கு குழாய்நீர் வழங்க நடவடிக்கை




நீண்டகாலமாக குடிநீர் வசதியின்றி இருந்து வரும் காலி மாவட்ட துந்துவை கிராமத்திற்கு குழாய் நீர் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் காலி மாவட்ட மத்திய குழுவினர் கட்சித் தலைவரும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அவர்களை அமைச்சில் சந்திந்து வேண்டுகோள் விடுத்தனர்.

இதற்கமைய, துந்துவை கிராமத்தை உள்ளடக்கியவாறு அதற்கு அப்பால் அமைந்துள்ள பெரும்பான்மை சமூகத்தவர்கள் வசிக்கும் மாகல, தொடகணத்த வரை குழாய் மூலம் நீர் விநியோகிக்க முடியுமான விதத்தில், பெந்தொட்டை ஆராச்சிமுல்ல சந்தியிலிருந்து சுமார் 6 கிலோ மீற்றர் தூரத்திற்கு மீளிணைப்பு வழங்குவதென குறிப்பிட்ட தரப்பினரிடம் தலைவர் ரவூப் ஹக்கீம் ஒப்பதல் அளித்தார்.

தற்போது நடைமுறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற பெந்தொட்டை நீர் விநியோகத்திட்டத்தில் துந்துவைப் பிரதேசம் உள்வாங்கப்படவில்லை. எனவேதான், துந்துவை கிராமத்திற்கு குடிநீர் வசதியை வழங்கும் வகையில் பெந்தொட்டை ஆராச்சிமுல்ல சந்தியிலிருந்து தெத்துவ, ஹபுருகல, கொட்டன்ஹன சந்தி, துந்துவை, மாகல மற்றும் தொட்டகனத்த வரையில் சுமார் 53 மில்லியன் ரூபா செலவில் நீர் விநியோகம் மீளிணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

# இரத்தினபுரி பள்ளிவாசல் காணி தொடர்பில் சந்திப்பு



இரத்தினபுரி ஜென்னத் ஜும்ஆ பள்ளிவாசலுக்கு அருகில் சந்தைத்தொகுதி கட்டப்படும் வாகனத் தரிப்பிடத்தை பொதுமக்கள் பாவனைக்காக பள்ளிவாசலுக்கு பெற்றுத்தருமாறு பள்ளி நிர்வாகம் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து, 22.03.2017 இல் பாராளுமன்றத்தில் விஷேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். சல்மான், பள்ளிவாசல் தலைவர் எம்.ஓ.எம். இப்ராஹிம், மு.கா. பதுளை அமைப்பாளர் பி. தாஜுதீன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

பள்ளிவாசலுக்கு அருகிலுள்ள வாகனத் தரிப்பிடம் நகரசபைக்கு சொந்தமாக இருப்பதால், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவிடமும் முஸ்லிம் சமய, கலாசார திணைக்களத்திடமும் பேசி குறித்த வானகத் தரிப்பிடத்தை பள்ளிவாசலுக்கு பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் இதன்போது தெரிவித்தார்.

இரத்தினபுரி சந்தை விஸ்தரிப்பு காரணமாக, பள்ளிவாசலுக்கு அருகிலிருந்த வாகனத் தரிப்பிடத்தில் கட்டிடம் அமைப்பதற்கான தூண்கள் 2 வருடங்களுக்கு முன்னர் நடப்பட்டன. இதனால் பள்ளிவாசலுக்கு காற்றோட்டம் இல்லாமலிருப்பதால்; அதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு பள்ளிவாசல் நிர்வாகம் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் கோரிக்கை விடுத்தது. அதன்பின்னர் விஸ்தரிப்பு பணிகள் நிறுத்தப்பட்டன. இந்நிலையிலேயே அந்த வாகனத் தரிப்பிடத்தை மீளப்பெற்றுத் தருமாறு பள்ளிவாசல் நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

# தமண பிரச்சினை தொடர்பில் மக்களுடன் நேரடிச் சந்திப்பு



வாழைச்சேனை மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை நேரடியாக உரிய இடத்துக்குச் சென்று கேட்டறிந்து, அதற்கான தீர்வுகளை பெற்றுத் தருவதாக கிழக்கு மாகண முதலமைச்சர் நஸீர் அஹமட் வாக்குறுதியளித்தார். இச்சந்திப்பு வாழைச்சேனை அல்ஹக் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.



கல்குடா மக்கள் சந்திப்பும் கலந்துரையாடலும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் இஸ்மாயில் ஹாஜியார் தலைமையில் வாழைச்சேனை வை. அஹமட் வித்தியாலயத்தில் நடைபெற்றது.





அம்பாறை, இக்கினியாக்கல, தமண பிரதேச மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்காக 11.03.2017இல் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம். நஸீர் நேரடியாக விஜயம் செய்தார்.

குறித்த பிரதேச மக்கள் தங்களது பிரச்சினைகளை அமைச்சரிடம் கூறியதுக்கு அமைய உரிய அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

அத்துடன் சுகாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அம்பாறை மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளரை அழைத்து குறித்த பிரதேச வைத்தியசாலைக்கு நேரில் சென்று அது தொடர்பாகவும் நன்கு ஆராயப்பட்டது.

# பள்ளிக்குடியிருப்பு வைத்தியசாலை காணி தொடர்பில் கலந்துரையாடல்





மத்திய அரசாங்கத்தின் அனுசரணையில் கிழக்குமாகாண சபையால் அமுல்படுத்தப்படும் சுகாதார சேவைகள் அபிவிருத்தித் திட்டத்தின் (எச்.எஸ்.டி.பி) கீழ், அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதேச வைத்தியசாலைக்கு புதிய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக, கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம் மேற்கொண்ட முயற்சியால், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் 8.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இக்கட்டிடத்தை எந்த இடத்தில் அமைப்பது என்பது தொடர்பில் அக்கரைப்பற்று பிரதேச சபைக்கும் அப்பிரதேச மக்களுக்குமிடையில் மாற்றுக் கருத்துகள் நிலவி வருகின்றன.

இதுதொடர்பாக தலையிட்ட தவம், பிரதேச மக்கள் மற்றும் பிரதேச சபை நிர்வாகத்தினரை சந்தித்துக் கலந்துரையாடி, அவ்வைத்தியசாலையின் எதிர்கால அபிவிருத்தியை கருத்திற்கொண்டு போதியளவு இடவசதியுள்ள இடத்தில் கட்டிட நிர்மானத்தை மேற்கொள்வதற்காக பிரதேச செயலாளரோடு கலந்துரையாடி முடிவெடுப்பது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


# அட்டாளைச்சேனை அந்நூர் பாடசாலை ஆர்ப்பாட்டத்துக்கு சுமூகத்தீர்வு





அக்கரைப்பற்று கல்வி வலயத்திற்குட்பட்ட அட்டாளைச்சேனை அந்நூர் மகா வித்தியாலயம் மத்திய அரசாங்கத்தினால் மாகாண சபைகளூடாக அமுல்படுத்தப்படும் 'அண்மயை பாடசாலை - சிறந்த பாடசாலை' திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்தது. பின்னர் நிருவாக ரீதியில் இடம்பெற்ற குளறுபடிகளினால் அத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தது.

இதனைக் கண்டித்து அப்பாடசாலை சமூகம் பாடசாலையை மூடி இரண்டு நாட்களாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. அதன்போது ஸ்தலத்திற்கு விஜயம் செய்த கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம், நேரடியாக கிழக்கு மாகாண சபை கல்வி அமைச்சர் தண்டாயுதபாணியுடன் தொடர்புகொண்டதன் மூலம் மீண்டும் அப்பாடசாலை அண்மைய பாடசாலை - சிறந்த பாடசாலை திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டது.




சிந்தனை விருட்சத்தின் விதையை விதைத்தது. அவரது உழைப்பின் வியர்வை மரத்திற்கு நீர் வார்த்தது. அவர் தாங்கிய காயங்களும் வலிகளும் வேருக்கு உரமிட்டது. இந்த ஸ்தாபகத் தலைவரின் மறைவுக்குப் பிறகு இக்கட்சியின் மறுபிறப்பை தத்தெடுத்து இன்றுவரை முஸ்லிம் காங்கிரஸின் தனித்துவ அடையாளங்களோடு இக்கட்சியைக் கட்டுக்கோப்பாக தனது தலைமைத்துவ ஆளுமைகளுடன் வழிநடத்தி பாதுகாத்து வருபவர் தலைவர் ரவூப் ஹக்கீமாகும்.

ஆரம்பகாலங்களில் பெரும் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை மக்கள் மயப்படுத்தும் வேலைத்திட்டத்தின் பிரசாரங்களையும் அதன் கருத்துக்களையும் சிறு பிரசுர வெளியீடுகள் மூலம் வெளியிட்டு கட்சியின் செயற்பாடுகளை மக்களுக்கு தெளிவுபடுத்தச் செய்தார். அதற்காக 'புதிய வெளிச்சங்கள்' எனும் தனியான ஒரு வெளியீட்டுப் பிரிவையும் கட்சிக்குள் இயங்கச் செய்து காலத்துக்கு காலம் கட்சி வெளியீடுகளை அதன் மூலம் கொண்டுவந்தார்.

இச்செயற்பாட்டின் வெளிப்பாடாக கட்சியின் கொள்கை விளக்க தெளிவுரை 'எமது பார்வை' என்ற பிரசுரமாக 1988.12.29 இல் புதிய வெளிச்சங்கள் வெளியீட்டின் 3 ஆவது வெளியீடாக வெளியிடப்பட்டிருந்தது. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உருவாக்கம் அதன் பின்னணி, அது முஸ்லிம் சமூக அரசியலில் சாதிக்க நினைக்கும் விடயங்கள் அதற்கு வாக்களிப்பதன் மூலம் முஸ்லிம் மக்கள் அடையும் நன்மைகள் என்று அதன் உள்ளடக்கம் உணர்வுபூர்வமாக எழுதப்பட்டிருக்கின்றது. இதனை

*நன்றி: தமிழ் மிரர் 09.02.2017*

# எமது பார்வையுடன் 'வீட்டுக்கு வீடு மரம்'

✻ நவாஸ் சௌபி

முஸ்லிம் சமூக அரசியலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பது தனித்துவ அடையாளம் பெற்ற ஒரு கட்சியாகும். அக்கட்சியின் தொடர்ச்சிக்கும் பாதுகாப்பிற்கும் முஸ்லிம் மக்கள் எப்போதும் பலம் சேர்ப்பவர்களாகவே இருக்கின்றார்கள்.

முஸ்லிம் காங்கிரஸ் ஒரு விதையாக விழுந்து இன்று அது பெரும் விருட்சமாகி நிற்பதற்கிடையில் மூன்று தசாப்தகால வரலாறு இருக்கிறது. இந்த வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டினால் போராட்டங்களும் காயங்களும் இரத்தங்களுமே நிரம்பி இருக்கும்.

முஸ்லிம் காங்கிரஸின் இஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரஃப் அவர்கள் இக்கட்சிக்காக தன் உயிரை இழக்கும்வரை தியாகம் செய்தவர். அவரது முஸ்லிம் காங்கிரஸின் சாசனமாகவும் கூறலாம்.

'எமது பார்வை' எனும் முஸ்லிம் காங்கிரஸின் கொள்கை விளக்கப் பிரசுரம் இன்றுள்ள புதிய தலைமுறையினரின் வாசிப்புக்கு நிச்சயம் கையளிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். தலைமுறை இடைவெளி இல்லாமல் புதிய தலைமுறையினர் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தொடர்ச்சியோடு இணைந்து செயற்படுகின்ற போது கட்சியின் பூர்வீகம் பற்றியும் அதன் தூரநோக்குப் பற்றியும் அறிந்தவர்களாக அவர்கள் தங்களை உணர்வுபூர்வமாக அர்ப்பணிப்பதற்கு 'எமது பார்வை' பிரசுரத்தின் கொள்கை விளக்க உரையினை வாசித்துப் புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தகைய புதிய தலைமுறையினரின் பிரவேசமும் இளைஞர் சமூகத்தின் அரசியல் ஈடுபாடும் முஸ்லிம் காங்கரஸ் கட்சியோடு இணைந்திருக்க வேண்டும்

என்ற அடிப்படையில் இன்றுள்ள தலைவர் ரவூப் ஹக்கீம் 'வீட்டுக்கு வீடு மரம்' நிகழ்ச்சித் திட்டத்தினையும் ஆரம்பித்து பல பிரதேசங்களில் அது செயற்படுத்தப் பட்டும் வருகிறது.

முஸ்லிம் கிராமங்களின் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலுமுள்ள வீடுகளை தனித்தனியாக எடுத்து அதன் கீழுள்ள இளைஞர்களையும் அவர்கள் மூலம் பெரியோர் களையும் இணைத்துக்கொண்டு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்கும் திட்டமே 'வீட்டுக்கு வீடு மரம்' நிகழ்ச்சித்திட்டமாகும். இதன்மூலம் முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் தலைமுறை இடைவெளியின்றி செய்யப்படுவதோடு கட்சி சின்ன மான மரம் எமது அரசியல் அடையாளமாக ஒவ்வொரு வாசல்களிலும் நிழலாகவும் நிரந்தரமாகவும் நிற்கும்.

இத்தகைய நோக்கத்தைக்கொண்ட 'வீட்டுக்கு வீடு மரம்' நிகழ்ச்சித் திட்டத்தினை கொள்கை அளவில் புரிந்து கொள்வதற்கு கையளிக்கப்படும் பிரசுரமே 'எமது பார்வை' மீள் பிரசுரமாகும். 36 பக்கங்களுடன் சிறு சிறு தலைப்புக்களின் கீழ் எழுதப்பட்டிருக்கும் இப்பிரசுரம் முஸ்லிம் காங்கிரஸ் மீது நாம் வைத்திருக்கும் பற்றினை என்றும் தொடரச் செய்வதற்கான நியாயங்களையும் அதற்கான தேவைப்பாடுகளையும் வலியுறுத்துவதா கவே பொருள்கொள்ள வைக்கின்றது.

காத்தான்குடித் தாயின் கருவுற்ற கர்ப்பத்தில் இருந்து 21.09.1980இல் தரித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற வித்தாகும். இந்த வித்து முளைவிட்டு ஆறு ஆண் டுகால அமைதிப்பணியின் பின்வேரூன்றி வளர்ச்சியை எய்தியபோது 29-11-1986இல் கொழும்பு 'பாஷா விலா' மண்டபத்தில் வைத்து 'அல்லாஹு அக்பர்' என்று தக்பீர் முழக்கத்துக்கு மத்தியில் ஓர் தேசிய அரசியல் கட்சி யாக பிரகடனம் செய்யப்பட்டது.

அரசியல் கட்சியாக பிரகடனம் செய்யப்பட்ட முஸ் லிம் காங்கிரஸ் என்ற சிறிய பயிர் திடீரென தேசிய ரீதி யிலும் சர்வதேச மட்டங்களிலும் காத்திரமான முத்தி ரைகளையும் சுவடுகளையும் பதிப்பதை கண்ட தேர்தல் ஆணையாளர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை அங்கீக ரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக பிரகடனம் செய்தது டன் முஸ்லிம் காங்கிரஸ் சாதாரணமான ஒரு பயிரல்ல அது ஒரு பெருவிருட்சம் என்பதை சொல்லாமல் சொல் லுவதுபோல் நிழல் தரு விருட்சத்தை அதன் சின்ன மாகவும் வழங்கினார் எனவேதான் முஸ்லிம் காங் கிரஸுக்கு தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தை இலங்கை முஸ்லிம்களின் விடுதலைப் பிரகடனமாக நாம் நோக்குகின்றோம்.

அடிமை வாழ்வையே சொப்பனமாக எண்ணியருந்த முஸ்லிம் சமூகத்தை நீண்டகாலத் துயிலிலிருந்து தட் டியெழுப்பும் பணியும் அதைச் சுற்றிப் பூட்டில்லாத இரும்புச் சங்கிலிகள் இன்னும் இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டுவதும் - அந்த சங்கிலித் தொடரை முஸ் லிம் சமூகமெனும் உடலிருந்து கழற்றி விடுவதும்தான் முஸ்லிம் காங்கிரஸ் இப்போது எதிர்நோக்கும் சவால்.



இந்த சவால்களை எதிர்கொள்வதில் முஸ்லிம் காங் கிரஸ் கட்சி கொண்டிருக்கும் கட்டுக்கோப்பான ஒற்று மையை பிரித்துவைக்கும் பலவித சக்திகளையும் நாம் முதலில் இனம் காண வேண்டும். அத்தகைய சக்திகள் கட்சியைத் துண்டாடும் சதிகளை நாம் முறியடித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியின் உறுதிப் பாட்டை நிலைப்படுத்த வேண்டும். யாருக்காகவும் அந் தக் கட்சியை நாம் சிதைத்துவிட முடியாது.

முஸ்லிம் காங்கிரஸ் மீதும் அதன் தலைமையின் மீதும் வைக்கப்படும் குற்றச்சாட்டுகளும் விமர்சனங் களும் தற்காலிகமானவைதான் இந்த குற்றச்சாட்டுக ளையும் விமர்சனங்களையும் அரசியல் நாகரீகமும் நியாயமுமற்ற தனிமனித தேவைகளின் பழிவாங்கும் படலமாகவும் கூறலாம்.

கட்சி அரசியல் சின்னாபின்னமாக்கப்பட்டிருந்த பேரா பத்தான காலகட்டத்தில்தான் முஸ்லிம் காங்கிரஸ் என்ற தனித்துவ அடையாளமிக்க கட்சி முஸ்லிம் சமூக அரசி யலுக்கு உரிமைக் கோஷம் கொடுத்தது. அத்தகைய ஒரு கட்சியை சின்னாபின்னமாக்கும் சதிகளையும் சதிகாரர் களையும் அரசியல் ரீதியாக நாங்கள் புறக்கணித்து கட் சியின் இருப்பை பாதுகாக்க வேண்டும்.

இலங்கை முஸ்லிம்களின் அரசியல் அடையாளத்தை ஒருமுகப்படுத்திக் காட்டும் ஒரே ஒரு சாதனம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்ற கட்சியாகும். இதற்குள் இருந்துகொண்டுதான் நாங்கள் முஸ்லிம் அரசியலை முன்னெடுக்கவும் எமது அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கவும் முடியும். என்பதில் மாற்றுக் கருத் தும் மாற்று வழியும் இருக்காது.

ஆனால், இன்று தனிப்பட்டவர்களின் மாமூலான அரசியல் விமர்சனங்கள் முஸ்லிம் காங்கிரஸ் மீது ஏவப் பட்டுவருகிறது. இதற்கு மாற்றமாக கருத்தியல் ரீதியாக சிந்திக்கின்ற அரசியல் விமர்சகர்களால் முஸ்லிம் காங்கி ரஸ் என்ற கட்சியின் இருப்பும் அதன் முக்கியத்துவமும் உறுதிப்படுத்தப் பட்டிருக்கிறது. இத்தகையவர்களின் பார் வைதான் எமது பார்வையின் உள்ளடக்கமாகும். இவர் களால் வளர்க்கப்படுவதே வீட்டுக்கு வீடு மரமுமாகும்.



# கனேடிய தூதுக்குழு - முஸ்லிம் காங்கிரஸ் சந்திப்பு

இனங்களுக்கிடையில் ஏற்படுகின்ற பிணக்குகளுக்கு தீர்வு காண்பதற்கு, விரிசல்களை வெகுவாகக் குறைத்து பல்லின சமூகங்களின் மத்தியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்குமான பொறிமுறையொன்று உருவாக்கப்படுவதன் அவசியம் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கனேடிய தூதுக்குழுவுக்கு விளக்கமளித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகமான தாருஸ்ஸலாம் நடைபெற்ற இச்சந்திப்பில் இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் ஷெல்லி வைற்றிங், ஒட்டாவா நகரில் செயற்படும் கனேடிய பூகோள விவகார அமைப்பின் பிரதிநிதி பயாஸ் மஞ்ஜி, கனேடிய உயர் ஸ்தானிகராலய அரசியல், பொருளாதார, வர்த்தக ஆலோசகர் ஜெனிபர் ஹார்ட் ஆகியோரும் சுகாதார பிரதியமைச்சர் பைசால் காசீம், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், மு.கா. செயலாளர் மன்சூர் ஏ. காதிர் ஆகியோர் பங்குபற்றினர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரையும் பிரதிநிதிகளையும் சந்தித்த பிரஸ்தாபக் குழுவினர் யுத்தத்துக்கு பின்னரான காலப்பகுதியில் நாட்டில் படிப்படியாக ஏற்பட்டுவருகின்ற மாற்றங்கள் பற்றியும் இன முரண்பாடுகளும் கசப்புணர்வுகளும் குறைவடைந்து வருகின்ற தன்மை பற்றியும் அறிந்துகொள்வதில் அதிக ஆர்வம் செலுத்தினர்.

யுத்தகாலத்திலும் பின்னரும் தமிழ் மக்களிடமிருந்து பாதுகாப்புப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை மீளக் கையளிக்கும் நடவடிக்கைகள் வடகிழக்கில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சூழ்நிலையில், முஸ்லிம் மக்களிடமிருந்து அரசபடையினராலும் போராட்டக் குழுக்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டும் அபகரிக்கப்பட்டும் இருந்த காணிகளை அவற்றின் உரிமையாளர்களுக்கு மீண்டும் கையளிப்பதில் காட்டப்படும் அசமந்தப்போக்கில் மாற்றம் ஏற்பட்டாக வேண்டும் என தலைவர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

அத்துடன், அரசியலமைப்புச் சீர்திருத்தம், அதிகாரப் பரவலாக்கம், தேர்தல் மறுசீரமைப்பு என்பன பற்றி தலைவர் தெளிவுபடுத்தியதோடு குறிப்பாக உத்தேச தேர்தல் சீர்திருத்தம், உள்ளூராட்சி சபைகளுக்கான எல்லை மீள் நிருணயம் என்பவற்றின் விடிவாக சிறுபான்மைக் கட்சிகளும் சிறிய கட்சிகளும் எதிர்நோக்கும் ஆபத்துகளையும் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைகளின் நிர்வாகத்தை பொறுத்த வரையில் ஏனைய மாகாணங்களில் ஆளுநர்கள் ஒரு மெத்தனப் போக்கையும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்கள்கள் கடினப்போக்கையும் கையாண்டு வருவது குறித்தும் தலைவர் ரவூப் ஹக்கீம் விசனம் தெரிவித்தார். குறிப்பாக வரவு செலவுத் திட்டத்தில் கிழக்கு மாகாணத்துக்கான ஒதுக்கீட்டில் காட்டப்படும் பாரபட்சம், நிருவாகக் கட்டமைப்பில் காணப்படும் இழுபறி நிலை வளப்பங்கீட்டின் சமத்துவமின்மை முதலியவற்றிலும் தனது அதிருப்தியை அவர் வெளியிட்டார்.

இங்கு கருத்து தெரிவித்த கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளரும் சுகாதாரப் பிரதியமைச்சருமான பைசால் காசிம், கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் கைத்தறி நெசவுத் தொழிலை மேம்படுத்துவதற்கும் அதற்கான சந்தை வாய்ப்புகளை வெளிநாடுகளில் ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் கிழக்கு மாகாணத்தில் உல்லாசப் பிரயாணத் துறையை ஊக்குவிப்பதற்கும் கனேடிய அரசின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

# முஸ்லிம் தனியார் சட்ட திருத்தம்: உலமா சபை - முஸ்லிம் காங்கிரஸ் சந்திப்பு

முஸ்லிம் தனியார் சட்டத்தில் விட்டுக்கொடுப்புகளை செய்யும்போது பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியேற்படும். திருமணம் முடித்தவர்களுக்கு சரியானதொரு ஒழுக்கக்கோவையை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் விவாக, விவாகரத்து தொடர்பான விதிமுறைகளில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பிரதிநிதிகள், 14.03.2017இல் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை சந்தித்து கலந்துரையாடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில்,

முஸ்லிம் தனியார் சட்டத்தில் சர்ச்சைகளாக இருக்கின்ற பிரச்சினைகளுக்கு அப்பால், தீர்க்கக்கூடிய பிரச்சினைகளுக்கு முதலில் இனம்கண்டு அவற்றைத் தீர்க்கவேண்டும். அதேவேளை, முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் முன்வைக்கப்படும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்வுகாண்பது என்பது தொடர்பில் முதலில் கவனம் செலுத்தவேண்டும். வறுமையின் காரணமாகவே அதிகளவில் இளவயது திருமணங்கள் நடக்கின்றன. அதனை நிவர்த்திக்கும் வழிமுறைகளை தேடவேண்டும் என்று குறிப்பிட்டார்.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், அதற்கு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவும் இணக்கம் தெரிவித்துள்ளது. ஆனால், அந்த திருத்தங்கள் ஷரீஆ சட்டத்துக்கு முரண்படாத வகையில் இருந்தால் மாத்திரமே, அதற்கு அனுமதியளிப்பது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாக உலமா சபையினர் இதன்போது சுட்டிக்காட்டினர்.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் கட்டாயம் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென சில மகளிர் அமைப்புகள் சார்பிலும், சில பெண்ணியல் செயற்பாட்டாளர்கள் சார்பிலும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. இதற்குபதிலளிக்கும்வகையிலும், உலமாசபை மேற்கொள்ள தீர்மானித்திருக்கும் விடயங்களை தெளிவுபடுத்தும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ள ஆவணமொன்று அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் உலமா சபையினால் கையளிக்கப்பட்டது.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் உலமா சபை மேற்கொள்ளவுள்ள திருத்தங்களை அரசியல்வாதிகள் மூலம் அரசாங்கத்துடன் பேசுவதற்கும், மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் தீர்மானித்துள்ளதாக உலமா சபை பிரதிநிதிகள் தெரிவித்தனர். இந்த திருத்தம் தொடர்பாக தமது நிலைப்பாட்டை பாராளுமன்றத்தில் பேசுமாறு தலைவர் ரவூப் ஹக்கீமிடம் உலமா சபையினர் கோரிக்கை விடுத்தனர்.

திருமண வயதெல்லையில் கட்டுப்பாடு, பெண் காதிகளை நியமித்தல், பெண் பதிவாளர்களை நியமித்தல், 'வொலி' இல்லாமல் பெண்ணின் விருப்பத்துடன் திருமணம், பலதார திருமண கட்டுப்பாடு போன்றவற்றை தனியார் சட்டத்தில் திருத்தக்கோரும் கோரிக்கைகள் போன்ற பல விடயங்கள் இதில் ஆராயப்பட்டன.

திருமண வயதெல்லை என்ற விடயத்தில், பருவம டைந்ததும் திருமணம் செய்துகொள்ள இஸ்லாம் அனு மதித்துள்ளது. 18 வயதுக்குட்பட்டவர்கள் திருமணம் முடிப்பதற்கு தடை என்று நிபந்தனை விதிக்காமல், 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் திருமணம் முடிக்கலாம் என்று சிபார்சு செய்யப்பட்டது. அதேவேளை, பராம ரிப்பதற்கு ஆளில்லாதவர்கள், சொத்துகளை கையாள்வ தற்கு உரிய வயதை அடையாதவர்கள் என்று 18 வயதுக் குட்பட்டவர்கள் திருமணம் முடிப்பதை தடைசெய்ய முடியாது என்றும் வலியுறுத்தப்பட்டது.

2011 - 2016 வரையான காலப்பகுதியில் 14,737 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில் 5 சதவீதமானோர் மாத்திரமே 17 வயதுக்குட்பட்ட வயதில் திருமணம் முடித்துள்ளனர். வடக்கிலிருந்து புத்தளத்தில் இடம் பெயர்ந்து வாழ்வோர் அதிகளவில் இருப்பதினாலும், வறுமை காரணமாகவுமே அப்பகுதியில் அதிகளவில் இளவயது திருமணங்கள் நடப்பதாக சுட்டிக்காட்டப் பட்டன. அதேவேளை, இலங்கையில் ஒரு நாளைக்கு 16 வயதுக்கு குறைந்த 6 பேர் சராசரியாக பாலியல் துஷ் பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுவதாக புள்ளிவிபரங் கள் கூறுகின்றன.

அத்துடன், பெண்கள் தரப்பு பிரச்சினைகளை முன் வைப்பதற்காக காதி நீதிபதிகளுக்கு துணையாக பெண் களை நியமித்தல், பள்ளிவாசல்களை அண்டியவாறு திருமணம் சம்பந்தமான பிரச்சினைகளை தீர்ப்பதற் கான ஒரு மத்திய நிலையத்தை ஸ்தாபித்தல், தலாக் சொல்லப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளல், திருமண பதிவாளர்களுக்கான விழிப்புணர் வூட்டல் போன்ற பல கோரிக்கைகள் உலமா சபையி னரால் முன்வைக்கப்பட்டன.

மகளிர் தொடர்பான விவகாரங்களை கையாள்வதற் காக ஜம்இய்யத்துல் உலமாவில் விஷேட பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றின்மூலம் விவாகம் மற்றும் விவாகரத்தினால் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்மூலம் பிரிந்துபோகவிருந்த பெண்கள் பலர் அவர்களது கண வன்மாருடன் சேர்த்துவைக்கப்பட்டதாக சுட்டிக்காட் டப்பட்டது.

இச்சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வர் ரவூப் ஹக்கீம் அவர்களுடன் கட்சியின் பிரதி செய லாளர் நாயகம் சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், வெளி நாட்டு விவகார பணிப்பாளர் சட்டத்தரணி ஏ.எம். பாயிஸ் ஆகியோரும் ஜம்மிய்யத்துல் உலமா சார்பில் பொதுச் செயலாளர் மௌலவி எம்.எம்.ஏ. முபாறக், பொருளாளர் மௌலவி ஏ.எல்.எம். கலீல், உதவி பொதுச் செயலாளர்களான மௌலவி எம்.எஸ்.எம். தாஸீம், மௌலவி முர்ஷித், நிறைவேற்றுக்குழு உறுப் பினர்களான மௌலவி எஸ்.எல். நௌபர், மௌலவி முஹம்மட் பவாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



சவூதி அரேபியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அந்நாட்டு சுற்றுச்சூழல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் அப்துல் ரஹ்மான் அல்பத்லியை 12.03.2017இல் சந்தித்து சவூதி அரசாங்க நிதி உதவியுடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட வுள்ள குடிநீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடினர்.





# ஐக்கிய நாடுகள் சபை மக்கள் தொகை நிதியத்தின் பிரதிநிதிகள் - கிழக்கு முதலமைச்சர் சந்திப்பு

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியத்தின் (UNFPA) இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரதிநிதி ரிட்ஸு நெக்கன் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு திருகோணமலையிலுள்ள கிழக்கு முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில் கிழக்கு மாகாண கல்வியமைச்சர் எஸ். தண்டாயுதபானி மற்றும் முதலமைச்சரின் செயலாளர் யூ.ஏ.எல். அஸீஸ் உட்பட பல அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மார்ச் 20ஆம் திகதி இலங்கைக்கான பிரதிநிதியாக ரிட்ஸுநெக்கன்பதவியேற்றதன்பின்னர்கிழக்குமாகாண மக்கள் பிரதிநிதிகளுடன் முன்னெடுக்கப்படும் முதல் சந்திப்பு இதுவாகும்.

இதன்போது கிழக்கில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் சுட்டிக்காட்டிய கிழக்கு மாகாண முதலமைச்சர், போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மக்களின் சொந்தக் காணிகள் பல படையினர் மற்றும் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள நிலையில் மேலும் பல காணிகளை தொல்பொருள் முக்கியத்துவம் போன்ற போர்வையில் கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன்போது ஐக்கிய நாடுகளின் பிரதிநிதியிடம் எடுத்துரைக்கப்பட்டன.

அதுமாத்திரமன்றி கிழக்கில் தலைவிரித்தாடும் வறுமை மற்றும் வேலையில்லா பிரச்சினையினால் மாகாணத்தில் பொதுவான அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட்டாலும் தனிமனித வாழ்வாதாரத்தை கட்டியெழுப்புவதில் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகவும் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் சுட்டிக்காட்டினார்.

ஏனைய மாகாணங்களில் தனியார் தொழிற்துறைகள் மற்றும் புதிய தொழிற்துறைகள் உருவாகின்ற போதும் கிழக்கில் அவ்வாறான எவ்வித வாய்ப்புக்களோ தொழிற்துறைகளோ இன்மையால் பெரும்பாலான இளைஞர், யுவதிகள் இன்று தொழில்வாய்ப்பின்றி பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருவதாக கிழக்கு முதலமைச்சர் குறிப்பிட்டார்.


அத்துடன் இன்று படித்து பட்டம் பெற்ற இளைஞர், யுவதிகள் வீதிகளில் இறங்கி போராடவேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன், கிழக்கில் புதிய தொழிற்துறைகள் உருவாகாமையின் மூலமே இவ்வாறான நிலைமை தோன்றியுள்ளதாகவும் அவர் தெரியப்படுத்தினார்.

கிழக்கில் மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப புதிய தொழிற்துறைகளை உருவாக்குவதற்கு ஐக்கிய நாடுகள் சபை தமது முழு உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் தமக்கு வழங்க வேண்டுமென கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் வேண்டுகோள் விடுத்தார்.

கிழக்கில்புதியதொழில்வாய்ப்புகளைஉருவாக்கவும் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பவும் தேவையான முழுமையான ஒத்துழைப்புகளை வழங்க தயார் எனவும் அதற்கான பேச்சுவார்த்தைகளை எதிர்காலத்தில் கிழக்கு மாகாண சபையுடன் முன்னெடுக்கப்படும் எனவும் ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியத்தின் பிரதிநிதி ரிட்ஸு நக்கென் கருத்து தெரிவித்தார்.

‘யொவுன்புர’ நிகழ்வில் முதலமைச்சர்

# “பட்டதாரிகளின் கோரிக்கை நியாயமானது”



கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகள் முன்னெடுக்கும் எதிர்ப்பு நடவடிக்கைகள் தார்மீக ரீதியானவை எனவும் அவை அவசரமாக தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டுமெனவும் முதலமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

மாகாணங்களுக்கிடையில் வளங்களை பகிர்ந்தளிப்பதில் சமனிலைத்தன்மை இல்லாமையினாலேயே கிழக்கு மாகாணத்தில் இன்று வேலைவாய்ப்பின்மை அதிகரித்துள்ளது எனவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

திருகோணமலையின் மகேசர் அரங்கில் பிரமாண்ட கோலாகலத்துடன் ஆரம்பமான யொவுன்புர நிகழ்வில் கலந்து கொண்டு திரண்டிருந்த ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் சர்வதேச, உள்நாட்டு பிரதானிகளுக்கும் மத்தியில் உரையாற்றும்போதே கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இதனைத் தெரிவித்தார்.

முதலமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இனரீதியான, மொழிரீதியான சமநிலைத்தன்மை இலங்கையின் தொழில்வாய்ப்புகள் மற்றும் வளப்பங்கீட்டின்போது பேணப்படுவது அத்தியவசியமானது. இதனூடாக இளம் தலைமுறைக்கு மத்தியில் புதிய நம்பிக்கைகளை கட்டியெழுப்ப முடியும்.

அதுமாத்திரமன்றி பல்லின மொழிகளைப் பேசும் பல்லின கலாசாரங்களைப் பேசும் மக்கள் வாழும் நாட்டில் சமமான வளப்பங்கீடு அத்தியவசியமானது என்பதுடன் அதனூடாக மாத்திரமே நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை சாத்தியப்படுத்த முடியும்.

கிழக்கிலுள்ள வெற்றிடங்கள் உரிய வகையில் தீர்ப்பதற்கு நாம் பல முறை கோரிக்கை விடுத்தும் நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக இன்று நமது மாகாணம் கல்வியில் பின்தங்கிய மாகாணமாக உள்ளதுடன் வேலைவாய்ப்பற்றோரின் எண்ணிக்கையும் அதிகளவில் காணப்படுகின்றது.

விஷேடமாக படித்த இளைஞர், யுவதிகள் பலர் இன்று தொழில்வாய்ப்பின்றி போராட்டங்களை நடத்த வேண்டிய நிரப்பந்தத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையிலேயே பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவர்களை சந்தித்து எமது மாகாணத்தின் வெற்றிடங்கள் தொடர்பில் எடுத்துரைத்து தற்போது அது தொடர்பான விபரங்கள் அடங்கிய ஆவணங்களை நாம் திறைசேரியில் கையளித்திருக்கின்றோம்.

பிரதமர் வழங்கிய வாக்குறுதியின் பிரகாரம் தற்போது சாதகமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டும்.

எதிர்காலத்தில் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளிவருகின்ற பட்டதாரிகளுக்கு இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்கக்கூடிய நிலை வரக்கூடாது. அதற்காக இந்நாட்டின் கல்விமுறைமை மாற்றப்பட வேண்டும். நவீன தொழிற்சந்தைக்கு ஏற்ற விதத்திலான ஆங்கிலம் மற்றும் தொழில்நுட்பக் கல்வியறிவை இளைஞர்களுக்கு வழங்கும் விதத்தில் கல்வி முறைமை சீர்செய்யப்பட வேண்டும்.

இதனூடாக எமது இளைஞர் யுவதிகளுக்கு உள்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாடுகளிலும் சிறந்த தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள முடியும் என்பதை மிகத் தெளிவாக கூறிவைக்க விரும்புகிறேன்.

இங்குள்ள இளைஞர்களே! நீங்கள்தான் இந்நாட்டை வழிநடத்தப் போகின்றீர்கள். உங்கள் கையில்தான் இந்நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது. எனவே, அதற்கு நீங்கள் உங்களை தயார்படுத்திக்கொள்வது அவசியமாகின்றது.

இன, மொழி, மத பிரதேச வேறுபாடுகளை களைந்து நாம் அனைவரும் இலங்கையர் என்ற ஒரே எண்ணத்துடன் நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டிய காலகட்டம் பிறந்துள்ளது. அதற்கு இந்த யொவுன்புரய உங்களுக்கு மிகச் சிறந்த பயிற்சியை வழங்கும் என நான் நம்புகின்றேன்.

உங்களுடைய எதிர்காலத்தை தீர்மானிக்கும் வல்லமை இறைவனிடமும் உங்களிடமும் தான் உள்ளது. எனவே, நீங்கள் என்னவாக ஆகவேண்டும் என்பதை இன்றே தீர்மானித்துக் கொள்ளுங்கள். தீர்மானத்துக்கமைய உங்கள் திட்டங்களை இன்றிலிருந்தே ஆரம்பியுங்கள் என்றார்.

# அனுராதபுர விஜயமும் மீளெழுச்சி பெறும் கட்சியும்



✲ நாச்சியாதீவு பர்வீன்

இலங்கையின் வரலாற்றில் மிக முக்கிய பக்கங்களை அனுராதபுரம் நிரப்பியுள்ளது. சிங்கள பௌத்த இராசதானியாக பெயரும் புகழுடனும் விளங்கிய அனுராதபுரத்தில் சிங்கள மன்னர்கள் 90 பேர்கள் ஆட்சி புரிந்துள்ளதாக மகாவம்சம் கூறுகிறது. இதில் குறிப்பிட்ட சுமார் 44 ஆண்டுகள் எல்லாளன் எனும் தமிழ் மன்னன் ஆட்சி புரிந்தான். இலங்கையின் மிகப்பெரிய நிலப்பரப்பைக் கொண்ட அனுராதபுரம் மொத்த இலங்கையின் நிலப்பரப்பில் 16% கொண்டுள்ளது. இங்கு பெரும்பான்மையாக வாழ்கின்ற சிங்கள மக்களுடன் தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்ட தமிழர்களும் முஸ்லிம்களும் பின்னிப்பிணைந்து வாழ்கின்றனர்.

1981ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி அனுராதபுரம் நகர பிரதேசத்தில் தமிழ் பேசுகின்ற இனக்குழுமம் 51% இருந்ததாக பதிவுகள் கூறுகின்றன. இதன்பின்னர் 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற இனச்சுத்திகரிப்பின் மூலம் தமிழ் மக்களில் கணிசமான தொகையினர் தமது வாழ்விடங்கள், வியாபார நிலையங்கள் நிலபுலங்கள் ஆகியவற்றை விற்றுவிட்டு வடகிழக்கை நோக்கியும் வெளிநாடுகளுக்கும் சென்றுவிட்டனர் ஆனால் தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்ட முஸ்லிம்கள் அனுராதபுரத்தை விட்டு எங்கும் புலம்பெயரவில்லை.

நன்றி: நவமணி
31.01.2017

இந்நிலையில் அனுராதபுர மாவட்ட முஸ்லிம்கள் காலதிகாலமாக ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரிப்ப வர்களாகவே காணப்பட்டனர். இதனை நிரூபிக்கும் வண்ணம் முதலாவது மாவட்ட சபை தேர்தலில் அனு ராதபுர மாவட்டத்திலிருந்து கம்பிரிகஸ்வெவ பிரதேச த்தை சேர்ந்த மூஸின் லெப்பை தெரிவு செய்யப்பட்டார். மாவட்ட சபையானது பின்னர் மாகாண சபையாக மாற் றப்பட்டது. முதலாவது மாகாண சபையானது 1988 ஆம் ஆண்டு நடைபெற்றது இதில் அனுராதபுரத்திலிருந்து மூன்று முஸ்லிம்கள் ஐக்கிய தேசியக்கட்சியிலும் பொது ஜன ஐக்கிய முன்னணி சார்பில் ஒருவரும் தேர்தல் களத் தில் குதித்தனர் இதன்போது ஐக்கிய தேசியக்கட்சி சார் பில் போட்டியிட்ட மூன்று முஸ்லிம் அபேட்சகர்களும் வெற்றிபெற்றனர் நொச்சியாகம அப்துல் ஹமீது, நாச்சி யாதீவு சாஹுல் ஹமீது, கஹடகஸ்திகிலிய ஈத்தல்வெட் டுனுவெவ நசாப் ஆசிரியர் ஆகியோரே வெற்றிபெற்ற மூவரும் ஆவார்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியில் களமிறங்கிய அபேட்சகர் தோல்வியடைந்தார்.

இதன்பின்னர் 1989/90களில் நடைபெற்ற பிரதேச சபை தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியானது அனுராதபுர தேர்தல் களத்தில் அறிமுகமாகியது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் முதன்முதலாக அனுராதபுர மாவட்ட கிராமங்களுக்கு விஜயங்களை மேற்கொண்டார். குறிப் பாக நாச்சியாதீவு, கட்டுகெலியாவ, காலவெவ எட்டூர் போன்ற முஸ்லிம்கள் செறிவாக வாழ்கின்ற பிரதேசங் களை மையமாக வைத்தே அவரது விஜயம் அமைந் திருந்தது மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களை அனுராதபு ரத்திற்கு கொண்டு வருவதில் நாச்சியாதீவை சேர்ந்த முஹம்மது முஸாதிக், சட்டத்தரணி இப்ராஹிம் போன் றோர் முன்னின்று செயற்பட்டனர். பிரதேசசபைத் தேர் தலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக பலர் களமிறங்கினர் அதிலும் திறப்பனை பிரதேச சபையில் சகோதரர் முஸா திக் மரச்சின்னத்தில் களமிறங்கினார் அந்தத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட யாரும் வெற்றிபெறவில்லை. மர்ஹூம் அஷ்ரஃப் அவர் களின் தலைமையிலான முஸ்லிம்களுக்கான ஒரு கட்சி பற்றிய பரிட்சயமும் அவதானமும் அனுராதபுரத்து முஸ்லிம்கள் மத்தியில் ஏற்பட்டது எனலாம்.

மறைந்த பெருந்தலைவர் முஸ்லிம் சமூகத்தின் இருப்புக்காகவும், உரிமைக்காகவும் தேசியத்தில் நடத் திய அறப்போராட்டங்களை ஊடகங்கள் நாடளாவிய ரீதியில் வெகுவாக பரவச்செய்தன. அரது சமூகம் சார்ந்த அக்கறை மற்றும் செயற்பாடுகள் இலங்கை முழுவ திலும் முஸ்லிம் சமூகத்தினரிடம் நல்ல அங்கீகாரத்தை வழங்கியது. பெரும்பான்மை கட்சிகளின் பின்னால் அலைந்து கொண்டிருந்த முஸ்லிம் சமூகத்தை திரும்பிப் பார்க்க வைத்தது. பெருந்தலைவர் மர்ஹூம் அஷ்ரஃப் செல்லுமிடமெல்லாம் கூட்டம் அலைமோதியது. இச் சாதகமானகளநிலவரத்தை மர்ஹூம் அஷ்ரஃப் அவர்கள் வடகிழக்கையும் தாண்டி முஸ்லிம்கள் சிறுபான்மை யாக வாழுகின்ற பிரதேசங்களில் பரீட்சித்துப் பார்த்தார். அதற்காக 1993ஆம் ஆண்டு இரண்டாவது மாகாண சபைத் தேர்தலில் மரச்சின்னத்தில் ஓய்வு பெற்ற அதிபர் இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவையின் அறிவுக்களஞ்சியம் புகழ் ஏ.சி. ராவுத்தர் நெய்னா முஹம்மது அவர்களை அனுராதபுரத்தில் கள மிறங்கினார். ஐக்கிய தேசியக் கட்சி கோலோச்சிய ஒரு மாவட்டத்தில் ஒரு சிறுபான்மை சமூகத்தின் கட்சியினை சொற்ப முஸ்லிம் வாக்குகளை மட்டுமே கொண்டுள்ள அனுராதபுரத்தில் களமிறக்கியதானது தலைவரின் ச ாணக்கியத்துக்கான மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அத்தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனு ராதபுரத்தில் 5005 வாக்குகள் பெற்றது. தலைவரின் சா ணக்கியம் 1988ஆம் ஆண்டு முதலாவது மாகாண சபைத் தேர்தலில் நிரூபிக்கப்பட்டது. அதாவது வட, கிழக் கையும் தாண்டி முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழுகின்ற மாவட்டங்களில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங் கிரஸ் களமிறங்கி மாத்தளை, புத்தளம், கண்டி, களுத் துறை என்று பல மாவட்டங்களில் போட்டியிட்டு சுமார் பத்துக்கும் மேற்பட்ட மாகாண சபை ஆசனங்களை பெற்றது. அவ்வியூகம் அனுராதபுரத்தில் 1993 ஆண்டில் வெற்றிபெற்றது. ஆம் எஞ்சிய வாக்குகளில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு அனுராதபுரத்தில் ஒரு ஆசனம் கிடைத்தது. இந்த ஆசனமானது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இலகுவில் கிடைக்கவில்லை மாறாக பலம் வாய்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் மிரட்டல், எவ்வித ஆள்பலமும் பணபலமும் இல்லாமை, பெரும் பான்மைக் கட்சிகளினால் கட்சியின் ஆதரவாளர்கள் காவு கொள்ளப்பட்டமை இப்படி பல தடைகளையும் தாண்டி அனுராதபுத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கால் பதித்தது. அதேநேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்ட அப்துல் ஹமீது மாத்திரமே அனுராதபுத்தில் அக்கட்சி சார்பாக 1993 தேர்தலில் வெற்றிபெற்றார்.

1993 ஆண்டு ராவுத்தர் நெய்னா முஹம்மது அனுராத புரத்தில் வெற்றி பெற்றதன் பிற்பாடு அனுராதபுரத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிராமங்கள் தோறும் ஊடு ருவ ஆரம்பித்தது. உரிமைக்கான கட்சியாக முஸ்லிம்க ளினால் பார்க்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அபிவிருத்தியையும் அதனோடு இணைத்து செயற்பட ஆரம்பித்தது. தொடர்ந்தும் பொதுஜன ஐக்கிய முன்னணி யில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து முன்றா வது மாகாண சபைத்தேர்தலில் களமிறங்கியது அதிலும் தனது ஆசனத்தை தக்கவைத்துக்கொண்டது. இரண் டாவது தடவையாகவும் ராவுத்தர் நெய்னா முகம்மது வடமத்திய மாகாண சபை உறுப்பினராக தெரிவு செய் யப்பட்டார், இதன்பிறகு நான்காவது மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து மரச் சின்னத்தில் களமிறங்கியது அத்தேர்தலில் 15,775 வாக் குகளை பெற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனக் கான ஆசனத்தை லாவகமாக தக்கவைத்துக்கொண்டது. அதிலும் மூன்றாவது தடவையாக ராவுத்தர் நெய்னா முஹம்மது தெரிவு செய்யப்பட்டார்.

1993ஆம் ஆண்டில் வெறும் 5005 வாக்குகள் பெற்ற ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் 2003/04 ஆண்டு 15775 வாக்குகள் பெறுவதென்பது பத்து ஆண்டுகளில் 10,000



*வாக்குகளை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதிகரித்து தனது வளர்ச்சியை நிறுவி நின்றது. இவ்வாக்கு வங்கியிலான முன்னேற்றம் அனுராதபுரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அசுர வளர்ச்சியை கோடிட்டு காட்டியது. இதன்பின்னர் அனுராதபுர கிராமங்கள் தோறும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் பரவியிருந்தனர். ஐந்தாவது மாகாண சபைத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து களமிறங்கியது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். அதிலும் நான்காவது தடவையாக 15 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர் ராவுத்தர் நெய்னா முஹம்மது தெரிவு செய்யப்பட்டார்.*

*தொடர்ச்சியாக நான்கு தடவைகள் வடமத்திய மாகாண சபையை அலங்கரித்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வேட்பாளர் ராவுத்தர் நெய்னா முஹம்மது ஒரு சிறந்த கல்விப்பரம்பரையை அனுராதபுரத்தில் உருவாக்குவதில் கரிசனையுடன் செயற்பட்டார். 1993 ஆம் ஆண்டு வெற்றி பெற்றதன் பின்னர் நிறுத்திவைக்கப்பட்ட 28 முஸ்லிம் தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனத்தை துரிதமாக பெற்றுக்கொடுத்தார். பின்னர் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரத்துங்க ஜனாதிபதியாக இருந்த போது அவருடன் நேரடியாக பேசி அனுராதபுரத்தில் 223 பேருக்கு ஆசிரியர் நியமனத்தை பெற்றுக்கொடுத்தார் அதன்பிறகு 87 ஆசிரியர் நியமனங்கள், பின்னர் கடைசியாக 290 ஆசிரியர் நியமனங்கள் என தனது மாகாண சபை காலஎல்லையில் கல்வித்துறையின் முன்னேற்றத்திற்கு இதய சுத்தியுடன் இயங்கினார்.*

*மாகாண சபையினால் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து முடியுமான அளவு ஒவ்வொரு முஸ்லிம் கிராமங்களுக்கும் வளப்பங்கீட்டினை வழங்கினார். பாதைகளை செப்பனிட்டார், முஸ்லிம் பாடசாலைகளின் தேவைகளை உரிய அதிகாரிகளுடன் போராடி கணிசமான அளவுக்கு பெற்றுக்கொடுத்தார். சிங்கள முஸ்லிம் இன நல்லுறவை பேணுவதிலும் உருவாக்குவதிலும் அர்ப்பணிப்புடன் இயங்கினார். பல பௌத்த விகாரைகளுக்கு தனது ஒதுக்கீட்டின் மூலம் உதவி செய்தார். இவரது செயற்பாடுகளால் கட்சிக்கு நிரந்தரமான தொண்டர் படையொன்று உருவாகியது.*

*அதுமட்டுமல்லாமல் அனுராதபுர மாவட்டத்தில் பல பிரதேச சபைகளில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்தவர்கள் அங்கம் வகித்தார்கள் குறிப்பாக அனுராதபுரம் நுவரகம் பலாத்தையில் ஜலால்தீன், கஹடகஸ்திகிலிய பிரதேசசபையில் இக்பால், கெக்கிராவ பிரதேச சபையில் ரபீக் ஆசிரியர் மற்றும் பாரூக், பலாகல பிரதேச சபையில் முஸ்தபா, ஹொரவபொத்தானை பிரதேச சபையில் முபாரக் மௌலவி மற்றும் அமீர் போன்றோர் ஏககாலத்தில் பிரதேச சபை அங்கத்தவர்களாக தெரிவு செயற்பட்டனர். இதன்பின்னர் கெக்கிராவையில் கபீர் ஆசிரியர், கஹடகஸ்திகிலிய பிரதேச சபையில் முபாரக் ஆசிரியர், ஹொரவபொத்தானை பிரதேச சபையில் அஸ்மி ஆகியோர் வெவேறு காலங்களில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்தவர்காளாக தெரிவு செய்யப்பட்டனர்.*

*ராவுத்தர் நெய்னா முகம்மது சுமார் இருபது (20) வருடங்கள் அனுராதபுர மாவட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி நிதியாக செயற்பட்ட காலத்தில் பல அபிவிருத்தி பணிகளையும் செய்திருந்தார், கணிசமான அளவில் வேலைவாய்ப்புக்களை வழங்கியிருந்தார், எனவே அனுராதபுரத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு நிலையான வாக்கு வங்கி இருந்தது.*

*ஆனால், 2012ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அனுராதபுரத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து வெற்றிலைச் சின்னத்தில் களமிறங்கியதோடு, அதன் கோட்டையான கிழக்கு மாகாணத்தில் தனித்து களமிறங்கியது. பொதுவாக அத்தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரசாரம் அரசுக்கு எதிராக இருந்த காரணத்தினால்,*

அனுராதபுரத்தில் அரசாங்கத்துடன் இணைந்து போட்டியிட்ட கட்சியன் வேட்பாளருக்கு ஒரு பாதகமான நிலையை தோற்றுவித்தது. மஹிந்த அரசின் மீதான முஸ்லிம்களின் வெறுப்பும் மெல்லிய கோடுபோல உரு வெடுத்து வந்தமையினாலும் மஹிந்த அரசின் மீதான வெறுப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது 20 வருட பிரதிநிதித்துவத்தை அனுராதபுரத்தில் இழக்க காரணமாக அமைந்தது. இவ்விழப்பானது பிற்பட்ட காலங்களில் அனுராதபுர முஸ்லிம்களுக்கு மிகுந்த பாதிப்பை உண்டு பண்ணியது.

தோல்வியடைந்த ராவுத்தர் நெய்னா முஹம்மது கட்சியை விட்டு ஒதுங்கியிருந்தார். கட்சியின் ஆதரவாளர்கள் யாருடன் இணைவது அல்லது என்ன செய்வது என்கின்ற தெளிவான நிலை தெரியாமல் இருந்தனர். மூன்று வருடங்களாக ஒரு உறைநிலை தொடர்ந்தது. அனுராதபுரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அழிந்து போய்விட்டதாக சிலர் கருதினர். தலைவருடனான தொடர்புகளை இதன்பிறகு யாரும் மேற்கொள்ளவில்லை ஆனால் அனுராதபுரத்தில் கட்சியின் போராளிகள் அதே விசுவாசத்துடன் இன்னும் இருப்பது தலைவரும் தெரிந்து வைத்திருந்தார்.

2015இல் நல்லாட்சி அரசின் காத்திரமான பங்காளர்களான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமது வேர்கள் பரவியிருந்த இடங்கள் தோறும் மீளெழுச்சி பயணத்தை தொடங்கியது. நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சரான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமின் சேவை அனுராதபுர மாவட்டத்தின் வறண்ட பிரதேசங்களுக்கு நீர் தெளித்தது.

ராவுத்தர் நெய்னா முகம்மது அவர்கள் இல்லாத கடந்த மூன்று வருடங்களில் அனுராதபுர முஸ்லிம்கள் தமது நியாயமான தேவைகளை பெற்றுக்கொள்வதில் பலத்த சிரமத்தை எதிர்நோக்கினர். இவ்இடைவெளியானது உரிமைக்காக குரல் கொடுக்கின்ற ஒரு நேர்மையான பிரதிநிதியின் தேவையை அனுராதபுர முஸ்லிம்களுக்கு உணர்த்தியது. அரச வளப்பங்கீடுகளில் சரியான பாத்தியம் கிடைக்கவில்லை. வேலைவாய்ப்புகள் விகிதாசார முறைக்கேற்பவழங்கப்படவில்லை. தமிழ்மொழி மூல விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்கள் சிங்களப் பாடசாலைகளுக்கு இரண்டாம் மொழி தமிழ் கற்பிக்க நியமனம் செய்யப்பட்டனர். பயிற்றப்பட்ட கணித ஆசிரியர் சிங்களப்பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டனர் இவ்வாறான சமநிலையை தகர்க்கும் அநேகமான நிகழ்வுகள் நடந்தேறின. கடந்த காலங்களில் ராவுத்தர் நெய்னா முஹம்மது இவ்வாறான முரண்பாடான செயற்பாடுகளின் போது துணிந்து நின்று போராடி அவற்றை பெற்றுக்கொடுத்தார். எனவே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதி ஒருவரின் தேவையும் அவசியமும் இடைப்பட்ட காலங்களில் உணரப்பட்டே வந்தன.

இதன் அடிப்படையில் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ராவுத்தர் நெய்னா முஹம்மதுக்கு அனுராதபுர மாவட்ட கட்சி ஆதரவாளர்கள் தொடர்ச்சியாக கொடுத்துவந்த அழுத்தம் கட்சியின் தலைமைத்துவத்திற்கு அனுராதபுரத்து முஸ்லிம்களின் மீதான நம்பிக்கை என்பன கட்சியை மீண்டும் கட்டியெழுப்பும் அல்லது கட்சியை நிமிர்த்தியெடுக்கும் பணியில் அவர்களை செயற்பட வைத்துள்ளது எனலாம். அனுராதபுரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் இன்னும் உயிர்ப்புடன் உள்ளார்கள் என்பதனை தலைவர் ரவூப் ஹக்கீமின் அண்மைய அனுராதபுர விஜயம் நிறுவி நிற்கிறது.


19.01.2017இல் அனுராதபுரத்திற்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் விஜயமொன்றை மேற்கொண்டார். அனுராதபுரம் கஹடகஸ்திகிலிய பிரதேச சபைக்கு உற்பட்ட இரண்டு கிராமங்களுக்கு நீர் வழங்குவதற்கும் கலந்தபிந்துனுவெவ, யக்கல்ல பிரதேசத்தில் இரண்டு கிராமங்களுக்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரங்களை பாவனையாளர்களுக்கு கையளிப்பதற்கும் நாச்சியாதீவு பிரதேசத்தில் கடந்த அரசாங்கத்தினால் தோண்டப்பட்ட கொடவானை பார்வையிடவும், அனுராதபுரம் ஸாஹிரா தேசிய பாடசாலை விளையாட்டு மைதானத்திற்கு புனர்நிர்மானம் செய்வதற்கான அடிக்கல் நடும் வைபவத்திற்கும் என அவரது அன்றைய நாள் நிகழ்வுகள் மிகுந்த பரபரப்பாக இருந்தன. இருந்தும் மாலை 7 மணி தொடக்கம் இரவு 10 மணி வரைக்கும் அனுராதபுரத்தில் கட்சி ஆதரவாளர்கள், முக்கியஸ்தர்கள், பிரதேச மற்றும் தொகுதி அமைப்பாளர்கள் என்று விரிவான கலந்துரையாடலில் ஈடுபட்டார். கடந்த மூன்று ஆண்டுகள் தொடர்பறுந்திருந்த நிலையில் உறங்கு நிலையில் இருந்த ஆதரவாளர்கள் தலைவரை வளைத்து நின்று தமது ஆதங்கங்களை வெளிப்படுத்தினர். இனி தொடராக அனுராதபுரத்திற்கு வருவதாகவும் இங்கும் தொடரான அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதாகவும் தலைவர் ரவூப் ஹக்கீம் இதன்போது உறுதியளித்தார்.

அனுராதபுர மாவட்டத்தை பொறுத்தமட்டில் வறண்ட காலநிலையைக் கொண்ட பிரதேசமாகும். அநேகமான பிரதேசங்களில் குடிநீர் பிரச்சினைகள் நிலவுகின்றன. சுத்தமற்ற நீரினால் ஏற்படக்கூடிய உயிர் ஆபத்தை விளைவிக்கும் பல நோய்கள் இங்கே இலகுவில் வந்துவிடுகிறது. குறிப்பாக சிறுநீரகம் பாதிப்புள்ளவர்கள் அதிகளவில் அனுராதபுரத்தில் காணப்படுகின்றர். எனவே நீர் வழங்கல் அமைச்சரான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் பரந்துபட்ட சேவை இந்த மாவட்டத்திற்கு தேவை. அத்தேவையை தனது பிரதிநிதி ராவுத்தர் நெய்னா முஹம்மது அவர்களினூடாக தலைவர் நிறைவேற்றுவார்.

எப்படியோ அனுராதபுரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மீளெழுச்சியானது சிலரின் வயிற்றில் புளியைக் கரைத்தாலும் அது இன்னும் பலரின் வயிற்றில் பாலை வார்த்துள்ளது.

# காணிப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முயற்சிகள் ஒழுங்குபடுத்தப்படவேண்டும்

*"யுத்தத்தினாலும், இன விரிசல்களினாலும் பாதிப்புக்குள்ளான மக்களின் உரிமைக்கான எழுச்சிப் பயணம் என்ற தொனிப்பொருளில் மனித எழுச்சி நிறுவனம், காணி உரிமைக்கான அம்பாறை மாவட்ட செயலணி, யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான செயலணி ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்பட்டு அக்கரைப்பற்று அதாஉல்லா அரங்கில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆற்றிய உரை."*



நன்றி: விடிவெள்ளி
22.02.2017

✲ பிறவ்ஸ் முஹம்மட்

கடந்த 30 வருடகாலமாக நாட்டில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தினால் ஏற்பட்ட இழப்புகளை ஆவணப்படுத்தும் நடவடிக்கையில் மனித எழுச்சி நிறுவனம் ஈடுபட்டு வருகிறது. இழப்பீடுகளை பெறும் நோக்கில் உயிரிழப்புகளை சந்தித்தோர், பலவந்தமாக வெளியேற்றப்பட்டோர், உடமைகளை இழந்தோர், அங்கவீனமுற்றோர் என்று பாதிக்கப்பட்டவர்களின் விபரங்களை ஒன்றுதிரட்டி ஒரு புத்தகமாக தயாரித்து ஒரு மாதத்துக்கு முன்னரே என்னிடம் கையளித்தனர்.

இவ்வாறான ஒரு ஆவணத்தை வெளியிட்டு வைப்பது மாத்திரமின்றி, இதனை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு செயற்திட்டம் இருக்கவேண்டும். இதற்காக ஒரு செயலமர்வை நடாத்தவேண்டும். அதன்போது பாதிக்கப்பட்டவர்களில் ஒரு தொகுதியினரை ஒன்றுதிரட்ட வேண்டும் என்ற கோரிக்கையை ஹைருதீன் என்னிடம் முன்வைத்தார். அந்த ஏற்பாட்டின் பிரகாரம்தான் இந்நிகழ்வு அக்கரைப்பற்றில் நடைபெறுகிறது.

நல்லாட்சி அரசாங்கத்தில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பலவாறான செயற்திட்டங்கள் முடக்கி விடப்பட்டுள்ள நிலையில், அவற்றில் ஒருவிதமான முடக்கம் தற்போதும் காணப்படுகின்றது. இந்நிலையில் நீண்டகாலமாக தேங்கிக்கிடக்கும் இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகாணும் தார்மீகப் பொறுப்பு அரசியல் தலைமைகளுக்கு இருக்கிறது. அதேபோன்று சிவில் சமூகத்தின் மத்தியிலும் இப்பிரச்சினைகள் தற்போது அலசி ஆராயப்பட்டு வருகின்றன.

கடந்த ஆட்சியில் யுத்தம் முடிவுற்ற நிலையில், இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயங்களை கிடப்பில் போடமுடியாது என்ற நிலைப்பாட்டில் சர்வதேசம் அதில் தலையிட்டது. இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் இவற்றுக்கு காரணமான பிரச்சினைகளுக்கான தீர்வு என்பவற்றுக்காக நிலைமாறு கால நீதிக்கான ஒரு பொறிமுறை அமையப்பெறவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தை ஜெனீவா தீர்மானம் வலியுறுத்துகின்றது. சர்வதேச மனித உரிமைகள் சாசனத்துக்கும், சர்வதேச மனித உரிமையின் நியமங்களுக்கும் ஏற்ப இலங்கை அரசாங்கம் அதற்கு வகைகூறும் வகையில், இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வலியுறுத்தப்படுகிறது.

இலங்கை விவகாரம் தொடர்பிலான ஜெனீவா தீர்மானம் கொண்டுவரப்பட்டு, ஒருசில திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. 2009இல் கொண்டுவரப்பட்ட இத்தீர்மானம் சர்வதேச மனித உரிமைகள் பேரவை மாநாட்டில், இம்மாதம் 29 முதல் அடுத்த மாதம் இறுதிவரை விவாதிக்கப்படும் ஒரு பேசுபொருளாக மாறியுள்ளது. 6 மாதங்களுக்கு ஒரு முறை ஜெனீவாவில் கையாளப்படும் இலங்கை விவகாரம், நல்லாட்சி வருகையின் பின்னர் இலங்கைக்கு 2 வருட காலஅவகாசம் வழங்கப்பட்டது. இவ்அவகாசம் 23ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

ஜெனீவா தீர்மானத்தை கையாள்வதில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைளை சர்வதேச சமூகம் மீளாய்வு செய்கின்ற, தொடர்ந்தும் அதனை பரிசீலனைக்கு உட்படுத்துகின்ற ஒரு கட்டத்துக்கு இலங்கை ஆளாகியுள்ளது. அவ்வாறானதொரு சூழலில் அக்கரைப்பற்றில் நடைபெறும் இச்சந்திப்பு மிக முக்கியமானது. ஜெனீவா பேரவையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பங்குபெறும் அமர்வுகளில், இந்த விவகாரங்கள் கையாளப்படுவதற்கான ஒரு பின்புலத்தை இத்தகைய அமைப்புகள் உருவாக்க வேண்டும்.

ஜெனீவா தீர்மானத்தில் இலங்கை குற்றவாளிக் கூண்டில் நின்றுகொண்டிருப்பதால், இப்படியான பிரச்சினைகளை உங்களது சார்பில் அரசாங்கம் பேசப்போவதில்லை. இவ்வாறான சூழ்நிலையில், அரசாங்கத்துக்கு எதிரானசாட்சியாளர்களாக உங்களைப் போன்ற அமைப்புகள், அனுபவமுள்ள சர்வதேச வலைப்பின்னலுடன் கூடிய ஏனைய அமைப்புகளுடன் தொடர்பாடல்களை மேற்கொள்ளவேண்டும் என்று ஹைருதீனிடம் நான் ஏற்கனவே சொல்லியிருந்தேன்.

இப்பிரச்சினைகள் சர்வதேச சமூகத்துக்கு முன்னால் பொதுப்படையாக பேசப்படவேண்டும். இவற்றுக்கு தீர்வு காணப்படாமைக்கான காரணிகளுக்கு சர்வதேச அழுத்தம் ஏற்படுத்தப்படுவதற்கான ஒரு பின்புலத்தை நாங்கள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதேநேரம், அரசாங்கம் இவ்விடயத்தில் சில பொறிமுறைகளை உருவாக்கியிருக்கிறது. காணாமல்போனோருக்கான ஒரு அலுவலகம் மற்றும் அதற்கான சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அத்துடன் உயிரிழப்புகள் தொடர்பான சில உள்நாட்டு பொறிமுறைகளை அமைப்பதற்கும் அரசாங்கம் உறுதிமொழி வழங்கியுள்ளது. அது உள்ளக விசாரணையா அல்லது சர்வதேச விசாரணையா என்று ஒரு பக்கமும் ஆட்சியாளர்கள் வெவ்வேறுபட்ட பல முரண்பாட்டு கருத்துகளை தெரிவித்து வருவதினாலும் இவ்விடயம் தொடர்ந்தும் இழுபறி நிலையிலேயே கிடக்கிறது.

இம்மாதம் 29 முதல் மார்ச் இறுதிவரை ஜெனீவாவில் நடைபெறும் மனித உரிமைகள் பேரவை மாநாட்டில் மேற்படி விடயங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஆராயப்படும். இலங்கைக்கு எதிரான பிரேரணையை கொண்டுவந்த அமெரிக்காவில் தற்போது ஆட்சிமாற்றம் நடந்துள்ளது. புதிய ஆட்சியாளர்கள் குறித்தும் தெளிவில்லாத ஒருநிலை காணப்படுவதால், இலங்கை மீதான விசாரணை, இலங்கை வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பில் சிக்கல்நிலை காணப்படுகின்றது.

இலங்கை வழங்கிய வாக்குறுதிகள் தொடர்பில் ஏற்படும் சர்வதேச அழுத்தத்தை எதிர்கொள்வது தொடர்பாக பிரதமர் தலைமையில், வெளிவிவகார அதிகாரிகளுடன் ஒருசில அமைச்சர்களுடன் கூடி நாங்கள் அடிக்கடி கலந்துரையாடி வருகிறோம். பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு மாற்றமாக புதிய சட்டத்தை கொண்டு




வருவதற்கு யோசித்து வருகிறோம். ஆனால், அரசியல் பிரச்சினைகளின் தலையீட்டினால் தற்போது அதுவும் தொங்கு நிலையிலேயே காணப்படுகிறது.

இதுபோன்று பல்வேறு சட்டவாக்கங்களை உருவாக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு இலங்கை அரசாங்கம் ஆளாகியுள்ளது. பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போகச் செய்வதை ஒரு குற்றமாக்குவதற்கு அடுத்த வாரமளவில் பாராளுமன்றில் விவாதம் நடைபெறவுள்ளது. இதனை கடந்த அரசாங்கம் தண்டனைக் கோவையில் சேர்ப்பதை தவிர்த்து வந்தது. ஆனால், தற்போதைய அரசாங்கம் ஏற்றுக்கொண்டு அதனை தண்டனைக் கோவையில் உள்வாங்க முன்வந்துள்ளது.

பழைய சம்பவங்களை வைத்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது என்பது, இலங்கையின் தண்டனைக் கோவையின் பிரகாரம் சாத்தியமான விடயமல்ல. அதற்கென கால எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆனால், பலவந்தமாக கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போகச் செய்வதற்கு எதிராக காலவரையறையின்றி குற்றப்பத்திரம் தாக்கல் செய்யமுடியும் என்பது சர்வதேச நியதி.

நான் நீதியமைச்சராக இருந்த காலத்திலிருந்து இதனை குற்றமாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தும் கைகூடவில்லை. நல்லாட்சியில்தான் அது நிறைவேறியிருக்கிறது. அதுபோல ஆட்சியுரிமை சட்டத்தில் ஒரு மாற்றத்தை கொண்டுவர பிரயத்தனம் மேற்கொண்டேன். அப்போது அரசாங்கத்திலிருந்த சில தீவிரப்போக்குடைய அமைச்சர்கள் அதனைத் தடுத்த பின்னணியில், பாராளுமன்றம் வந்தும் அந்த திருத்தத்தை நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது. அச்சட்டத் திருத்தத்தை தற்போதைய அரசாங்கத்தில் நிறைவேற்றியிருக்கிறோம்.

ஆட்சியுரிமை சட்டம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினால் சில செயலமர்வுகளை நடாத்தியிருந்தோம். யுத்தகாலத்தில் தங்களது காணிகளை பலவந்தமாக விற்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்கள், குறைந்த விலையில் காணிகளை விற்பதற்கு தூண்டப்பட்டவர்கள், சுயமாக காணிகளை விட்டு வெளியேறியவர்கள், பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர்கள் போன்றவர்களின் காணிகளில் வேறு இனத்தவர்கள் கைப்பற்றி அனுபவித்து வரும்நிலையில், சொந்தக் காணிகளை மீளப்பெறுவதற்கு ஆட்சியுரிமை சட்டம் தடையாக இருந்தது. இதனால், இலங்கையில் வன்முறை நடைமுறையிலிருந்த குறித்த காலத்துக்கு ஆட்சியுரிமை சட்டம் செல்லுபடியாகாது என்ற சட்டத் திருத்தத்தை கொண்டு வந்தோம்.

இந்த சட்டமூலம் நடைமுறைக்கு வந்து இரு வருடங்களுக்குள் காணிகளின் உரிமையாளர்கள் முறைப்பாடு செய்யவேண்டும். சட்டம் அமுல்படுத்தப்பட்டு தற்போது 6 மாதங்கள் கடந்துள்ள நிலையில், எஞ்சிய ஒன்றரை வருட காலத்துக்குள் காணிகளை இழந்தவர்கள் அதனை மீளப்பெறுவதற்காக விண்ணப்பிக்க வேண்டும். 2 வருடங்களுக்குள் இந்த சட்டமூலத்தை பாவிக்காவிட்டால், நாங்கள் மீண்டும் நஷ்டவாளிகளாக மாறிவிடுவோம். அதற்காகவே மக்களை விழிப்புணர்வூட்டும் வகையில் நாங்கள் பல செயலமர்வுகளை நடத்தியிருக்கிறோம்.

கடந்த காலங்களில் நடைபெற்ற யுத்தங்கள் மற்றும் வன்முறைகளால் உயிரிழந்தோர், அங்கவீனமுற்றோர், காணாமல்போனோர் விடயங்களை நாம் தனியான முறையில் அணுகவேண்டும். அவற்றை கையாள்வது குறித்து நாங்கள் பின்னர் ஆராய்வோம். தற்போது காணிகளை இழந்தவர்கள் பற்றிப் பார்ப்போம். அத்துடன், இழந்த காணிகளை மீளப்பெறுவதற்கு மேற்கொள்ள



வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்வோம்.

காணியிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்டோர், இடையிடையே பயிர்செய்து திரும்பவும் போக முடியமால் உள்ள காணி சொந்தக்காரர்கள் விடயத்தில் முக்கியமாக 3 அரச திணைக்களங்கள் தடையாக உள்ளன. வனபரிபாலன திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், தொல் பொருளியல் திணைக்களம் என்பனவே அவையாகும். ஜெனீவா தீர்மானத்தில் சொல்லப்படும் 2002ஆம் ஆண்டின் பின்னர், வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இக்காணிகளை மக்கள் பயன் படுத்தாதவாறு மேற்படி மூன்று திணைக்களங்களும் வேண்டுமென்றே தங்களது ஆளுகைக்கு உட்படுத்தியுள்ளன.

இந்த 3 திணைக்களங்களின் மேலதிகாரிகள், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர், அம்பாறை மாவட்ட செயலாளர், பிரதேச செயாளர்கள், மாகாண காணி ஆணையாளர், மாவட்ட காணி அதிகாரிகள் ஆகியோரை எதிர் வரும் 23ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு அழைத்து காணிப் பிரச்சினைகள் தொடர்பில் மக்களின் நியாயங்களை தெளிவுபடுத்தவுள்ளோம். எல்லோரையும் ஒரே மேசைக்கு அழைத்து, பிரச்சினைக்கு விரைவாக தீர்வு காண்பதற்கான வழிவகைகள் குறித்து பேசவுள்ளோம்.

வனபரிபாலனத் திணைக்களம் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்த பின்னர், அது செல்லுபடியாவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் பாராளுமன்றத்தில் இதற்கு அனுமதி பெறவேண்டும். அவ்வாறன அனுமதி பெறப்பட்டதா என்பதில் சந்தேகம் நிலவுகின்றது. அப்படி அனுமதி பெறப்படாவிட்டால், வர்த்தமானி அறிவித்தல் வறிதாகிவிடும். இவ்வாறானதொரு நிலையில், காணிப்பிரச்சினை தொடர்பில் அம்பாறை மாவட்டத்தின் நிர்வாக இயந்திரம் ஒரு அலட்சியப் போக்கை கையாள்வது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இந்த அலட்சியப்போக்கு குறிக்கு நாங்கள் பல தடவைகள் நேரடியாக சுட்டிக்காட்டியிருக்கிறோம். அதற்கவர்கள் பலவாறான காரணங்களை காட்டி இழுத்தடிப்பு செய்கின்ற, தள்ளிப்போடுகின்ற விடயங்கள் தான் தொடர்ந்தும் நடந்துகொண்டிருக்கின்றன. இதனால்தான் இவர்கள் எல்லோரையும் ஒரே மேசைக்கு அழைத்து, காணிப்பிரச்சினை தொடர்பில் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து அவர்களிடமிருந்து நேரடி வாக்குமூலம் பெறவேண்டும்.

பிரச்சினைகள் தொடர்பில் அரச அதிகாரிகளுக்கு தனித்தனியாக கடிதம் எழுதுவதால் அவை தீர்க்கப்படுவதில் சிரத்தை காட்டப்படுவதில்லை. இவ்வாறான கடிதங்களில் பெரும்பாலானவை கிடப்பிலேயே போடப்படுகின்றன. இதனை கருத்திற்கொண்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான மாற்றுவழியை நாங்கள் கையாள வேண்டும். அதற்காகத்தான் நாங்கள் பாராளுமன்றத்தில் இவ்வாறானதொரு சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளோம். மக்களின் காணி தொடர்பான அனைத்து ஆதாரங்களையும் ஒன்றுதிரட்டி இங்கு சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் இப்பிரச்சினைக்கான தீர்வு என்னவென்பதை சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் கூறவேண்டும்.

காணிப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதில் நிர்வாக இயந்திரம் அலட்சியப் போக்குடன் செயற்படுமாக இருந்தால் அரசியல் ரீதியில் அழுத்தம் கொடுப்போம். மறுபுறம் சட்டத்தரணிகளை அமர்த்தி நீதிமன்றங்கள் ஊடாக தீர்வினை பெற்றுக்கொடுப்போம். நீதிமன்றம் செல்வதற்கு வழியிருந்தும், வசதியில்லாமல் அதிக மானவர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு சட்டத்தரணிகளை அமர்த்தி தீர்வினை பெற்றுக்கொடுப்போம். அதற்கு அடுத்தபடியாக இருப்பது உள்நாட்டு பொறிமுறை.

அதேநேரம், படையினர் கையகப்படுத்தியுள்ள காணிகளை விடுவிப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். சிலாவத்துறை முழு நகரத்தையும் கடற்படை முகாம் ஆக்கிரமித்து வைத்திருக்கிறது. இதனை அகற்றுவதற்காக 2 வருடங்களாக பேசிவருகின்றோம். பிரதமர் தலைமையில் இரு தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியும் அதற்கு இன்னும் தீர்வுகள் எட்டவில்லை. இவ்வாறான பிரச்சினைகள் புல்மோட்டை தொடக்கம் பொத்துவில் வரை நீண்டு கிடக்கின்றன. அண்மையில் புல்மோட்டையில் ஆக்கிரமிப்புக்குள்ளான சிறிய நிலப்பகுதியை மீட்டுக் கொடுத்துள்ளோம்.

இராணுவ முகாம் காரணமாக வெள்ளைமணல் பிரதேசத்தில் மீனவர்கள் கடலுக்கு செல்வதில் இருந்த தடை சிறிது காலம் நீக்கப்பட்டு மீண்டும் நடைமுறைக்கு வந்துள்ளது. இத்தடையை முழுமையாக நீக்கித்தருமாறு இன்னும் போராட்டம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. அதுபோல, ஆலிம்சேனை பிரச்சினை இன்னுமொரு தீராத பிரச்சினையாக இருந்துகொண்டிருக்கிறது. தற்போது அங்கு மரம்நடும் ஒரு படலம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனுடைய உள்நோக்கம் தெளிவாக விளங்குகின்றது. ஏதோவொரு வகையில் நடக்கவிருக்கின்ற நீதியை இல்லாமல் செய்வதற்கு இப்படியான நடவடிக்கைகளை முடுக்கிவிடுகின்ற பலர் நிர்வாக இயந்திரத்தில் இருந்துகொண்டிருக்கின்றனர்.

வில்பத்து விவகாரத்தில் நாங்கள் மிகவும் தெளிவானதொரு அறிக்கையை தயாரித்துள்ளோம். இவ்விடயத்தில் என்ன நடந்தது, என்ன நடக்கவேண்டும் என்பது தொடர்பில் நாங்கள் செயலமர்வொன்றை அடுத்த இரு வாரங்களுக்குள் நடாத்தவுள்ளோம். வில்பத்து சரணாலயத்தின் பாதுகாப்பு வலயத்துக்குள் அப்பால் இருக்கின்ற மக்கள் குடியிருப்புகளை இல்லாமல் செய்வதற்கு வேண்டுமென்று சதிமுயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

சில தவறுகள் நடந்ததுக்காக, திரிவுபடுத்திக் கூறப்பட்ட கதைகளுடன் வில்பத்து விவகாரத்தை பூதாகரமாக சித்தரித்துக்கொண்டிருக்கின்றனர். இதை முடிவுக்கு கொண்டு வருவதாக இருந்தால், அதைப்பற்றி விமர்சிப்பவர்களையும் பாதிக்கப்பட்டவர்களையும் ஒரு மேடையில் அமர்த்தி, அவர்களுக்கு முன்னால் இவ்விடயங்களின் உண்மைத்தன்மை பேச வேண்டும். அதை விடுத்து, தன்பக்க நியாயங்களை ஊடகவியலாளர்கள் மாநாட்டில் அறிவிப்பதன்மூலம் எதுவும் நடக்கப்போவதில்லை.

காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் முயற்சிகள் முறையாக ஒழுங்குபடுத்தப்படவேண்டும். இதற்காக நாங்கள் முதலில் நிர்வாக ரீதியாக தீர்வுகாணும் முயற்சிகளை ஏற்பாடு செய்துள்ளோம். அதில் முன்னேற்றம் இல்லையென்றால், அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து, தனியான செயலணியை அமைத்து தீர்வு காண்பதற்கான அடுத்தகட்ட முயற்சியை மேற்கொள்வோம்.

அண்மையில் பொத்தானை பிரச்சினைக்கு சென்றபோது தொல்பொருளியல் திணைக்களம் பெயர்ப்பலகை இட்டிருந்தது. இப்பிரச்சினைக்கு தீர்வுகாண எமது பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தொல்பொருளியல் திணைக்கள பணிப்பாளரிடம் அனுப்பினேன். அவருடன் பேசியபின்னர் ஒரு தொலைபேசி அழைப்பில் அப்பெயர்ப்பலகையை நீக்குமாறு உத்தரவிட்டார்.

இப்படி பல விடயங்கள் மேலிடத்துக்கு தெரியாமல் அப்பட்டமான இனவாதத்தின் அடிப்படையில் கீழ்மட்ட செயற்பாடுகளாக நடைபெறுகின்றன. இவ்விடயங்கள் தொடர்பில் மேலதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தவும் இதற்கான தடைகளை நீக்குவதற்காகவும் நாங்கள் எல்லோரும் ஒற்றுமையாக செயற்படும்போது அதற்கான தீர்வுகளை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

பொத்தானை பிரச்சினை உருவானதற்கு பிரதான காரணம் வட்டமடு பிரச்சினையாகும். வட்டமடு விவகாரம் என்பது திருக்கோவில் தமிழ் மக்கள் மற்றும் முஸ்லிம் மக்களிடையே உள்ள முக்கிய பிரச்சினையாகும். இப்பிரச்சினை தொடர்பில் நாங்கள் பல மட்டங்களில் பேசியிருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையோடு இருந்தும் பேசியிருக்கிறோம். அவர்களுக்கு இருக்கின்ற மேய்ச்சல்தரை, அதில் இருக்கும் நியாயப்பாடு, மாற்றுக்காணி என்பது தொடர்பிலும் பேசியிருக்கிறோம்.

வனபரிலான திணைக்களம் ஜனாதிபதியின் அமைச்சின் கீழ் வருவதால் வட்டமடு விவசாயிகளின் பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கு, ஜனாதிபதியிடம் நேரம் ஒதுக்கித் தருமாறு கேட்டிருக்கிறோம். வனபரிபாலன திணைக்களப் பணிப்பாளர் நேரில் வந்து பார்த்தால், அதிலிருக்கும் நியாயம் தெளிவாக விளங்கும். அங்கு காடுகள் இல்லை என்பதும், வருடக்கணக்கில் பயிர் செய்ததும் அவருக்கு தெளிவாகத் தென்படும்.

மேய்ச்சல்தரை சம்பந்தமான வர்த்தமானி அறிவித்தலும், அதன்பின்னர் வந்த சர்ச்சைகளும் 2014ஆம் ஆண்டிலிருந்து விவசாயம் செய்வதற்கு அனுமதித்த பின்னர் மறுக்கப்பட்ட நிலவரங்களும் தமிழ்பேசும் இரு சமூகங்களினால் பேசித் தீர்க்கமுடியாது என்றால் வட, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வே வரமுடியாது. இரு தலைமைகளும் நேர்மையாக இருந்து தீர்க்கக்கூடியது இந்த வட்டமடுப் பிரச்சினை என்பதில் நான் இன்னும் நம்பிக்கையுடன் இருக்கிறேன்.

தமிழ்பேசும் சமூகங்களில் மத்தியில் இருக்கின்ற பிரச்சினைக்கு வேறு சமூகங்கள் வந்து, குரங்கு அப்பம் பிரித்த கதை போன்று இடம்கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. இவை எல்லாவற்றையும் மனதிற்கொண்டு இப்பிரச்சினைகளுக்கான நிரந்தரத் தீர்வை காண்பதற்கு நேர்மையுடனும், பக்குவத்துடனும், நிதானத்துடன் நிர்வாக ரீதியாகவும், அரசியல் அதிகார ரீதியாகவும் இல்லாவிடின் சர்வதேச நியதிகள் ஊடாகவும் நாம் பங்காற்றுவோம்.



# கோடாரிக்காம்புகளுக்கு பதில் சொல்லும் கல்முனை மண்

## – பிரதியமைச்சர் ஹரீஸ்

கட்சிக்கு சவால்கள் வருகின்ற போதெல்லாம் கோடாரிக் காம்புகளுக்கு பதில் சொல்கின்ற முதல் மண்ணாக எப்பொழுதும் கல்முனைத் தொகுதி இருந் திருக்கின்றது. றிஷாத், அதாவுல்லா போன்று பசீர் சேகு தாவுத் என்று யார் வந்தாலும் அம்பாறை மாவட்டத்தில் கட்சியை பலவீனப்படுத்த முடியாது. இவர்களை நம்பி இம்மாவட்ட மக்கள் பின்னால் செல்லமாட்டார்கள் என விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான சட்டத்த ரணி எச்.எச்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் எச்.எம்.எம். ஹரீஸ் தலைமையில் மண்ணெல்லாம் மரத்தின் வேர் கள் என்ற மகுடத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் 31.03.2017இல் கல்முனையில் நடைபெற்றது. இந்நிகழ் வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை மறைந்த தலைவர் அஷ்ரஃப் பிரகடனப்படுத்திய காலம் முதல் கல்முனைத் தொகுதி அதன் கோட்டையாக காணப்படு கிறது. இக்கட்சியின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் மறைந்த தலைவர் கூறியதாவது, அபிவிருத்தி மற்றும் வேலைவாய்ப்பு என்பவற்றை தரமாட்டேன். ஆனால் முஸ்லிம்களின் உரிமையை பாதுகாக்க போராடுவோம். இதற்காக தமது உயிர்களை தியாகம் செய்வதற்கும் தயா ராகியவர்கள் இக்கட்சியில் இணைய வேண்டும் என்று கூறினார். அன்று முஸ்லிம் பிரதேசம் பாதுகாப்பற்று, உரிமைகளை இழந்து, வாடி வதங்கிய சூழலில் அவ ருடைய பேச்சின் உத்வேகம் இரவோடு இரவாக, ஒரே நாளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கோட்டையாக கல்முனை மாறியது. அன்று முதல் இன்றுவரை இக் கோட்டையை யாராலும் தகர்க்க முடியாமல் உள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு மாற்று அரசியல் செய்தவர்கள் பலபேர் இக்கட்சியை உடைத்து இம்மண் ணில் பலவீனப்படுத்த வேண்டுமென்று முற்பட்டபோ தெல்லாம் அவற்றை கல்முனைத் தொகுதி மக்கள் முறிய டித்தனர். குறிப்பாக ரவூப் ஹக்கீம் தலைமையேற்ற தினத்திலிருந்து இக்கட்சியினை முன்னெடுத்துச் செல் வதற்கு ஏற்பட்ட அத்தனை சவால்களையும் கல்முனை தொகுதியில் உள்ள கல்முனை, சாய்ந்தமருது, நற்பிட்டி முனை, இஸ்லாமபாத், மருதமுனை போன்ற பிரதேச மக்கள் முறியடித்து மிகப்பெரிய தைரியத்தை கொடுத்து பக்க பலமாக இருந்ததை நாங்கள் மறக்க முடியாது.

அண்மைக்காலத்தில் கட்சியின் சிலரை குறிப்பாக செயலாளர் நாயகம் ஹசன் அலியை வெளியேற்றிய போது கட்சியில் என்ன நடக்குகின்றது என்று முகநூல் ஊடாக பல்வேறு கருத்துக்களும் கட்சிக்கு எதிரான பிரசாரங்களும் உலாவிக் கொண்டிருந்தது. கட்சியை விட்டும் வெளியேற்றப்பட்டவர்களின் உண்மை முகம் அறிந்த மக்கள் மத்தியில் இம்முகநூல் புனைகதைப் பிரசாரம் ஒருபோதும் வெற்றியளிக்காது எனத் தெரிவித் தோம். அதனை கண்கூடாகவும் கண்ணுற்றோம்.

நிந்தவூரில் கூட்டமொன்றை வைத்து சில மோசமான பிரசாரங்கள் மேற்கொண்டதன் ஊடாக இந்தக் கட்சி யினை பலவீனப்படுத்த நினைத்தது வெறும் பகற்கன வாகும். அக்கூட்டத்தின் பின்னர் பாலமுனை, பொத்து வில் ஆகிய பிரதேசங்களில் கூட்டம் வைத்து தோல்வி கண்டனர். தற்போது சாய்ந்தமருது, மருதமுனை ஆகிய

பிரதேசங்களில் கூட்டம் வைப்பதற்கு இரண்டு மாதங்களாக முயற்சித்து முடியாமல்போனது. இது மக்கள் இவர்களை நம்பி போவதற்கு தயார் இல்லை என்ற செய்தியை சொல்லியிருப்பதாக அமைகிறது.

இக்கூட்டத்தில் திரண்டிருக்கும் மக்கள் வெள்ளம் இவர்களை நம்பி போவதற்கு தயார் இல்லை என்ற செய்தியை உறுதிப்படுத்தி விட்டார்கள். கட்சிக்கான சவால்கள் எமது மாவட்டத்தில் இல்லை என்பதை மிக ஆணித்தரமாக கூறுகின்றேன். றிஷாத், அதாவுல்லா போன்று பசீர் சேகுதாவுத் என்று யார் வந்தாலும் இம் மாவட்டத்தில் இக்கட்சியை பலவீனப்படுத்த முடியாது. அதற்கு எமது மாவட்ட மக்கள் பின்னால் செல்லமாட்டார்கள் என்ற விடயம் மீண்டுமொருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. கட்சிக்கு இவ்வாறான சவால்கள் வருகின்ற போதெல்லாம் கோடாரிக் காம்புக்கு பதில் சொல்கின்ற முதல் மண்ணாக எப்பொழுதும் இந்த கல்முனைத் தொகுதி இருந்திருக்கின்றது.

மறைந்த தலைவர் விட்டுச்சென்ற பணிகளை சிறப்பாக தற்போதைய தலைமை முன்னெடுத்து இக்கட்சியை பாதுகாத்து வருகின்றார். இத்தலைமைப் பதவியில் வேறு ஒருவர் இருந்திருந்தால் மர்ஹூம் அஸ்ரஃப் இம்மண்ணில் உருவாக்கிய இக்கட்சி இன்று இருப்பது போன்று ஒரு தேசிய முஸ்லிம் கட்சியாக இருந்திருக்க மாட்டாது. ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒவ்வொரு கட்சி, ஒவ்வொரு இயக்கம் என்று இந்நாட்டு முஸ்லிம்கள் பிளவுபட்டிருப்பார்கள். வெளிநாட்டு உளவாளிகளினால் இக்கட்சி துண்டு துண்டாகி இருக்கும். நாட்டின் ஆட்சியாளர்கள், தலைவர்கள் இக்கட்சியினை விலைபேசி அவர்களுடைய காலில் விழுந்து கிடக்கின்ற அடிமைக் கட்சியாக மாற்றியிருப்பார்கள். இவ்வாறான இச்சதி முயச்சிகளையெல்லாம் தாண்டி கடந்த 17 வருடங்களாக எமது தலைமை பல வழக்குகள், போராட்டங்கள், சதிமானங்கள் எல்லாவற்றையும் தாண்டி இம்மண்ணில் உருவாக்கப்பட்ட இக்கட்சியை இம்மக்களுக்காக பாதுகாத்து வருகின்றார். அதற்காகவது நாங்கள் நன்றிக் கடன் பட்டிருக்க வேண்டும். அதற்கு மேலாக முஸ்லிம் சமூகம் ஆபத்துக்களை எதிர்கொண்டபோதும் அவற்றுக்கு எதிராக இத்தலைமை செயற்பட்டது.

நாங்கள் மலையாக நம்பிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்து 3 மாத்திற்குள்ளாகவே இந்த பாராளுமன்ற தேர்தல் முறையை மாற்றி தொகுதிவாரி தேர்தல் முறையைக் கொண்டுவந்து சிறுபான்மைக் கட்சிகள் அத்தனையையும் இந்நாட்டில் இல்லாமல் செய்ய வேண்டும் என்று முற்பட்டபோது றிஷாத் பதியுதீன், மனோகணேசன், தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆகியோருக்கும் சேர்த்து தன்னந்தனியாக போராடி அவ்விடயத்தை தடுத்து நிறுத்தி, பழைய முறையில் பாராளுமன்ற தேர்தலை நடைபெற வைத்தவர் எமது தலைவர் மட்டும்தான் என்பதை இந்த மக்களும் இந்த போராளிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

தற்போது கிட்டத்தட்ட 40 வருடங்களுக்கு பின்பு புதிய அரசியலமைப்பை உருவாக்க அரசு முற்படுகின்றது. ஒரு நாட்டின் சமூகத்தினுடைய தலையெழுத்தை தலைவிதியாக மாற்றக்கூடிய ஒரு விடயம்தான் அரசியலமைப்பு என்னும் விடயம். இதில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருடைய அனுசரணை இல்லாமல் முஸ்லிம் சமூகம் சம்பந்தமாக தீர்மானம் எடுக்க முடியாது என்பதை அரசும் ஏனைய கட்சிகளும் உணர்ந்துள்ளன.

முஸ்லிம் சமூகத்தின் அனுசரணை இல்லாமல் வடகிழக்கை இணைக்க முடியாது என சுமந்திரன் எம்.பி. சொல்கிறார். அன்று வடக்கு, கிழக்கு மாகாண முஸ்லிம்களை ஒரு பொருட்டாக நினைக்காமல் இந்திய அரசாங்கம் 1987ஆம் ஆண்டு வட-கிழக்கு இணைப்பை செய்துவிட்டது. கேவலம் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றையேனும் செய்யமுடியாத பீதியான சூழ்நிலை அன்று காணப்பட்டது. ஆனால், இன்று முஸ்லிம்களுடைய ஏகபிரதிநிதியான முஸ்லிம் காங்கிரஸின் அனுமதி இல்லாமல் வடக்கு-கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை. இதனால் இணைப்பில்லாத ஒரு தீர்வைத்தான் இந்திய அரசு இலங்கை அரசிடம் பேசமுடியும் என்பதை இந்திய அரசு தமிழ் தலைமைகளிடம் தெளிவாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இந்திய அரசு இவ்வாறான நிலைப்பாட்டில் இருப்பதற்கு காரணம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் அதன் தலைமையும் ஆகும். இவர்கள் முன்னிலையில் முஸ் லிம்களுக்கு அநீதி செய்ய முற்பட்டால் இலங்கை அரசை மட்டுமல்ல இந்திய அரசையும் சர்வதேச அரங்கில் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தி, வாதிட்டு தீர்ப்பை பெறுகின்ற ஒரு தகுதி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு இருக்கின்றது என்பதை இந்திய அரசாங்கம் உணர்ந்திருக்கின்றது.


கல்முனைத் தொகுதியில் 8 அபிவிருத்திகளை மக்கள் பாவனைக்கு கையளித்துள்ளோம். இதனைவிட மேற்கு வட்டையில் மறைந்த தலைவருடைய கனவான ஒரு பெரும் நகரம் என்ற அபிவிருத்தி எம்மனைவரதும் உயிர் மூச்சாக இங்கிருக்கின்றது. அதனை பிரதமர் அறிவித்தபடி அரசாங்கம் வந்தவுடன் தலைவர் கல்முனை நகரத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றார். இதனை நீண்டகால நிரந்தரமான திட்டமாக உருவாக்க வேண்டும் என்று மொரட்டுவை பல்கலைக்கழக பேராசிரியர்கள், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியல் நிபுணர்கள் என்று பெரும் குழுவை நியமித்து அதற்கான திட்டவரைபை மேற்கொள்வதற்கு கிட்டத்தட்ட 200 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்து அதற்கான நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் தெரிவித்தார்.

## பிரச்சினைகள் வேண்டாம்

எத்தனையோ பிரிவுகள் தான் எங்களுக்குள்
இத்தனையும் எதற்கப்பா இவ்வுலகில்
எத்தனையோ கட்சிகள்தான் எங்களுக்குள்
இத்தனையும் எதற்கப்பா இவ்வுலகில்
எத்தனையோ குழுக்கள்தான் எங்களுக்குள்
இத்தனையும் எதற்கப்பா இவ்வுலகில்
சத்தியத்தின் வேதமாம் இஸ்லாத்தில்
சாகட்டும் இத்தனையும் நொடியில்தான்..!!



எம்.எச்.எம். அஷ்ரப்



Sri Lanka Muslim Congress
#51, Vauxhall Lane, Colombo 02, Sri Lanka
Tel: 0112436752 | Fax: 0112396699 | Email: saatchiyam@gmail.com | www.slmc.lk